# ஈழநாட்டுச் செஞ்சொற் கவி இன்பம்

* * *


தொகுப்பாசிரியர் :

நாவலியூர் வே. க. ப. நாதன்


* * *

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

அவர்களின்

அணிந்துரையுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
11 MAY 1961
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
11 MAY 1961
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ILA NATTU-C-CENCOR KAVI INPAM

# ஈழநாட்டுச் செஞ்சொற்
# கவி இன்பம்

ooo

தொகுப்பாசிரியர்:

**நவாலியூர் வே. க. ப. நாதன்**

Comp. by V. K. P. NATAN

ooo

வெளியீடு:

*நவீன வெளியீட்டாளர்*

*102, பெரியதெரு*

*யாழ்ப்பாணம்*

150295

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு:- 10-8-60

விலை ரூபா 2-50

உரிமை தொகுப்பாசிரியருக்கு.

பதிப்புரிமை பதிவுசெய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

'சீர்பூத்த' என்று தொடங்கி 'அன்னநடை' யிற் சென்று முற்றுகின்றது ஈழநாட்டுச் செஞ்சொற் கவி இன்பம்.

ஒருமுறை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் ஒரு வித்தியாசாலையை ஆரம்பஞ் செய்துவைக்கும்போது, ஒரு தோத்திரஞ் சொல்லும்படி தமது மாணுக்கராகிய காசிவாசி செந்திநாதையர் அவர்களுக்குப் பணித்தார்கள். ஐயர் அவர்கள் தாங்களே இந்த மங்களகரமான காரியத்தைச் செய்துவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். உடனே நாவலர் அவர்கள் கரங்களைச் சிரமேற் குவித்து, 'சீர்பூத்த கருவிநூலுணர்ச்சி தேங்க' என்ற தோத்திரத்தை விநாயகர்மீது சொன்னார்கள். தோத்திரம் அப்பொழுதுதானியற்றியது. அது ஒரு சமயபாடத்திட்டமாயும் நாவலர் அவர்களின் வேலைத் திட்டமாயும் படிக்கிரமத்திலமைந்தது.

இனி 'அன்னநடை'யை நோக்குவோம். நாவலர் அவர்களுக்குச் செய்யுணடை வருமாயினும், அதில் அவர்களுக்குக் கருத்தூன்றவில்லை. வசனநடைக்கு நாவலர் அவர்கள் தந்தை ஆயினார்கள். கற்றவர்களும் மற்றவர்களும் எக்காலத்திலும் ஏற்றுப்படித்தற்குரிய செந்தமிழ் வசனநடையை அவர்கள் உதவினார்கள். செய்யுணடை விரவாமலும் உவம உருவக அணிகள் மூடாமலும் மணிப்பிரவாளம் ஆகாமலும் வசன கன்னிகையை அவர்கள் வளர்த்தார்கள். இதனைக் கண்ணுற்ருர் நமது காலத்தவரான நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவனார். அவருக்கு வாயூறியது. இதயஞ் சுரந்தது. அவர் நாவிலிருந்து 'அன்னநடை' யென்ற பாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தது. வசனநடையை வர்ணிக்க எழுந்த அந்த 'அன்னநடை', செய்யுணடை இன்னதென்பதையும் நடந்து காட்டியிருக்கின்றது. 'வசனநடை கைவந்த வல்லாளர்' என்று நாவலர் அவர்களைப் புகழ்ந்த சூரிய நாராயண சாஸ்திரிகள் இன்று இருந்திருப்பார்களாயின், நாவலர் அவர்களின் வசனநடையை வர்ணிக்கச் செய்யுணடையான 'அன்னநடை'யேதான் வேண்டுமென்று கைகொட்டிச் சிரக்கம்பஞ் செய்திருப்பார்கள்.

'அன்னநடை' என்ற கவிதை, கவிதை உலகில் அமரத்துவம் வாய்ந்தது. இந்த ஈழநாட்டில் தமிழ் வழங்கும்வரை 'அன்னநடை' நடைபயின்றுகொண்டேயிருக்கும்.

இத்தொகுப்பில் ஆதியும் அந்தமும் இங்ஙனமாயமைந்தது ஒரு தனிச்சிறப்பு.

நவாலியூர் சோமசுந்தரப் புலவர், அங்கே தேசிக விநாயகம்பிள்ளைபோலே இங்கே நமது காலத்திற் புலமை கனிந்து கவிதைமழை சொரிந்து விளங்கினர். புலவருடைய உயிர் துடிக்கின்ற பாடல்கள் பல இத்தொகுப்பை அலங்கரிக்கின்றன.

சின்னத்தம்பிப்புலவர் ஈழத்துக்கவிதையுலகில் ஆதி கவி. கருமயிலாட - கரடிபுல்வாய் கொடுகிட - சோவென மாரி பொழிந்ததுவே - என்ற மழைப்பாட்டும் பள்ளுப் பாடல்களும் சின்னத்தம்பிப் புலவரின் புலமையின் ஊற்றுக்கள்; என்றுஞ் சுரந்துகொண்டேயிருப்பவைகள். புலவரியற்றிய மறைசையந்தாதி அந்தாதி உலகின் சிகரம்.

ஈழத்துக் கவிதை யுலகில் சின்னத்தம்பிப் புலவர் காலத்தால் ஆதி; சோமசுந்தரப் புலவர் காலத்தால் அந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தம்பிப் புலவருக்குப்பின் இடைக்காலத்திற் கவிதை யுலகில் இருகண்கள் இருவர் கவிராயர்கள். ஒருவர் முத்துக்குமார கவிராயர்; மற்றையவர் சேனாதிராய முதலியார். முன்னையவர் சி. வை. தாமோதரம் பிள்ளையின் ஆசிரியர்; பின்னையவர் நாவலர் அவர்களின் ஆசிரியர். 'முடிவிலாதுறை சுன்னாகத்தான் வழி' என்ற கவிதையும், 'திருவாரும் நல்லைநகர்' என்ற கவிதையும் முறையே இருவர் கவிராயர்களின் அழியாப்புகழுடம்புகள்.

சுவாமி விபுலானந்தர் அவர்கள் ஈழத்துக் கவிதை மாதாவின் மார்பை அணிசெய்கின்றதொரு மாணிக்க மணி. சுவாமிகளின் கவிதைகளும் கவிராயர்களின் கவிதைகளும் உள்ளத்தைக் கொள்ளைசெய்து இத் தொகுப்பை ஒளிமயமாக்குகின்றன.

அரசகேசரி முதலிய மகாவித்துவான்களின் பாடல்கள், பொருட்செறிவு சொற்செறிவுகளினாற் கற்றோரைக் களிக்கச் செய்பவைகள்.

பலமதத்தவர்களின் பாடல்களும் இதிற் காட்சியளிக்கின்றன.

தனித்தனி எடுத்து விரிப்பின் பெருகும். அதனை இத்தொகுப்பைப் போதிக்கும் பாக்கியம் படைத்த நல்லாசிரியர்களுக்கு விட்டுவிடுவோம். ஒவ்வொரு கவிதையும் எழுந்த சந்தர்ப்பத்தைப் புலவர்களின் சரிதைகள் மூலம் அறிந்து, அச்சந்தர்ப்பத்திற் கவிதையைப் பொழிந்து, இரசிகர் செவியில் நுழையவிடும்போது, கவிதைகள் தேன்சொட்டும் என்பதை நல்லாசிரியர்கள் உணர்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகுப்பைப் படிக்கும்போது, நாம் முன்பு கண்டு கேட்டிராத எத்தனையோ அருமந்த பாடல்களைக் காணுகின்றோம்; செவிகள் இனிக்கின்றன. அதே சமயத்தில் எத்தனை கவிதைகள் ஏடு எழுத்தாணிகளுக்கு அகப்படாமற் காற்றோடு காற்றாய்க் கலந்து மறைந்திருக்குமோ என்ற ஏக்கமும் எழுகின்றது.

அண்மையில் நம்மைப் பிரிந்தவர்கள் மகாலிங்கசிவம். அவர்கள் உள்ளமும் செவியும் ஒருங்கு ஊற ஊற எத்தனை கவிதைகளை எத்தனை சந்தர்ப்பத்தில் எத்தனை சபைகளில் எழுந்து பொழிந்தார்கள். அவைகளெல்லாம் எங்கே!

இந்தச் செஞ்சொற் கவிஇன்பம் ஈழநாட்டுக் கவிதை உலகின் ஒரு திறவுகோல். இது, இத்தொகுப்பிற் குறிப்பிட்ட புலவர்களின் ஏனைய பாடல்களையும், எழுத்துக்கு அகப்படாமல் எழுந்து மறைந்த பாடல்களையுந் தேடிச் சுவைப்பதற்கு ஒரு அருமந்த உபகாரம். இந்த உபகாரத்தைச் செய்த தொகுப்பாளரின் நன்றி மறக்கற்பாலதன்று.

ஈழநாட்டுச் செஞ்சொற் கவிஇன்பம் என்ற இத்தொகுப்பு, ஈழத்தமிழாசிரியர்களிடத்தினின்றும் பெருகி மாணவ மாணவிகளின் உள்ளத் தடத்தை நிறைவு செய்வதாக. அன்றி, கற்றோராகிய முதியோர்க்கெல்லாம் முதுமையை மறக்கச் செய்து, இளமையைமீட்டு நல்குவதாக.

சி. கணபதிப்பிள்ளை

கலாசாலை வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சொல்லாலே உருப்பெற்றுப் பொருளாலே மணப்பது கவிதை. எனவே அது ''வரையப்பட்ட ஏட்டைப் பட்டாலே சூழ்ந்தாலும் பரிமளிக்கும்; தொட்டாலும் கைமணக்கும்; சொன்னாலும் வாய்மணக்கும்; துய்ய சேற்றில் நட்டாலும் தமிழ்ப்பயிராய் வளர்ந்திடும்'' என்பர் சான்றோர்.

இத்தகைய கவிதைகள் – ஈழநாட்டின் அரும் பெருங் கவிஞர்கள் கரைபுரண்டோடப் பொழிந்த கவிதைகள் –

" புவியினுக் கணியாய் ஆன்ற
பொருள்தந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகள் தாங்கி
ஐந்திணை நெறியளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென்
றொழுக்கமுந் தழுவிய "

சான்றோர் கவிதைகள் — இன்று பழங்கதையாய்க் கனவாய்ப் பொய்யாய் மறைந்து வருகின்றன. தேடுவாருமிலர், பாடுவாருமிலர் என்ற நிலையும் வந்துவிட்டது என்று கூடச்சொல்லிவிடலாம்.

ஆகவே, அவற்றுள் ஏதோ ஒரு சிலவற்றையாவது பாதுகாப்போம் என்ற எண்ணத்துடன், ''ஈழநாட்டுச் செஞ்சொற்கவி இன்பம்'' என்னும் இத்தொகுப்பு நூலை வெளியிட முன்வந்துள்ளேன்.

இச்செஞ்சொற் கவி இன்பத்தை ஈழத்தமிழுலகம் ஆதரிக்குமானல், ஈழநாட்டுப் புலவர்களின் கிடைத்தற்கரிய கவிதை வளம் அனைத்தையும் வெளியிடும் எனது நீண்ட நாளைய பேரவா நிறைவேறும் என்பது திண்ணம்.

**வே. க. ப. நாதன்**
தொகுப்பாசிரியர்

நவாலி, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| வணக்கம் | .... .... | 1 |
| தமிழ்த்தாய் வாழ்த்து | .... .... | 3 |
| திருப்பள்ளியெழுச்சி | .... .... | 6 |
| ஈழத்திருநாடு | .... .... | 9 |
| நீதிப்பாட்டு | .... .... | 15 |
| இரகுவம்சம் | .... .... | 18 |
| திருவாக்குப்புராணம் | .... .... | 29 |
| திருச்செல்வர் காவியம் | .... .... | 33 |
| இராமோதந்தம் | .... .... | 40 |
| பிள்ளைத்தமிழ் | .... .... | 42 |
| கிள்ளைவிடு தூது | .... .... | 44 |
| மேகதூதக்காரிகை | .... .... | 48 |
| தத்தைவிடுதூது | .... .... | 50 |
| கோவைப்பாட்டு | .... .... | 52 |
| அந்தாதிப்பாட்டு | .... .... | 55 |
| சிலேடைப்பாட்டு | .... .... | 59 |
| பள்ளுப்பாட்டு | .... .... | 62 |
| கலித்துறைப்பாட்டு | .... .... | 64 |
| சீட்டுக்கவி | .... .... | 67 |
| இதுசாலவியப்புடைத்தே | .... .... | 72 |
| குவனிமாலை | .... .... | 75 |
| தில்லிமாநகர்த் திருக்கோயில் | .... | 77 |
| நீரரமகளிர் நிறையிசை | .... .... | 81 |
| சுத்தவந்தி | .... .... | 85 |
| தனிப்பாடல் | .... .... | 90 |
| தெய்வப்புகழ்மாலை | .... .... | 96 |
| குறத்திபாட்டு | .... .... | 101 |
| மழைப்பாட்டு | .... .... | 103 |
| கப்பற்பாட்டு | .... .... | 104 |
| கத்தரிவெருளி | .... .... | 105 |
| ஆறுமுகநாவலர் | .... .... | 106 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணக்கம்

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமௌலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் ருேதும்
மதம்பூத்த விநாயகன்ருள் வணங்கி வாழ்வாம் !

— ஆறுமுக நாவலர்

தொடக்கமுடி வில்லாத தூயன்றனைத்
துட்டருளத் தமராத மட்டில்லானைக்
கடக்கரிய முதுபவத்தைக் கடப்பதற்குக்
கருதியே திருவிரக்கங் காட்டினானை
அடக்கவொடுக் கந்தாழ்ச்சி பொறுமைமேவி
அம்பரத்தை விட்டிந்த வவனிமீது
மடக்கொடிபால் வந்துதித்த மகிமையானை
வணங்காத நாளெல்லாம் வாழா நாளே !

— தம்பிமுத்துப் புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துலகுந் திருவாக்கா லளித்தகில சராசரமு
மருட்சித் தத்தே
நினைத்துளவப் படியமைத்துக் காத்தளிக்குந் தனிமுதலா
நிகரி லாதான்
தனைத்துதிசெய் தெண்ணுகின்ற தகுங்கருமஞ் சித்திபெறத்
தருக வென்றே
இனைத்தெனவொப் போதரிய விணைமலர்த்தாள் சிரத்தேந்தி
யிறைஞ்சு வாமே!

— கனகசபைப் புலவர்

பூமேவு குபிரெனு மிருட்படல மறவிறை
பொலிந்திட விடுக்கவந்த
புகழ்பரவு நபிமார் தமரசாகி மக்கமாம்
பொன்னக ருதித்தகுரிசில்
மாமேவு மகுமூது நபிபுதல்வி யுலகத்து
மங்கைய ரியார்க்குமரசி
மதிவதன பாத்திமா வெனுநங்கை புதல்வருண்
மற்றுமுன் னையராகிய
தாமேவு மேந்தலசன் மரபில்வரு மரியவபு
சாலிகினருட் டனையராய்த்
தாவுதவ பாத்திமா வயினுறைந் துலகெலாந்
தகைமையொடு வாழ்த்தெடுப்ப
பூமேவு தண்டலை கொள்ஜயிலானி வந்தவ
புரந்தருள்க வேழையெனையே
புவிமாயை மருவாது தவமீது விளையாடு
போதரா முகியிதீனே.

— அசனுலெப்பைப் புலவர்

# 2. தமிழ்த்தாய் வாழ்த்து

*தரவு*

அருமருவு மொருகுடிலை யருள்நோக்கக் கருவாக்கும்
உருமருவு நாதவிந்தி னுறுமியற்கை யொலித்திரளை

வீங்குநீர் வியன்கங்கை வேணியணி வேதியனும்
பூங்கடம்பு புரளகலப் புண்ணியனு முருவாக்கித்

தம்பதங்கள் விதிமுறையே நெஞ்சமுழுந்தித் தவங்கிடந்த
கும்பமுனி கரங்கொடுக்க வவன்மடியிற் குருந்தாகி

மூவேந்தர் தாலாட்ட முச்சங்கத் தேகிடந்து
பாவேந்தர் செந்நாவில் நடைபழகி மொழிபயின்று

மங்குலுறை வேங்கடமும் வான்குமரிப் பேராறுந்
தங்குமிடைத் தமிழுலகம் அரசுபுரி தமிழ்த்தாயே!

*தாழிசை*

மன்னுமருட் டன்மையிலும் வளமையிலும் புதுமையிலும்
உன்னைநிக ரானமொழி யுலகினிலே யொன்றுண்டோ

பாற்கடலின் விடங்கொடுத்த பண்ணவர்கள் நனிநாண
நூற்கடலின் சுவையமுத மரன்செவியில் நுழைத்தனையே

உருக்காணப் பேரிருளி லொருவனுக்கா யொருத்தியிடை
இருக்காலுங் காணுனை யிருக்காலு மேவினையே

பெருமுதலை சிறுமதலை தரவருளிப் பெற்றோர்கள்
பொருமுதலுங் கருமுதலும் போக்கமொழி புகன்றனையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அராகம்*

நிறைமதி பொழிதரு நிலவெனு மெழிலினை
மறைபிணி கதவுடன் வழிவிடு மொழியினை
இருமையு முதவிடு மிசைதரு மதியினை
வருமறி வினரக மகிழ்வுறு துதியினை
வரமிகு புலவர்கள் மனநிறை குறியினை
மதுரையி லரசியன் மருவிய நெறியினை

*அம்போதரங்கம்*

பொய்யுரைப்போர் புன்னுவிற் பொருந்திய தீட்டோட்டுதற்கோ
செய்யதமிழ்ப் பெருமாட்டி தீயிடைநீ குளித்ததுவே
வேற்றுமொழி தீண்டுதலான் மேனிகழீஇக் கொள்வதற்கோ
ஆற்றெதிரே யேட்டின்மிசை யம்மாநீ நீந்தியதே
எஞ்சலிலா வுயிர்மருந்து யானென்ப துணர்த்துதற்கோ
நஞ்சமுத மாக்கியெங்கள் நாயகிநீ நாட்டியதே.

நாவினிலே நின்றோய் நீ
நல்லமொழி பயின்றோய் நீ
பூவினிலே யமர்ந்தோய் நீ
பூவுலகம் புரந்தோய் நீ

உரையுநீ பொருளு நீ
உள்ளுநீ புறமு நீ
விரையுநீ மலரு நீ
வித்துநீ முளையு நீ

*தனிச்சொல்*

எனவாங்கு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிதகம்

யாழினுங் குழலினும் பாலினுந் தேனினுங்
காணினுங் கேட்பினுங் கருதினு மினிக்கும்
அருந்தமிழ்ப் பாவாய்! ஆருயிர் மருந்தே!
இருந்தவர்க் கொளியே! இசைமுரல் கிளியே!
நந்தா விளக்கே! சிந்தா மணியே!
பூமிசைப் பொலிந்தநின் தோமறு சீர்த்தி
புந்தியிற் கொண்டு சந்ததம் போற்றுவென்
தீதறு முன்புகழ் மாலை
மேதினி யெங்கும் விளங்குதற் பொருட்டே!

— நாமகள் புகழ்மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. தமிழ்த்தாய்
# திருப்பள்ளி யெழுச்சி

பன்னிய புறமொழி விழைவெனுங் கங்குல்
பைப்பய விடிந்தது படரொளி பரப்பி
மன்னிய நின்புக ழாயிரஞ் சுடர்க்கை
வானவன் நாவெனு மலைமுக டுதித்தான்
துன்னிய புறமொழித் தாரகைச் சூழல்
சுடரொளி யவிந்தன குவிந்தனர் தொண்டர்
என்னித யத்துறை முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. (1)

சந்தனச் சிலம்பினி லிசைக்குயில் கூவுந்
தகுமருட் பாவினச் சங்கொலி மேவுஞ்
செந்தமிழ்த் திருப்புகழ்ச் சேவல்கள் யாவுஞ்
சிறைபுடை யடித்தெதிர் சிலம்பிடக் கூவும்
அந்தமில் கலைக்குரு கரற்றிய வொலியும்
அடியவர் சயசய வமலையு மலியும்
எந்தமை யாண்டருள் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. (2)

அன்புடை யடியவர் அகப்புனற் றடந்தோ
றறிவெனுந் தாமரை முகைநெகிழ்ந் தவிழ்ந்த
வன்புடைப் பேதைமை மடுவினிற் பூத்த
வஞ்சனை பொய்ம்முதன் மலர்வகை குவிந்த
இன்புடை யறம்பொரு ளின்பமும் வீடும்
எய்துதல் விருப்பினில் யாவரு மெழுந்தார்
என்புயிர் பெறவருள் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தலர் பூங்குழற் புயல்புறந் தவழும்
புதுநில வுமிழ்மதி முகமலர் பொழியு
முத்தன விளநகை முறுவலின் கருணை
முந்துறக் கண்டடி முளரிகள் தொழுவான்
பத்திமை யடியவர் கோயிலின் வாயில்
பாடின ராடினர் பரவினர் படர்ந்தார்
இத்தரை மதித்திடு முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே (4)

மீட்டிய யாழினர் குழலின ரொருபால்
வெண்டுகிற் பட்டினர் விரையின ரொருபால்
கூட்டிய சுண்ணத்தர் வண்ணச்செஞ் சாந்தர்
குளிர்புனல் மஞ்சனக் குடத்தின ரொருபால்
தீட்டிய செழுந்தமிழ் மாலைய ரொருபால்
திருவடி வணங்குபு திறையொடு புகுந்தார்
ஏட்டினி லெதிர்தவழ் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. (5)

அரன்றனைக் கூடலி லழைத்தமை பாடி
அருமறைப் பூட்டினை யவிழ்த்தமை பாடிச்
சிரந்தனை யறுத்துயிர் கொடுத்தமை பாடித்
தீயின்மே லாடிய திறமையும் பாடி
வரந்தரு வாரமுங் கோவையும் பாடி
வாசகம் பாடிநல் வாய்மொழி பாடி
இரந்தனர் தொண்டர்கள் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. (6)

முப்புர மெரிசெய்த முதுபரம் பொருளும்
முருகனு மொருகுறு முனிவனும் பிறரும்
செப்பிய செழுந்தமிழ்ப் பாண்டிநன் னாட்டில்
திருவொடும் வளர்த்தருள் செய்தவப் பாவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பிடி புதுமலர் கொண்டுன தடியார்
காமரு சேவடி கைதொழ வடைந்தார்
இப்படி துதித்திடு முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. (7)

தேனெனப் பாலெனச் செழுங்கரும் பூறுந்
தீஞ்சுவைச் சாறெனத் தெள்ளமு தெனவே
மானன நோக்கிநின் வாய்மொழி கேட்டு
மகிழுபு புறமொழி மாந்தரும் வந்தார்
பூநனை புனைகுழற் பொன்னனை யாளே
பொற்சிலம் பலம்பிடு பூவடிப் பூவாய்
ஈனனை யும்மருள் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. (8)

தேவர்கள் பாற்கடற் றீவிடங் கொடுத்தார்
சிவனுக்கு நூற்கடற் செவியமு தளித்தாய்
காவியங் கயல்விழிக் கலைப்பெரு மாட்டி
காசினிக் கேகனி கற்பகக் கனியே
ஆவியை யுருக்கிடு மருமொழிப் பாவாய்
அகத்தியன் மடிமிசை யமர்ந்திடும் பூவாய்
ஏவிய புரிகுவம் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே (9)

ஆடினர் பாடின ரார்த்தனர் செறிந்தார்
அம்மையுன் வாய்மொழி யருமையை யறிந்தார்
தேடின ரோடினர் சிறுமையை விடுத்தார்
தெருவெங்குஞ் செந்தமிழ்த் தோத்திர மெடுத்தார்
வாடின ருன்திருக் கோலத்தைக் காண
வந்தனர் செந்துவர் வாய்ப்பெரு மாட்டி
ஏடியல் வெண்மலர் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே (10)

— நாமகள் புகழ்மாலை

[ நாமகள் புகழ்மாலை — இயற்றியவர் நவாலியூர்
க. சோமசுந்தரப் புலவர் ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. ஈழத் திருநாடு

காப்பிட் டலர்வா யளியினங்கள்
களிகொண் டசோகின் மலர்பாய
மீப்பட் டழல்மேற் பாய்ந்ததென
வெடிக்கும் பலாவின் சுளைத்தேனும்
பூப்பிட் டொழுகும் பசுந்தேனும்
பொழிந்து பதைக்கும் வானரங்கள்
கூப்பிட் டயலார்க் குரைப்பவர்போற்
குயிலும் மயிலும் குரல்காட்டும். (1)

காட்டுங் கதலிக் கொழுங்கனியுங்
கமுகின் கனியு மாங்கனியுங்
கோட்டுப் பலவின் சுளைக்கனியுங்
கூடிக் கறியின் கொடிவீழ்ந்து
நாட்டுங் கரும்பின் பணையொடித்து
நறுநீர் வாவிதொ றுஞ்சிதறித்
தோட்டின் கமல மலர்ப்பொகுட்டுத்
துயில்வண் டெழுப்புந் திருநாடு. (2)

நாடுங் குழக்கன் றினைநினைந்து
நடந்து குறுந்தாட் கருமேதி
யோடுங் கழியிற் சுரந்துமுலை
யொழுகும் பாலிற் புதுவெள்ளம்
மேடுங் குவளைக் குழியினமும்
விரவிப் பாயக் கயல்குதிகொண்
டாடு முயரங் கண்டுவெருண்
டகலு முகிலும் வானெல்லாம் (3)

— தக்ஷிண கைலாச புராணம்

[தக்ஷிண கைலாச புராணம் — இயற்றியவர் பண்டிதராசர். இவர் சேகராசசேகர மன்னன் காலத்திருந்தவர். இவருடைய ஊர் திருக்கோணமலை. தக்ஷிண கைலாசமென்றது தேவாரந் திருப்புகழ்பெற்ற திருக்கோணமலையையே. இத்தலத்தின் அதி அற்புதங்களைச் சொல்வது இப்புராணமாகும். ஏழு சருக்கங்களையுடையதாய் விருத்தப்பாவால் அந்தாதித் தொடையமைய இயற்றப்பட்டது.]

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்று மாதுளை மாணிக்க வித்தைப்
பொதிந்த சோதிக் கனிபல தூக்குந்
தாற்று வாழை யிலைசென்று மாகத்
தரணி மேலால வட்ட மசைக்குந்
தோற்று மாசினி முட்புறச் செப்பழுஞ்
சுட்ட பொன்னின் சுளைபல தூற்று
மேற்று வாளை கமுகிற் குதித்திடு
மீழ மண்டல நாடெங்க ணுடே! (1)

மஞ்ச ளாவிய மாடங்க டோறும்
மயில்கள் போன்மட வார்கணஞ் சூழ
மஞ்ச ரோருகப் பள்ளியில் வான்சிறை
யன்ன வன்னக் குழாம்விளை யாடுந்
துஞ்சு மேதி சுருக்களைச் சீறச்
சுருக்க ளோடிப் பலாக்கனி கீறி
யிஞ்சி வேலியின் மஞ்சலிற் போய்விழு
மீழ மண்டல நாடெங்க ணுடே (2)

பைப்ப ணிப்பகு வாய்ப்பட்ட திங்களிற்
பாயு மோதக் கடற்கரை தோறு
மிப்பி வாயிலின் முத்த மிலங்கிய
வீழ மண்டல நாடெங்க ணுடே (3)

பண்ணிற் றேயப் பொருண்முடிப் புக்கட்டிப்
பாடும் பாவலர்க் கீந்திட வென்றே
யெண்ணிப் பொன்முடிப் புக்கட்டி வைத்திடு
மீழமண்டல நாடெங்க ணுடே (4)

கற்ற நூலுணர் பண்டிதன் மார்பஞ்ச
காவி யஞ்சட் கலைக்கட றேய்ந்து
மெற்றை நாளுங்கல் வித்திறம் பார்த்திடு
மீழ மண்டல நாடெங்க ணுடே (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவ லம்புரிச் செங்கதிர் மாவலி
கங்கை யாறு பெருகிக் கரையி
னிரும ருங்கினு முத்தங் கொழித்திடு
மீழ மண்டல நாடெங்க ளுடே. (6)

— பருளை விநாயகர் பள்ளு

[ பருளை விநாயகர் பள்ளு — இயற்றியவர் யாழ்ப்பாணத்து நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் ]

காண்டகு மிடங் கடோறுங் கலிகைவா யவிழ்ந் தவிழ்ந்து
பூண்டதேன் றிவலை சிந்திப் பொன்னிறப் பராகந் தெள்ளும்
நீண்டவான் கற்பகத்தி னீழலஞ் சூழன் மேவி
ஈண்டரு மிலங் காத்தீப மீழமா யிசைந்த தன்றே.

— திருக்கரசைப் புராணம்

[ திருக்கரசைப் புராணம் — இந்தப்புராணம் திருக்கோணமலைக்குச் சமீபமாயுள்ள மாவலிகங்கைக் கரையிலே "அகத்தியத்தாபனம்" என்று வழங்கப்படுகின்ற கரசையம்பதியில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கப் பெருமானுடைய மகத்துவங்களை விரித்துக்கூறும். "இப்புராணஞ் செய்தவர் யாவரேன்பது புலப்படவில்லை" என்று அதன் முதற்பதிப்பிற் கூறப்பட்டுள்ளது. இதற்கு ஒரு பொழிப்புரை குமாரசுவாமிப் புலவர் அவர்களால் எழுதப்பட்டுள்ளது.]

நஞ்சு போல்விழி மங்கையர் கூடி
நயங்கள் பேசி யிசைபாடி யாடி
பஞ்சு போலடி மெல்ல நடந்து
பணைத்த கொங்கை கனத்திடை தொய்ய
விஞ்சு கோதை விரித்து நறும்புனல்
மீது லாவி விளையாடக் கண்டு
மஞ்சு மஞ்சி மலையி லொளிக்கின்ற
மாவலி கங்கை நாடெங்கள் நாடே (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணிச் சங்கரர் தொண்டர்க ளென்று
வீடு தோறு மிரப்பவர்க் கெல்லாம்
மாணிக்க மள்ளிப் பிச்சை கொடுத்திடும்
மாவலி கங்கை நாடெங்கள் நாடே (2)

— கதிரைமலைப்பள்ளு

[இது இலங்கையில் தோன்றிய பள்ளுப் பிரபந்தங்களுள் முதலாவது என்று கூறப்படுகின்றது. ஆக்கியவர் யாவர் என்பதை அறியமுடியவில்லை]

அம்பன் கங்கையு மாவலி கங்கையு
மணையு மினிப்பையிலே
ஆறு கடந்திட நாடு குரங்கின
மடர்மர மிசையேறித்
தம்பின் காலொடு பின்கால் தழுவித்
தலைவழி தலைதழுவித்
தகதக வூசல் தவழ்ந்து கிளர்ச்சி
தலைப்பட மறுகரைமேற்
கொம்பின் படர்முடி வான மளாவு
கொழுங்குழை யுறுதருவைக்
கூடிட விறுதியி லாடு குரங்கு
குலைப்படை யாதனவாய்க்
கம்பன் கவியி னியற்கை யெழுச்சிக்
கதியென நிதநிதமும்
காட்சி தரும்வகை மாட்சி நிரம்பிய
காரிகை நம்மயிலே ! (1)

கயல்விழி மாதரு மள்ளரு முன்பு
கதிப்ப விளைத்தமணிக்
கதிருறு செந்நெல் தனக்கு நிறைத்தபின்
களியொடு விற்றலிலே
முயல்பவள் பாரதநாடு கொளும்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு செலுத்திடுவாள்
முறைநனி மாறி மரங்க ளடர்ந்து
விலங்கு முனைத்துறுசீர்
வயல்க ளழிந்துபல் வாவிகள் தூர்ந்திட
மாழ்கி மனங்கரைவாள்
வந்தது செம்மை யெழுந்தனர் மைந்தர்
வளங்கள் பொலிந்துறவே
மயலுறு காடுகள் நெல்வய லாமென
மாறுதல் கண்டிடுவேன்
வருமுயர் பழநிலை நன்றினி யென்றே
மகிழ்பவள் எம்மன்னை. (2)

விண்ணை யளந்தொளிர் கொடுமுடி யெங்கும்
வெண்முகில் பள்ளிகொளா
வீறுகொ ளணிவரை நாடுகள் காடுகள்
மிகுபள் ளங்களெனு
எண்ணில கொண்டங் கெண்ணு வகைமழை
யீர முறப்பொழிமாண்
இன்னில மீதுறு தேயிலை யாதிய
வேறி வளர்ந்திடவே
கண்ணென மன்னர் கதிப்ப விருந்த
கணக்கு மலிந்திடவே
காமுறு தால்த் மாளிகை கவுதமர்
கதிரொளி காட்டிடவே
நண்ணினர் தம்மை வியப்பி னிருத்திடு
நலமலி கண்டியெனும்
நன்னகர் தன்னுறு பொன்னக ரென்று
நயந்து புனைந்திடுவாள் (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ணிய கன்மலை நன்கு குடைந்து
திருத்தளி யைந்தழகின்
செவ்வி தெரிப்பச் செதுக்கி முகட்டுறு
சீரிய வோவியமும்
கண்களி கொண்டிட வட்டிகை செய்தொளிர்
கவுதமர் திருவுருவம்
கவினுற நாற்பா னேழடி கொண்டது
கண்ண னிராமனெனு
மண்புக ழேறு பலப்பல சிலையம்
மலையுறு சிலையானே
மாணுற நன்று வடித்திது போலெழில்
மன்னிய தில்லையெனு
விண்ணவர் மெச்சிட மன்னவ னொருவன்
விறலொடு செய்தவினை
மேவிடு தம்பளை யூர்கொடு நின்றிடு
மெல்லிய லெம்மவளே (4)

— மணித் தாய்நாடு

[ மணித் தாய்நாடு — இயற்றியவர் முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி. இதற்கு அரசினரால் பரிசு வழங்கப்பட்டது.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. நீதிப்பாட்டு

ஈதலை யஞ்சா ரிழவஞ்சா ரெவ்வழியும்
போதலை யஞ்சார் பொதுவஞ்சார் — சாதல்
வரினுஞ் சுகமாவர் வண்புலவர்க் கொப்போ
பொருளுடையா ரின்பிற் புறம். (1)

மக்கட்குத் தந்தை வருந்திவைக்கு மாநிதியம்
விச்சைமற் றல்லாது வேறில்லை — துய்க்கநிதி
கோடியென வைத்தார் குலமக்க டம்முயிரைக்
கோடியென வைத்தாரோர் கூற்று. (2)

கள்ளொடு காமங் கடுங்கோபஞ் செய்தகுடி
தள்ளரிய துன்பந் தனில்வீழும் — பிள்ளைகளைப்
பெற்றுவ தென்ன பெரும்பழக்க மன்னவர்க்குக்
கற்பிப்ப தேயரிது காண். (3)

அந்தணர்க்கு வேத மரசர்க்குச் செங்கோன்மை
வந்த வசியர்க்கு வாய்மையுரை — முந்தும்
உழவர்க்கு மேழி யுறுதிமற் றீதே
பளகறுத்து வைக்கும் படி. (4)

எல்லா மறிந்தாரு மேதொன் றறியாரு
மில்லை யுலகத் திதுநிசமே — கொல்லரிமுன்
தாழ்ந்த சிறுமுயலாற் றுவியதன் றேகுழியில்
வீழ்ந்தெவனே ஆங்காரம் வீண். (5)

கொண்ட சினத்தாற் கொடுஞ்சொ லுரைப்பானை
கண்டொன்று சொல்லார்கள் கற்றறிந்தோர்—மண்டமண்டக்
கூர்த்துக் குரைக்குங் குரைமுகனைக் கண்டாற்கோல்
நீத்திடுத லன்றோ நெறி. (6)

— நீதிநூறு

[நீதிநூறு — இயற்றியவர் சுன்னுகம் முருகேச பண்டிதர். இவர் குமாரசுவாமிப்புலவர் அவர்களுக்குத் தமிழாசிரியர்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லணிசேர் கல்வித் துறைபோய பண்டிதர்தாம்
வெல்லுமிகல் வேந்தரினு மிக்கவர்காண் — சொல்லுங்கால்
வேந்தர்க்குத் தந்நாட்டின் மேன்மையுண்டாம் பண்டிதர்க்குச்
சேர்ந்தவிட மெல்லாஞ் சிறப்பு (1)

உருவ மிளமை யுயர்ந்தகுடித் தோற்றம்
மருவினுமென் கல்வியிலா மக்கள் — ஒருசிறிதும்
வாசந் தராமுருக்கின் வண்மலரே போல்வரெனப்
பேசுவரே நூலோர் பிரித்து (2)

ஆடையா லேனை யணியா லலங்கரித்துப்
பீடுபெற வந்த பெருமூடன் — நீடவையில்
எவ்வளவும் பேசா தடங்கி யிருப்பானே
அவ்வளவு மேன்மை யவற்கு (3)

— சாணக்கியநீதி வெண்பா.

[ சாணக்கிய நீதி வெண்பா — இயற்றியவர் சுன்னுகம் அ. குமார சுவாமிப்புலவர்]

இச்செயலா லீதுவரு மென்றுரா யாமலே
எச்செயலு மேலோ ரியற்றார்தாம் — இச்சையொடு
வல்லை யியற்றுவரேல் வந்திடுமே பாருத
அல்லவர்க் கென்றே யறி.

— பாலாமிர்தம்

[ பாலாமிர்தம் — இயற்றியவர் நீர்வேலிச் சிவப்பிரகாச பண்டிதர். இவர் சங்கர பண்டிதரின் புதல்வர்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளது தைத்தாலூசி முனையினு லெடுப்பதன்றி
முழுவாள் கொண்டு
உள்ளழுந்த வெட்டியெடுப்பது முறையோ
சிறிய பகைக் குபாயமாக
மெள்ள மெள்ளக் கருமம்பார்த் தகற்றிவிடல்
விவேகமென விளங்க வேண்டும்
எள்ளுமரத்தைப் பிடுங்க ஏலேலப்பாட்டேனே
வியம்புவீரே. (1)

— பழமொழிப்போதனே

[ பழமொழிப்போதனே — இயற்றியவர் அச்சுவேலி ச. தம்பிமுத்துப் புலவர்; நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரை வளர்த்தவர் இவராவர் ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. இரகுவம்மிசம்

## அயனெழுச்சிப் படலம்

புதிதுற விளவ லிங்ஙன் வளர்தலும் போச னென்னும்
விதியமை விதர்ப்பர் வேந்தன் விளங்குதன் னுடன்றோற் றிந்து
மதிமண வினைக்கு வல்லே வம்மினென் றரசர் யார்க்கு
முதியமை யோலை யோடுந் தூதரை யுய்த்திட் டானே (1)

உய்த்தபின் வரவிட் டானீ டுள்ளுறை யோலை யாசை
பத்தினி னெட்டும் வென்றோ னங்கது பரிந்து கேளாத்
தத்துமாப் போச னோடுந் தமர்கொள்கை தகவென் றுணிற்
சித்திரத் திலக மன்ன மைந்தநீ சேறி யென்றான் (2)

ஏந்தலு மரசர் கோமா னிணையடி தொழுது போற்றிப்
போந்தனன் றிரண்ட சேனை பூத்தது படல தூளி
யோய்ந்தன பறவை யான வொண்கிரி சுரித்திட் டேய்ந்து
சாய்ந்தன வாழி யேழிற் றழைத்தது தமர மாதோ (3)

ஆதரத் தசலந் துஞ்சி யகல்விசும் பாற்றின் மெல்ல
மாதரத் தசைந்து போகு மழைமுகிற் புறங்க ளெங்குங்
காதரத் துவரி யுண்ட கடியன வுருப்ப மெல்லாம்
போதரத் தூளி போர்ப்பப் போயின புரவி யீட்டம் (4)

மேக்குலா மரசர் சீர்த்தி விடர்கொண்டாம் பிலஞ்ச லிக்கப்
போக்கிவெம் மதநாற் றத்திற் றிக்கயப் கைப்பைப் பொத்தி
யாக்குமம் மதயா றுந்தி யலைகட லுவரை யெல்லா
நீக்கியங் கினிதிற்போன நெடுங்கர வரைக ளெல்லாம் (5)

தங்கொளி யதனின் மேருச் சயிலமார் புதைத்துச் சாயாக்
கங்குல்கா லறுத்து நீண்ட கதலிகை யாடை யாலே
மங்குலின் றலையி னெற்றி மணிமுடி யதனின் வானத்
திங்களின் வயிறு கீறிச் சென்றன தேர்க ளெல்லாம் (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரிடந் தோறுந் தாழாத் தன்மையிற் பெருக்கி யெல்லாப்
பேரிடங் களையும் வவ்விப் பிறங்கொலிப் பெரிய வான
வூரிடஞ் செலுத்தி மற்றொன் றுண்டுகொ லென்ன வோங்கிப்
பாரிடம் பொறாத வண்ணம் பரந்தது பதாதி வெள்ளம் (7)

வன்மயப் படுத்த மேலை யுலகைச்செம் மணிகொ ளுச்சி
தன்மயப் படுப்ப நாகர் தலமெலாம் வயிர வாழி
யென்மயப் படுப்ப மற்றை யிடைநின்ற யாவுந் தன்ன
பொன்மயப் படுத்த தண்ணல் புரிந்துசெல் பொலங்கொ டேரே (8)

காழ்படு வேலர் வாளர் குந்தத்தர் கழுமுட் கையர்
பேழ்படு கதையர் வில்லர் பிறைமழுக் கரத்த ராகி
யூழ்படு மறத்தர் காத்தற் கொருவனைச் சூழ்ந்த சூழ்வங்
கேழ்கட லொக்கு மற்ற தெக்கட லென்ன லாமே (9)

பன்னிசைப் பரவை யொன்று பாடகர் பரவை யொன்று
நன்னடர் பரவை யொன்று நாவலர் பரவை யொன்று
கின்னரப் பரவை யொன்று கீதயாழ்ப் பரவை யொன்றங்
கின்னியப் பரவை தானொன் றிவற்றினும் பரவை யேழே (10)

நேரிய லிலாத தோற்ற நெடும்பொரு ணிலைமை தன்னாற்
பேரிய லுடைய தத்த நகரொடும் பெயர்தல் போலச்
சூரியன் மரபில் வந்த தோன்றலைச் சூழ்ந்து வந்த
ஆரியர் முதல பாடை யரசரு மளப்பி லாரே (11)

துன்றிய கால மூன்றுஞ் சூழ்ந்துசெய் செயல்கள் யாவும்
மன்றல்சே ரிறைவற் காற்றும் வண்ணமே மனத்த தாகச்
சென்றுறு பொருள்க ளொன்றுந் தெளிபுலப் படாதி யோகத்
தோன்றிய மோனர் போல வுசாக்கைய ரொருங்கு போனார் (12)

இயல்வருங் கழுநீர் பற்றி யிடங்கையின் வலங்கை மார்பிற்
றுயல்வருந் தோறு மாலை திருத்துத றொழிலே யாக
மயல்வருங் குழைகள் பொற்ப வாண்முகந் துளக்கி மார
னயல்வரும் பரிசிற் போனா ராடவ ரனேக ரம்மா (13)

நிரம்பினர் நெருக்க லாது விசைபட நிமிர வெற்றும்
பிரம்பின ரழல்பெய் கண்ணர் பேரொலி பிறக்குஞ் சொல்லர்
பரம்பிட ருறுத்த வைத்த வொட்டக முதல பாங்கர்
வரம்பில செம்பொன் மூடை காத்தனர் வளைந்து போனார் (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலுந்தண் டடத்தை நீத்து விண்ணிடந் தழுவிப் பாரிற்
காலுந்தி விரிந்த செய்ய கமலங்க ளனந்த முண்டேற்
போலுஞ்செங் கவிகை மானும் பொன்னபொற் கமல மேய்க்கும்
பாலவெண் பதும மொக்கும் பசிய பச்சிலையை யன்றே (15)

திருக்குலாம் கதலி கைக்கா னுழைந்துமேற் சென்ற வானி
தருக்கினு லிடைந்து மீள விறங்கவுந் தகாதிங் கென்னுச்
சுருக்கிலா விரிந்த தோற்றச் சுடர்நெடுங் கவிகைக் கொள்ளை
நெருக்கினு லாற்ற லாது நடுங்கின நின்ற வன்றே (16)

எண்பட்ட தேர்க ளெண்ணிற் கிரண்டுபட் டனதிண் யானை
பண்பட்ட புரவி யெண்ணிற் படாதன பதாதி யீட்டங்
கண்பட்ட வளவை கொண்ட கருத்தினுக் கடங்கா வேலை
மண்பட்ட தெனலாஞ் சொல்லில் வாயுளார் தமக்கு மாதோ (17)

தேரொலி யல்ல தேரிற் றிரண்மணித் திமிலம் வாசித்
தாரொலி யல்ல வாயிற் கனைகுரற் றமரம் யானைப்
பேரொலி யல்ல கண்டை நாதத்திற் பெருக்க மெண்ணி
லோரொலி யல்ல வானோ ரூர்செவி டுறுத்த தெல்லாம் (18)

அல்லுண்ட பகலை யெல்லா மயலுண்ட வார மன்ன
வில்லுண்ட வுரவு வீரர் மிகலுண்ட வேதி யென்று
லெல்லுண்ட திகிரி வாள கிரிபுறத் திருளுண் டென்னுஞ்
சொல்லுண்ட தறியுங் காலைத் தொலைவுண்டு சுருங்கு மன்றே (19)

எய்திடா நின்ற வாசி யினமணிச் சிவிகை யால
மைதொடா நின்ற வேழ மரகதக் கொடிஞ்சித் திண்டேர்
மெய்தொடா விரைந்த வென்னி லடிக்கொரு விலங்க லங்ஙன்
செய்திடா வேகற் குண்டே செல்லுநர் செல்லு மாறே (20)

முற்பட்டா ரடியு மொய்ம்பு முரிநெருக் கஞ்சி நொய்திற்
பிற்பட்டார் பதமு நோக்கிப் பிடிப்பது கொள்ள லல்லாற்
சொற்பட்டார் நிற்றலென்று சொல்லுவ தன்றி யுண்டே
யெற்பட்டா ரணிகொ டானை யிடைப்பட்டா ரியங்க ருனே (21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுந்தவா மதிபோய்ச் சால வளப்பதற் காய்ந்து தாழ
விழுந்தவா மென்னின் முற்றுங் கட்புலம் விரித்து நோக்கித்
தழுந்தவா வலிகொள் சேனை தனித்தனி பிரிக்க லாதங்
கெழுந்தவா றெளிதி னாமோ வெம்மனோ ரியம்பு மாறே (22)

எல்லு லாந்தகை யின்மணிப் பூணினன்
மல்லன் மாமணங் காண்பதொர் மாதராற்
செல்லு லாமதித் திண்கவி கைக்கழை
வில்லி சேனை யெழுந்து மிடைந்ததே (23)

வம்பு லாவு மராட்டத்து மாப்பல
பம்பு சேனை யிதனொடும் பைபயக்
கம்பு சேணின் னொலிப்பக் கலந்துட
னம்பி சேனையு நன்னர் நடந்தவே (24)

நன்னடைப்பி டிக்குலங்க ணவ்வியங்க ணாரையே
வென்னிடைப்ப ரித்தல்செய்து மெல்லமெல்ல வேகின
சொன்னடைப்ப தம்வருந்தி டாச்சுமப்ப தன்றியே
சென்னடைக்கு டைந்தபோது பின்னையென்கொல் செய்வதே (25)

வல்லியற்று ரங்கமேகு கிற்பதும்ம னங்கொளா
ரெல்லியற்பொன் மாதர்மீதி ருப்பதும்மு ணர்ந்திடா
வல்லியற்க துப்பினரு மாவுமாத லாற்பரி
செல்லுகிற்ப தோபொனூர்தி றத்தையோதெ ரிப்பதே (26)

அனந்தவேளு லப்பில்பொன் னளப்பில்கற்ப கத்தொடை
புனைந்தமாலொ ராறணிந்து போவதுள்ள தாவதேல்
வனைந்தமாலை யிளைஞர்மாதர் மன்னரார்தி றத்துநேர்
நினைந்துகூற லாகுமல்ல வென்னினேரு மில்லையே (27)

குசைவலம்வ லித்துமற்றை யிடமுறக்கு றுக்கியும்
திசைமுகந்தி ரித்துமாவு கைத்தொர்காலை செல்வன
விசைதருஞ்சொன் மாதராரி ருங்கணம்பி ரண்டுபால்
விசைபடும்வி னைத்தொழிற்கு விலகியேகல் போலுமே (28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடையினிற்செல் வானொாட வன்விளங்கு மன்னமென்
னடையினிற்செல் வாளொர்மங்கை நாமநண்ணி னவலுந்
தொடையினிற்கு ழற்கழற்றி யெறியவிற்ரெ டைக்கைவேள்
படையினிற்ப னிப்புருப தைத்துளம்வெ தும்பினன் (29)

சேய செங்கைச் செழுங்குழன் மாதர்கண்
மேய வோரிரு நோக்கம் விளைத்தலா
லேய வன்புட னேகுவ மீளுவ
வாய வவ்வுழி யாடவ ராவியே (30)

முன்செல் வாள்குழன் முன்னர் வலித்திடப்
பின்செல் வாள்விழி பின்னரி னீர்த்திட
மின்செய் வேற்கையொ ராடவன் வேறுபின்
னென்செய் வானடு நின்றிடரெய்தினன் (31)

எஞ்ச லின்றியொ ரேந்திழை தன்மனந்
துஞ்ச மற்றொரு தோகையை யுள்ளினு
னெஞ்சி டம்பெற லின்மையி னிட்டுரன்
கஞ்ச னென்றொரு காளை வெதும்பினன் (32)

தொள்ளைப் பேருணர் வோடுமொர் தோன்றரு
னள்ளற் றுமரை யான முகத்தினீர்
கள்ளத் தாமிரு கண்வழிச் சென்றுநும்
முள்ளத் தாமென் னுயிர்சுக மோவென்ருன் (33)

நெறியெழுந் துகளினுற் றமது நீணிறம்
பிறிதுறு பதாகையஞ் சேனை பெட்புறச்
சிறியபுன் கதனிடைத் தென்றல் சீகர
மெறியுநன் மதைநதிக் கரையி னெய்தினன் (34)

பொன்னெடுங் கிரியை விட்டு வெள்ளியம் பொருப்பிற் பொற்பா
ரன்னெடுங் குகரம்புக்க வரியிள வேற்றை யொக்க
நன்னெடுந் தேரினீங்கி நடுமுனை விசித்த நாண்கொண்
மின்னெடும் படாஞ்செய் மாடம் புக்கனன் விளங்குவேலான் (35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயவா ருகிய பொழுதி னன்பினோர்
கூயவா றெழுந்தெதிர் குழுமிக் கூடியே
யேயவா றேகியல் காண வெய்தினர்
மேயவா றெய்திய விழுமம் விட்டுளார். [36]

உந்தியி னுப்பண்மீ தோங்கு மொண்மதச்
சந்தமே தோன்றலொண் டரங்க மேயபாற்
சிந்துவி னுலகெலா மளந்த சேவடிச்
சுந்தர னெடிதுறத் துயிறல் போன்றதே [37]

கனைகுர லளித்தொகைக் காட்சி காண்குவா
ரினையவு நோக்கியுள் வியக்கு மெல்லையிற்
றுனைவரும் வானவர் நடுங்கத் தோற்றுநஞ்
சினவொரு கரிபுன லிடையெ ழுந்ததே [38]

பிடியன நடையு ருது பெரும்பயங் கொண்டு மாழ்கித்
துடியன விடையி னோடுந் துவண்டனர் சோர்ந்து நில்லாக்
கடியன கவன மிக்க கால்பொர நடுங்கி நிற்குங்
கொடியென லானார் வஞ்சிக் கொம்பன கோதை நல்லார் [39]

ஒன்றிய பழுவடங்க வுலாவிசைக் கைய ராகி
மின்றிகழ் குதிச்சு வட்டின் பெருவிரன் மதிப்ப வோடிக்
கன்றிய முழமோர் நாலு கடந்தபின் காத மொன்று
சென்றென வுள்ளஞ் சோர்ந்து தியங்குவார் சிந்தரெல்லாம் [40]

நடுக்குமா லந்தணீர்கா ணவிலுமிங் கிதனை நன்னர்
தடுக்குமா றரிய வேதந் தானென நக்கு நக்காங்
கடுக்குமா றங்கை பற்றி யங்கவ ராவி தன்னைக்
கொடுக்குமா றெண்ணி வல்லே சேட்புலங்கொண்டு போவார் [41]

கைத்தல மொன்று நீண்ட காய்ப்புடை வெரிநிற் போட்ட
பைத்தலை பிடிப்ப வொன்று புகாதலைப் பாகு பற்ற
மொய்த்தலை வெய்திப் பின்முன் பார்த்திடு முகத்தராகி
யெய்த்தலி னிருதாள் சோர வேகுவார் வணிக ரெல்லாம் [42]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனையன வினைய மாகி யிலங்கிழை மடவா ரோடு
மனையன சேனை யெல்லா மலந்தலை யாய போதில்
வினையன மதமா வெம்போர் வேட்டெழு சீய மொக்கத்
துனையன துடிப்பி ேனாடு மெழுந்தனன் துங்க வேலான் [43]

கணிக்கழ லாற்ரு மாலை புரண்டிடா மருங்கு கோடா
வணிக்குழை யலம்பா குஞ்சி யசைந்திடா வங்கை யாடா
தணிக்கரும் விசையி ேனாடித் தளம்பிடா தரித்தியார்க்கும்
கணிக்கரும் கதத்த வேகக் கடாமலை யதனைக் கண்டான் [44]

வல்லவெஞ் சமத்தி னன்றி மதிக்குறை மருப்பு மாவைக்
கொல்லுத றிருவை வேட்டோர் குறிப்பரோ வெனவுட் கொள்ளா
வொல்லென வுரவு நோன்ரு ளொண்சிலை குனிவித் துய்த்தா
னில்லெனத் தடுக்கு மாருேர் நெடுங்கணை யதனை யன்றே [45]

நிற்றிமிக் கடரே லென்ன வுணர்த்துவா னெறியி னெற்றி
கொற்ருெழிற் பகழி யற்பங் கூர்ந்தலை குளித்த லோடும்
பற்றிய சாபவேழப் படிவம்விட் டலங்கு சோதி
செற்றிய வுருக்கொண்டாங்கோர் தேவினிற் ருேன்றி நின்ருன் [46]

மாமயந் திவ்விய காந்தி மண்டலம் சூழநாப்பட்
காமரு முருவிற் ருேன்றிக் காட்சியிற் றலையாய் நின்ருேன்
கோமகன் றன்மேற் றன்னு ணினைப்பினிற்கொண்ட தண்டார்த்
தேமரு தருவின் வாசச் செழுமலர் தூவிச் செப்பும் [47]

தந்திர குலத்துட் டோன்றும் பிரியதரி சனனே தானென்
தந்தையென் நாமந் தானும் பிரியம்வத னென்ன லாமா
லந்தமின் மதங்கநாம் முனிவனெற் கரிய சாபந்
தந்திட வவன்றன் செம்பொற் ருண்மல ரிறைஞ்சி யேத்தா [48]

ஐயவென் மதத்தி னுனி னகத்தெழு சீற்ற மாற்ற
வையசொற் றலைமேற் கொண்டேன் மாறுமா றுரைமி னென்னத்
துய்யமண் புரக்கு மிக்கு வாகுவின் மரபிற் ருேன்றுஞ்
செய்யவ னயனென் ருேதுஞ் செம்மலிற் றீரு மென்ருன் [49]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மையிற் சீத நீர்வெந் தீயினு தபத்தி னென்றின்
வெம்மையுற் றெழிந்த காலைத் தன்குணம் விளக்கு மாபோ
லம்முனி யுரைத்த சொற்கொண் டன்றுதொட் டின்று காறு
மைம்மலர்க் கானந் தன்னில் வழுவையாய் வதிந்திட் டேனே (50)

பந்தவல் வினையின் சும்மைப் பையுள்வன் வடிவ மாறி
யுய்ந்தன னின்னூற் கைம்மா றென்றுசெய் தொழியே னேலென்
சுந்தர நிலைமை யென்னு நங்குலத் தொல்லோ ராய
தந்திரர்க் குரிய பாணந் தருகுவ னென்னச் சாற்று (51)

ஆங்கெதிர் விடிலொன் றூட லங்கையி னுய காலை
வாங்கிடி லொன்றி ரண்டு மந்திரத் ததுவா லாவித்
தீங்கிது செய்யா மோகஞ் செய்திடுஞ் செருவிற் றெவ்வ
ரீங்கிதன் பெயருஞ் சம்மோ கனமென வியம்ப லாமே (52)

சிக்குறத் தீங்கு செய்யாப் பிறர்க்கின்னு செய்தே மென்றுண்
நெக்குள மெலியா நின்றாய் நிலைமைய தன்று நானுன்
மிக்குள மறுப்பா யல்லே வென்றியோ யிரத்து முன்னை
யிக்கணை கோடி யென்று னிளவலு மிதய மொத்தான் (53)

திருத்துமன் னுயிர்கட் கெல்லாந் தாய்முலைப் பாலிற் றெண்ணீ
ரருத்துநன் மதைநீ ரேந்தி யாசம னஞ்செய் தன்பா
லுருத்தெரி வரிய மார னுளத்தையு முயிர்கொள் காலன்
கருத்தையு மயக்கு மோகக் கணையது கைக்கொண் டானே (54)

அம்பொடு விஞ்சை தானு மளித்தவ னகன்றிட் டன்னுன்
சம்பர நளின வாவிச் சயித்திர விரத மென்னு
மும்பரெண் சோலை புக்கா னுலகினுக் கொருவ னுய
நம்பியும் விதர்ப்ப மென்னு நாமநன் னுடு சேர்ந்தான் (55)

நிரம்பொளிப்பங் கயக்கானி னிடையொதுங்கி நிலாமுக்கி
குரம்பொளிக்கும் வயரேறுங் குவைத்தரளக் குலக்கொடியின்
பரம்பொளிக்கு மதியினிலா நலப்பாடு பருகுவான்
வரம்பொளித்து வரநாணி மடையொளிக்கும் வளையெல்லாம் (56)

4

150295

மணப்பதுமப் பொகுட்டூறு மதுவருந்து யருந்தியினப்
பிணக்கினெடுங் கான்மயக்குந் தலைமயக்கும் பெரிதாக
விணக்கினிமிர் கழைக்கரும்பு நனிகொடுத்த விலைக்கரத்தின்
றணப்பறநின் றிருப்பாலுந் தள்ளாடுந் தடஞ்சாலி (57)

குழுமுதிருஞ் சுரும்பினினங் குடையமலர்க் கொழுந்தாது
கெழுமிநிலத் துகாதுபுனற் கிளர்தாரை வரம்படைப்பத்
தழைமுகவஞ் சினைபோக்கி விசும்பளந்து தகுகால
மழைமுகிலின் வயினுடைத்து மடைதிறக்கும் மலர்ச்சோலை (58)

கடிகாட்டும் பெருவளத்தி னிரந்துமிகைக் கவின்காட்டப்
படிகாட்டு நிலக்குநில மெளியவோ வயற்பானற்
செடிகாட்டுஞ் சசிபதிநற் சேய்காட்டுந் திமிசுமுட
மடிகாட்டும் புனற்றேவு மால்காட்டு மலர்க்காயா (59)

கனவளத் தெழிலுங் கோட்டுக் கல்லகக் கவினுங் காமர்
வனவளத் தியலு நன்னீர் வயல்வளத் தழகும் வாய்ந்த
வினவளத் தியன்ற செவ்வி யீர்ம்புன னாட்டின் செல்வம்
புனைவளத் திலங்கு பூணு னேக்குபு போயி னானே (60)

துனைதுதைந் தறுகா றம்மிற் றொழுதியிற் கொழுதிச் சூழ்ந்து
நனைதுதைந் துழக்கும் பைந்தார் நம்பிதன் வரவு கேளா
வினைதுதைந் திலங்கு வெள்வேல் விதர்ப்பகோன் மதிக்கு முன்செல்
கனைதுதைந் தரற்று வாவின் கடலென வெதிர்கொண் டானே (61)

வந்துளோன் விதர்ப்ப ராசன் மற்றையவ் விதர்ப்ப நாடா
னிந்திர திருவி னனிவ் விளவலென் றியாரு மெண்ண
வெந்திறற் போசன் றன்பாற் றிருவெலாம் வேள னூர்க்குச்
சிந்தைகொள் வணக்கத் தோடும் சிறப்பொடும் வழங்கினானே (62)

எண்படாக் காத லார்க்குக் காவலின் றென்ப போலக்
கண்படா மதனன் றனைக் காணிய கருதிக் காவற்
திண்படா நிமிர்ந்த வாரை கடந்துமேற் றிகழ்ந்து மேக
வெண்படாத் திடையி னெல்கித் தோன்றினன் மாட மின்னே (63)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேண்விடா தெழுந்து செல்வ மணவினைத் திருவின் செவ்வி
மாண்விடா திலங்கு மாயின் மனம்பிற வவ்வ லெங்கே
யேண்விடா திசைந்து கொள்ளக் கண்விடா னியன்று நோக்கிப்
பூண்விடா திலங்கு மார்பஞ் புனைநெறிப் போயி னானே (64)

சேய்க்கொண்ட வகழிக்கஞ்சத் திருமனை யிருந்த கன்னி
யேய்க்கொண்ட வன்னம் பாங்க ரெய்திளஞ் சேவற் கின்பப்
பேய்க்கொண்ட காதல் பொங்க வகவிதழ் பிடுங்கிச் செய்ய
வாய்க்கொண்டு சூட்டநோக்கி மணிமதில் வாயில் புக்கான் (65)

ஒண்மணப் பதும வீடு திறந்துவந் தொருது செம்பொற்
பெண்மணப் புடைய ளாகிப் பிரிகலாள் பிறங்க வைகத்
தண்மணப் போது சிந்திச் சந்தனந் தெளித்து முத்த
வெண்மணற் பரப்பி யிட்ட வீதிவாய் வியந்து போனான் (66)

ஏரியங் கலர்ப்பா ணந்தொட் டிருவரு மறியா தேவெல்
கூரிய னழக னேனு மழகினுட் குடிபுக் கென்ன
வாரியன் விதர்ப்ப ராசன் சிந்தையின் வழிச்சென் றூரப்
பூரியம் பற்ப ராகப் புதியதோர் கோயில் புக்கான் (67)

உரையொக்க விளங்கும் வெய்ய மண்டில முவரி வீழப்
புரையொக்க வெழுந்த திங்கள் புழுங்கிய புணரி யாற்று
திரையொக்க வலறி விண்ணின் வெடிப்பவான் சிவக்கப் பட்ட
நுரையொக்க மீன்க ளொத்த நுண்துளித் தெறிப்பை யம்மா (68)

சுகரந்த வாத கோட்டுக் குன்றெடுத் துடைய கோலப்
பகரந்த நெடுங்கல் லோலப் பாற்கடற் பள்ளி யானி
னிகரந்த மிறந்த செவ்வி மல்லிகை நிறைந்த வாச
மகரந்த மலர்மென் சேக்கை வதிந்தனன் மடங்க லன்னான் (69

பரிதிதன் கரங்க ணீட்டிப் பற்றிடுந் தோறும் பாங்க
ரிருவரும் பிரியார் யான்வந் தெய்துவ தெங்ங னென்னுக்
கருவரி யளகக் கங்குற் கணிகைகை கடப்பக் காமத்
தொருவரை பாய்வான் போல வுதயவெற் புற்ற தன்றே (70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுகுளக் கடிகை மாக்கள் வைகலைறப் புகழ வண்டார்
நறுமலர்த் துணர்ப்பூஞ் செவ்வி நானநன் னலங்கொ டாரான்
செறியனத் திரள்க ளார்ப்பச் சேக்கைமென் புளின நின்றங்
கெறுழ்வலிச் சுப்பிர தீப மெழுந்தெனத் துயிலெ ழுந்தான் (71)

[ இரகுவம்மிசம் — இயற்றியவர் அரசகேசரி. இவர் யாழ்ப்பாணத்தை ஆண்ட பரராசசேகர மகாராசாவின் மருகர். இரகுவம்மிசம், காளிதாச மகா கவி வடமொழியிற் செய்த இரகுவம்மிசத்தின் மொழிபெயர்ப்பாகும். இதில் திலீப மகாராசன் காமதேனுவை வழிபட்டுப் புத்திரனுக இரகு என்பவனேப் பெற்ற கதையும், இரகுவின் கதையும், இரகுவின் மகன் அயன் கதையும் அயன் மகன் தசரதன் கதையும், தசரதன் மகன் இராமன் கதையும், இராமன் மகன் குசன் கதையும், பிறவுஞ் சொல்லப்பட்டுள்ளன. இந்நூல் கம்பருடைய இராமாவதாரமென்னும் நூலேப் பின்தொடர்ந்தே பாடப்பட்டுள்ளது இலக்கியச் சுவை உடையதெனினும் மிக்க கடின நடையுடையதாகையால் கற்ருேர்க்கே பயன்படுவதாயிற்று.]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாக்குப் புராணம்

## வினைசூழ் படலம்

ஆதிநாளில் அண்டபிண்ட மாதியான யாவையும்
தீதிலாத முதல்வனீந்த செய்திசெப்ப லுற்றனம்
சூதினால் மயக்கிமாய துத்திநாக மெய்தியே
மாதினோடு கேள்வனுக்கு வஞ்சமுய்த்தல் கூறுவாம் [1]

ஓதுகின்ற வையகத்தில் ஒப்பிலான் படைப்பினுட்
போதுகின்ற சீவபேதம் யாவினும் புயங்கமே
சூதுமிக்க தாகுமன்ன துட்டநாகம் அலகில்வெந்
தீதுமிக்க உள்ளமோடு தெரிவை முன்னரானதே [2]

நண்ணிமாய சர்ப்பமிந்த நந்தனப் பயன்கணீர்
உண்ணலீர்க ளென்றுதே வுரைத்ததுண்மை கொல்லெனப்
பெண்ணியா முணற்கெலாம் பெரிதுவந்து தந்தனன்
கண்ணிலாவு சோலைநாப்ப ணின்றதாரு காட்டியே [3]

வீவொழிந்து நீவிருய்ய வேண்டுமென்னி வித்தரு
மேவுகின்ற கனியுணல் விழைந்துதீண்ட லொழிதிரென்
றேவிலா விலக்கெமக் குரைத்தனன் பிரானெனத்
தூவிமஞ்ஞை யெனவிளங்கு தோகைசொல்லி னளரோ [4]

என்றபோது சர்ப்பமாதை நோக்கிமாய்வ தில்லைநீர்
தின்றபோது நுமதுகண் டிறந்துநன்மை தீமைதேர்
கின்றபோத மெய்திநீவிர் தன்னையொத்தல் கேடிலா
நின்றபோத னெஞ்சிலோர்வ னெனநிகழ்த்த லுற்றதே [5]

நண்ணுகின்ற சீர்மைசாலு நந்தனத்து மத்தியின்
கண்ணிருந்த தருவினன கனிகளுண்ண வினியவாய்
எண்ணுகின்ற தோற்றமிக்க எழிலுமொண்மை தெளிவுறப்
பண்ணுகின்ற பான்மையும் படைத்தவாகு மென்னவே [6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுநெஞ்சு கவரவல்ல காட்சியின் மயக்கமீக்
கொண்டுசென்று தானுமன்ன கோலமேவு கனிகளை ந்
துண்டுதன்னெ டொன்றிவாழு மனிதனுக்கு முதவினுள்
மண்டுமன்பொ டவனுமன்று வாங்கியுண்ண லாயினன் [7]

உண்டுவந்து நின்றகாலை ஒல்லையின்க ணவர்கடங்
கண்டிறந்து நக்கரா யிருந்தவாறு கண்டுளத்
தண்டுநாண மிக்கபோழ்தில் அங்கணத்தி யிலைகளைக்
கொண்டுதைத்த ரைக்குநல்ல கூறையாக்கி வைகினர் [8]

பகற்கணே குளிர்ந்தகால் பரந்துலாவு பொழுதினே
மிகச்சிறந்த காவினூடு லாவிநின்ற மேலவன்
தகப்பெறும் பயன்குலாவு சத்தமோர்ந்து சோலையின்
அகத்தவன் முகத்தைநீங்கி அங்கொழித்து வைகினர் [9]

ஏதாமே எமக்கினியென் றுணரா ரிவ்வா
றிருந்துழியெம் பெருமானந் நரனைக்கூவி
ஆதாமே எங்குளை நீ யென்ன வன்னோன்
ஐய னேஇக்காவில் நினது சத்தம்
போதாமே வரக்கேட்டு நக்க னனை
புன்மையினுல் அஞ்சிவெள்குற் றொழித்தே னென்றான்
தீதாமே தெனினுமிலான் நக்கனென்று
தெரிவித்தார் யாருனக்குச் செப்பு வாயே [10]

உண்ணாது தவிர்த்தமரப் பயனுண்டாய்கொல்
ஓதுகெனத் துணையாநீ யெனக்குத் தந்த
பெண்ணுனு ளுதவியதால் உண்டே னென்றான்
பேதைநீ இதுபுரிந்த வாறென் னென்றே
மண்ணாதி படைத்தபிரான் கேட்ப அந்த
மானனைய திருநோக்க மடமா னைய
பண்ணாத வஞ்சமெல்லாம் வல்ல நாகம்
பண்ணியவஞ் சனைக்குள்ளாய் உண்டே னென்றான். [11]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனக்கபடம் புரிந்தகொடும் பணியைநீயிம்
மானிலத்தி லுயிர்களுக்குட் சபிக்கப் பட்டாய்
எனக்களறி நீவயிற்று லூர்ந்து மண்ணை
ஈண்டுளநின் ஞயுணா ளெல்லா முண்க
நினக்குமடப் பாவைக்கும் நின்வித்துக்கும்
நேரிழையாள் சந்ததிக்கும் பகையை யுய்ப்பேன்
சினத்தொடுனைத் தலைநசுக்கு மவனவன்காற்
சிறந்தகுதி தீண்டுவைநீ யெனவுஞ் செப்பி [12]

மையலார் பவம்புரிந்தா டனையுன்பாற்சூல்
வருங்காலம் வருத்தநனி வருவிப் பேறல்
தையலாய் வயாவொடிளங் குழவியீன்க
தலைவனுக்கா ளாவையவ ஞள்க வென்றான்
உய்யலா நெறிகடந்த நரனை நீயிங்
குன்மனையாள் சொற்குடைந்தென் னுரையைமீறிச்
செய்யலா ததுபுரிந்தாய் அதனுலிந்தச்
செகதலத்தை உன்னிமித்தஞ் சபித்தே னென்றான் [13]

என்றுமொழிந் தனன்பின்னும் நோக்கிவையத்
திரும்பயனீ யுள்ளமட்டுங் கிலேசத் தோடே
தின்றுபசி தணிகமுட்பூண் டுடனே முள்ளார்
செடிகளையு நிலமுளைக்கச் செய்வதாக
துன்றுபயிர் வர்க்கமுனக் குணவாம் மண்ணிற்
றோன்றியநீ மீளவுமம் மண்ணின் பாலிற்
சென்றிடுக அதுகாறும் முகவேர்வோடு
சீவியஞ்செய் திடுகவென்றுஞ் செப்பினனே [14]

ஓவாத கொடுஞ்சாப மவரிவ்வாறங் குழந்துற்றார்
ஆதாந்தான் மனையாளிந்தப்
பூவாழு முயிருடையோர் எவர்க்குந் தாயாய்ப்
பொலிந்ததொரு பொற்பதனுற் பொருந்துநாமம்
ஏவாளென் றுரைத்தவளோ டிசைந்துவாழ்வுற்
றிருந்தனனுங் கவர்நாணம் மறைக்குமாறு
தேவானே னதளங்கி அவருக் கந்நாட்
செய்தருளா லுடையாகச் சேர்த்தினனே [15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈங்கிவைமற் றிவ்வாறு நிகழ்ந்த பின்னர்
எம்பெருமான் மானிட னிந்நாளில் நன்று
தீங்குணரப் பெற்றுநம்மில் ஒருவர்போலச்
சிறந்தனனு மெனவவனிச் செழுங்கா வூடே
ஓங்கியநற் சீவதருக் கனியைக் கொண்டாங்
குண்டுசதா காலமுய்யும் வாழ்வை நீக்கத்
தெங்கமழு மலர்ச்சினைக்கை ஏதேனென்னுஞ்
செழுங்காவி னின்றகலத் துரத்தினனே [16]

நித்தமுறும் அவன்வாழ்வை ஒழிக்கு மாறும்
நீணிலத்திற் பயன்விளைவித் துண்ணு மாறும்
அத்தனவ னின்றகற்றி விட்ட பின்னர்
அக்காவில் மீண்டுமவ னணுகா னகத்
தொத்தலரு நறுஞ்சினைக்கைச் சீவ தாரு
துன்றகத்தை யுறுமார்க்கத் துறையி னுங்கே
கொத்தழல்பொங் கனற்கட்கங் கெரூபி னேடுங்
குணதிசையிற் காவலுறக் குறித்தா னன்றே! [17]

[திருவாக்குப்புராணம் – இயற்றியவர் அளவெட்டி கனகசபைப் புலவர். வீரமாமுனிவரின் தேம்பாவணியை அடுத்து வெளிவந்த கிறித்தவத் தமிழ்க் காவியம் திருவாக்குப் புராணமாகும். இந்நூல் சிறந்த கவிநயம் பொருந்தியது. "இஃது கிறித்து சமயவித்தியாசாலை மாணுக்கரும் பிறரும் சத்திய வேத நூலைக்கற்றுக் கொள்வதற்கு உபயோகமாக மேக்காதர் ஐயரால் புராணநடையாகச் செய்யப்பட்டது;" என்று இந்நூலின் துவக்கத்தில் காணப்படுகிறது. இதன் முதல் பதிப்பு 1866-ம் ஆண்டு மானிப்பாயில் வெளியிடப்பட்டுள்ளது. நூலின் தொடக்கத்தில், தமிழ்க் காவிய அமைப்பு முறைக்கேற்ப, கடவுள் வாழ்த்து, அவையடக்கம், பதிகம் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகிறது. இந்நூலாசிரியர் தமிழக் காவிய நடைக்கேற்ப அங்கங்கே புனைந்துரையாகப் பல பாடல்களைப் பாடியுள்ளார். அவை இலக்கியச் சுவையுடையனவாயுள்ளன. ஆனல், அக்காலத்திய கிறித்தவத் தலைவர்கள் அத்தகைய பாடல்களை விலக்கியிருப்பது வருந்தத்தக்கது].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. திருச்செல்வர் காவியம்

## திரு அவதாரப் படலம்

அயாவு யிர்த்திருந் தவ்விடத் தந்தநள் ளிரவின்
வயாவ ருத்தநோ மாசுசூ தகமுதன் மறுக்க
ளியாவு மின்றி வெண் படிகத்தின் காந்திபாய்ந் தென்னத்
தயாபரன் றிருச் சுதனையத் தவக்கன்னி தந்தாள் (1)

பயந்த பாலனைச் சூசையும் பரிசுத்த மரியும்
வியந்து மெய்ப்பர னெனத்தொழு திறைஞ்சினர் விண்ணோ
ருயர்ந்த வான்கதிப் பரனுக்குப் புகழ்ச்சியு முலகி
னயந்த சிந்தைமா னவர்சமா தானமு நவிற்றி (2)

பண்கொ டேவதுந் துமியொலித் தின்னிசை பாட
விண்கொ ளாடலே புரிந்தனர் மிகுந்த சம்மனசோ
ரெண்கொ ளானிரை காத்துறங் கிடையர்க்காங் கெழுந்து
துண்கொ ளாவொரு சம்மன சுரைத்தசோ பனமே (3)

உரைத்த சோபனங் கேட்டலு முவந்துகொண் டாடி
வரைத்த லத்துள காணிக்கை கொடு வணங் குற்றார்
தரைத்த லத்தையீ டேற்றுநா தனுக்குமெட் டாநாட்
டிருத்து நாமமும் யேசுவென் றுரைத்தனர் சிறந்தார் (4)

சிறந்த பூருவதிக்கினிற் கலைதெரி செங்கோ
லறந்த வாதமூ வரசர்தம் மாகமத் தமலன்
பிறந்த காலமோர் தாரகை பெரிதுதித் திடுமென்
றறிந்து தீட்டிய படியடைந் தடிபணிந் தகன்றார் (5)

தாய ருந்தவச் சூசையும் யூதர்தம் மொழுங்கி
ஞய கன்றனை நவிலுமெண் ணைந்ததா நாளிற்
சேய பங்கைய வாவிசூழ் செருசலை நகரி
லாய சன்னிதி முன்னர்கா ணிக்கைகொ டளித்தார் (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னகாலையி லாகம வழிதெளி சிமியா
னென்னையாளுடை நாதனை யிருகரத் தேந்தித்
தொன்மைவானகம் வசுந்தரையுயிர்த் தொகையெவைக்கு
மன்னு தாபரநீயெனப் போற்றிவாழ்த் தினனால் (7)

நம்பி கெட்டியிந்நாயக னளிர்முடி யரசர்
செம்பொன் மாளிகை யுதித்திடா தென்னெனத் தேரி
னெமப வங்களுக் குத்தரித் திடவிது வழியாய்த்
தப்ப மற்றவர் போற்றரித் திரரிடஞ் சார்ந்தான் (8)

உதித்த பின்வய தொருபது மிரண்டுமுற் றிடுகாற்
றுதித்தி டுந்திருப் பாஸ்க்குவ தூய்துகொண் டாடக்
கதித்தி டும்புகழ்ச் செருசலே நகருற்ற கலைஞர்
மதிக்க முத்தினந் தர்க்கமே புரிந்தனன் மன்னே (9)

நவங்கள்பற்பல புரிந்ததும்நானிலத் தவர்கள்
பவங்க டீர்ந்திடப் பண்ணிய செயல்களு மல்லா
லவங்கள் பண்ணிலன் வீண்பொழு தகற்றில னறிவாந்
தவங்க ளாற்றிய வழிகளுஞ் சாற்றி நாட் கழித்தான் (10)

உயிரி ழந்தவர் தங்களை யெழுப் பியுமுடலி
னயர்வு றுங்கொடு நோயவர்க் ககற்றியு மகவெந்
துயரு ழந்தவர்க் காறுதல் சொல்லியும் பாவச்
செயிர்க டீர்த்தது மினதெனச் செப்பிடலாமோ (11)

முப்ப தாண்டுபின் னிட்டபின் முரிதிரை புரட்டு
டப்பு லாவியோர் தான்நதி யதிலரு ளப்பன்
தப்பில் ஞானஸ்நா னம்மது சிறப்பொடு தரப்பெற்
றிப்பு விகுரு வாயுப தேசமு மிசைத்தான் (12)

மாசி கந்ததே வாகம வழியையங் கங்குப்
பேசி யும்படிப் பித்துமெய் பெரிதுற வருந்தி
வாச மாகவே நாற்பது நாள்வனத் தியாது
மாசை யாற்புசி யாதுப வாசமுற் றமர்ந்தான் (13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகு சோதியம் பரன்றரு சுதன்றிரு மறையை
யுலக மெங்கணு மனுப்புவா னெழுங்குபண் பூக்கம்
பலகு ணங்களிற் பழுதுருப் பன்னிரு சீடர்
குலவு மேழைமைப் பாலரைத் தெரிந்துகைக் கொண்டான் (14)

ஆண்டு முப்பத்து மூன்றுமிங் கவற்கடுத் திடுங்காற்
பூண்ட வெம்பவங் கட்பொறை நீக்குவான் பொருந்தி
மீண்டு மெய்ப்புகழ்ச் செருசலே நகரத்துமேவி
மாண்ட பாஸ்குவ வாந்திரு நாளையும் வணங்கி (15)

பாவ வல்லிருட் பகையெனும் பற்றலர்ச் செகுப்பான்
றேவவல்லப வல்லைய மெளிமையின் றிகழ்வாள்
தாவில் தம்பறைப் பரிசையு மிதமுறத் தாங்கி
வீவதின்றிய மனத்திடக் கவசமு மிலைந்தான் (16)

எழுவ கைப்பவத் தலைவரோ டெதிர்ந்திடர் படுத்த
வழுவி லாவிஸ்பிரீத் துச்சாந்துவின்வர மனுப்பிக்
களும வானொலி காட்டிய பவங்களோர் நான்கு
விழும வன்பகைக் கெதிர்விடு தூதிவை விடுத்தான் (17)

எவ்வ மில்லிஸ்பிரீத் துச்சாந் துக்கெதிர் பாவப்
பவ்வ மட்டிட்ட ஞானவெந் தீயினைப் பணித்துச்
செவ்வி தாயொருப் பட்டுமுப் பொறிகளுந் திருத்தி
வெவ்வ கைப்பகை கடிந்திட விமலனுந் துணிந்தான் (18)

*வேறு*

துணிந்து சென்று தமைப்பயந்த தூயதிருத் தாயரையும்
பணிந்தெமது தந்தைபணி பணிப்பதற்குப் பருவமிதோ
வணைந்துநீ ரெனைத்தேட லாவதில்லை யருந்துயரந்
தணிந்திருந்தா யென்றிரங்குந் தன்மையையுந் தவிருவிரால் (19)

அவ்வசனந் தனைக்கேட்ட வன்னையகந் தனிற் காய்ந்த
வெவ்வயில் பாய்ந்தென்னவுடன் மிகவுநடு நடுக்கமுறீஇக்
கவ்வையுற் றிரங்கையினுற் கான்முளையைக் கட்டியணைத்
திவ்வசனம் யான்கேட்டு முயிர்கொண்டிங் கிருப்பதுவோ (20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றுசிமி யான்றேவ வாலயத்தி லேபகர்ந்த
துன்றுசுடர் வாளேழு மென்னிதையந் துணித்திடுத
லின்றுகொலோ வெனவிரங்கி யெரியுகுநெய் யெனவுருகி
நின்றுபட்ட துயரெம்மா னிகழ்த்தமுடி வாகுமோ (21)

ஆங்கதனை யொருவிதமா யாற்றி விடைகொண்டனையை
நீங்கியபின் சீடருட னேகிநெடு நிலைமதலை
தாங்குசென்னற் குலுவெனுமாற் கரண்மனையிற் சார்ந்திருந்து
பாங்குபெற நற்கருணை பண்ணிய சொற்றிடக் கேண்மோ (22)

குறித்திடுமோர் குருவாரத் திரவின் மாணுக்கருக்கு
மறுத்தவிர்நா தன்றமது மலர்க்கையாற் பதங்கழுவித்
திருத்திபெறப் போசனமுஞ் செய்ததிற்பின் றிருக்கரத்தின்
முறித்தெடுத்த வப்பமதைப் பார்த்தினிய மொழிகின்றூர் (23)

ஈதெமது திருமேனி யெனவீய்ந்து முந்திரிகைத்
தீதறுநல் லிரசமிதென் றிருவுதிர மெனவளித்துப்
பேதமற வுமிலொருவ னெமைப் பிடிக்க வருவார்முன்
ஞேதியொப்புக் கொடுப்பனென வுரைத்திட்டா னுத்தமனும் (24)

அப்பமதை யெடுத்துமுறித் தளித்ததுமவ் விரசத்தைச்
செப்பியது மேதெனிற்றன் றிருமேனி தனிலினிமே
லொப்பரிய பாடுகள்பட் டொடிந்துதிரஞ் சிந்திடுத
லிப்படியென் றறிவித்தற் கேதுவெனக் காண்குதியால் (25)

இதன்பெயர்நற் கருணையென வின்றுமினி மேலுமியாஞ்
சுதன் றிருமே னியுமுதிரத் தோற்றமுமாய்ப் பிதாபரற்கற்
புதந்தருபூ சனையாக வேதித்துப் புசித்துயிரை
யதன்பொருட்டால் வளர்ப்பதுநன் கடைவதுமென் றறிவாயால் (26)

அத்திருச்சக் கரமேந்தாந் தேவதிர வியத்தடுக்கை
யொத்திருக்க வுரைத்தபின்ன ரதனுட்ப மோர்ந்திடுவை
தொத்திருக்கு மலர்க்கெற்சே மினியவெனுஞ் சோலையினங்
கத்தனுக்கு வந்தடுத்த காரியத்தைக் கட்டுரைப்பாம் (27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிவரை யூதர்குலத் தவரிறைவன் சுதனெனவு
மெங்கொடுமைப் பெரும்பாவ விடர்தீர்க்குங் குருவெனவுந்
தங்கண்மனத் தறிந்துமறி யார்போலத் தவறுரைத்துப்
பங்கமுறுத் துவகுறித்து வயிரமே பற்றினரால் [28]

பொங்குதிரைக் கடலாடைப் புவிக்குநன்மை பூப்பவுமவ்
வங்கிஷமங் குற்றுலைந்துவருந்தவுமென் றிருந்தபடி
யங்கவரிற்பிரதான குருவாகு மானசும்
வெங்கொடுமைக் கைப்பாசுமிவரைவிரோ தித்திருந்தார் [29]

இருந்துதங்கள் பெருமைதனக்கிவனிடை யூறெனவெண்ணிப்
பெரும்பகை கொண் டிருப்பவெங்கள் பெருமானுந்துணிபருவம்
பொருந்திடுகா றும்புவிக்குப் போதகங்கள் போதிப்ப
வருந்திநடந் தன்றந்த மலர்க்காவின் மேவந்தே [30]

மானுக்கர் தமையொருபால்வைத்தொரு பாலெவரேனுங்
காணுக்கண் மருவிமுழங்காலினிருந் திருவிழியுஞ்
சேணுக்கித் தேவபிதாபரன் றனையே செபித்தன்பு
பூணுக்கண் ணீரிறைப்பமெய்சோரி பொடித்தனவால் [31]

மும்முறையுந் தியானித்து முடிந்ததற்பின் சீடருக்குள்
வெம்மனங்கொள் சூதசெனும்வெய்யோன்முப் பதுவெள்ளி
கைம்முதலா யவர்கொடுப்பக்கைக்கூலி கவர்ந்திறைவன்
றம்மையொப்புக் கொடுப்பவந்துசார்ந்தனர் சேவகரீட்டம் [32]

வந்துவனை ந் தெம்பரனைப் பிடித்துமட்டி றுயர்படுத்தி
முந்தமுந்தக் கைப்பாசா னுசுமுன்றிற் கொடுசென்று
சிந்தைதனக் கிசைந்தபடி தீமையெல்லாம் புரிந்ததற்பி
னந்தநகர் தனையாளும் பிலாத்துபாற் கொண்டணைந்தார் [33]

அவன்முன்னே செயற்கரும்பல் லவமானங் களுஞ்செய்திங்
கிவனையின்றே ரோதையிடங் கொடுபோமென் றியம்பவவர்
புவனந்தந் தாதியைமுன் போவென்னத் தள்ளிவெகு
கவனங் கொண்டிட நடத்தியவன்முன்னே காண்பித்தார் [34]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவன்பாற் கொண்டுசென்று மல்லாத பங்கமிகப்
படுத்திமறு படியும்பிலாத் தூசுபா லனுப்பவவன்
றெடுத்தபிழை யிவர்மேற்றோன் றிலகண்டு மிவரிரங்கி
விடுப்பரெனக் கணித்தடிக்கும் படிக்குவிடை கற்பித்தான் [35]

கற்றூணிற் கட்டிமனங்களிகூர வவரவரே
மற்றூன முடலில்லை யென்னவலி தாயடித்துச்
சற்றேனு மனவிரக்கஞ் சாராதெம் பவவிருள்க
ளற்றேக வோரையா யிரச்சின்ன மடிபட்டார் [36]

அடிபட்ட திருமேனிகண்டவர்க ளகநெக்குப்
படிபுக்கு வீழ்வதல்லா லெதிர்பார்க்கப் படுங்கொல்லோ
முடிதொட்டுப் பதமளவாய் மூடிவெகு சோரியுக
வடுவுற்ற வுடல்கண்டா விரங்கிடுவ ரெனமதித்தே [37]

ஈதோமா னிடனென்னப் பிலாத்துவவர்க் கெதிர்காட்டச்
சூதேய சாதியுள்ள செனமெல்லா மொருசொல்லாய்த்
தீதேசெய் திடும்வறவா சினைவிட்டுச் சேசுவெனு
மாதீயன் றனைச்சிலுவை மரத்தறைந்து கொல்லுமென்றார் [38]

அப்போது பிலாதூசங் கவர்பேரிற் குற்றமொன்று
மொப்போடு காண்கிலனென் றுரைசெய்ய மீண்டுமவ
ரெப்போதும் யூதர்தமக் கிராயனா யிருப்பேனென்
றிப்போதி யேசுநச ரேனுவிசைத்தா னென்றார் [39]

யேசுவைநீர் விடுத்தீரே லெம்பரதோர்க் குத்தரிப்பீர்
மோசமில்லை யென்றுரைத்த சத்தமாய் மொழிந்ததுகேட்
டாசுமென்மேற் குற்றமில்லை யென்றுதன்கை யகங்கழுவிக்
கூசாதிங் குமக்குவப்ப புரிமின்களெ னக்கொடுத்தான் [40]

ஆங்கவர்கள் கொடுசென்றெம் மாண்டவன்றன் றிருத்தோளிற்
றாங்கரிய சிலுவைமரந் தனைச்சுமத்திக் கல்வாரி
யோங்கலின்மே லிருகள்வர் நடுவறைந்தங் குயர்த்தியபின்
னீங்கரிய துயர்தீர்ப்பா னெடுந்துயர மெய்துற்றான் [41]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருளப்பன் னூறெரிக்கும் திருச்சுதனைச் சிறைப்படுத்தி
மருளப்புன் றெழில் யூதர் கொடுசென்ற வாறறிந்து
வெருளப்ப னுதிப்பகழி பாய்மயிலின் மெலிந்தன்னை
யருளப்பனு டன்மாதர் சிலர் தொடரவங் கடைந்தான் [42]

உருகியழு தெதிர்வந்த தாயரைக்கண் டுளநெக்குற்
றிருகண்மலர் நீர்சோர விவனேயுன் மைந்தனென
வருகுநின்ற யுவானியைச் சொற் றவன் றனையும் பார்த்தன்பு
பெருகியவென் ருய்நின்ரு யாகவெனப் பேசியபின் [43]

சிலுவைமரத் திருந்திந்தச் செகதலத்தோர் தமக்காகப்
பலவுமிரந் திரக்கமுறீஇப் பகர்ந்துபா னுடன் வேண்டி
வலுவுரத்த வசனத்தென் பிதாவேயென் னுத்துமத்தை
நலிவறவுன் கரத்தளித்தே னென நவின்று துஞ்சினனல் [44]

*வேறு*

வானவரு மருந்தவரு மறையவரு மலர்ப்பதங் சாணரியமைந்தன்
மானமிகு சிலுவையின்கண் மரித்தது கண்டாவிரங்கார்
[வையத்துண்டோர்
பானுமறைந்தது படியும்பரவையுமே பதைத்த பருப்பதமுங் கீண்ட
ஞானபரன் றிருக்கோயிற் றிரைப் பரிவட்ட முநடுவே கிழிந்து
[நான்ற! [45]

[ திருச்செல்வர் காவியம் — இஃது யாழ்ப்பாணம் தேல்லியம் பதியில் வசித்திருந்த பூலோகசிங்க அருளப்பநாவலரால் இயற்றப்பட்டது. இதிற் கூறப்பட்டுள்ள கதை பின்வருமாறு:- சிந்து தேசத்திலே, செங்கோல் செலுத்திய அபினேர் என்னும் அஞ்ஞான அரசனுக்கு திருச்செல்வராயன் மைந்தனுய்ப் பிறந்தான். பிறந்து இளமையிலேயே அற்புதமாய்ச் சத்திய வேதத்திற் சேர்ந்தான். அதனுல் நேரிட்ட தடைகளைக் கடந்தான். பின்னர் தனது தந்தை முதலியோரையும் சத்திய வேதத்துட் சேர்த்து ஈற்றில் வனஞ் சென்று தவஞ் செய்தான்: மோட்ச பாக்கியம் பெற்ருன் திருச்செல்வராயன் கதையை "அர்ச்சியசிஷ்ட தமசேனு அருளப்பர் கி. பி எழுநூற்று முப்பத்து மூன்ரும் ஆண்டிலே மகாத்துமாக்கள் சொல்லக் கேட்டதாய் எழுதி வைத்தனர். சரித்திரத்தைச் சத்தியவேதக் குருமார் தமிழில் மொழி பெயர்த்துக் கொடுக்க, அச்சரித்திரம் உண்மையும் மிக உருக்கமுமுள்ளதென மதித்து. அதனை ஒரு காவியமாய்ப் பாடின் யாவர்க்கும இன்பமும் சுவையுமாயிருக்குமென நினைந்து, கல்வி கேள்விகளில் முதிர்ந்தவரும் கவிச்சிங்கருமாய் யாழ்ப்பாணம் தேல்லிமா நகரில் வசித்த பூலோகசிங்க முதலியார் என்னும் பெயருடைய அருளப்ப நாவலர் யாவரும் மெச்சச். சொற்சுவை பொருட்சுவை செறிய இனிய காவிய ரூபமாக்கினர்;" என்று திருச்செல்வர் காவியத்தின் முதலாம் பதிப்பின் (1896) முகவுரையில் சொல்லப்பட்டுள்ளது. இதிலுள்ள விருத்தங்கள் 1946.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. இராமோதந்தம்

## யுத்தகாண்டம்

சுக்கி ரீவனு மநுமனு மராமரந் துளைத்த
அக்கு மாரனுந் தம்பியு மமரிடை வந்து
புக்க வெந்திற லரக்கரை வேரொடும் போக்கி
மிக்க வீரமுங் காட்டினர் தேவர்கள் வியப்ப (1)

அன்ன போதினி லிந்திர சித்தெனு மடலோன்
மன்னன் மைந்தரா மிராமலக் குவர்களை வன்மை
துன்னு நாகபா சத்தினாற் பிணித்தனன் றொடர்ந்து
பன்ன காரிவந் ததன்வலி தொலைத்தனன் பறக்க (2)

சம்பு வெள்ளியம் பொருப்பினை யெடுத்தவன் சலியா
தம்பு வில்லிடைப் பூட்டியே யமரிடை யெதிர்த்துத்
தும்பை சூடிய ராக்வன் பொருதிடத் தொலைந்து
கும்ப கன்னனைத் துயிலெடுத் தேவினன் கொதித்து (3)

பன்னும் போரினி லரக்கர்கள் பலரொடும் வந்து
துன்னி வானர வீரரைத் தொலைத்துணுங் கும்ப
கன்ன னுருயிர் நீங்கிடக் கடிதினிற் றொலைத்தான்
முன்னம் வாலியை மார்பகந் துளைத்திடு முதல்வன் (4)

தீய விந்திர சித்துபின் போரிடைச் சேர்ந்து
சேய தாமரை யாசனன் படையினைச் செலுத்தித்
தூய ராமனைத் தம்பியை வானரத் தொகையை
மாய மாகவே மயக்கின னறிவெலா மாள (5)

சண்ட வாயுவின் றிருமகன் வடதிசை சார்ந்து
கொண்டல் சேர்வுறு மருத்துமா மலையினைக் கொணர்ந்து
மண்டு மோகநீத் தவரெலாம் வாழ்ந்திடச் செய்து
பண்டு போலவும் மலையையும் வைத்தனன் படர்ந்து (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நி லத்தினி னிகும்பலை யெனுமிடங் குறுகிப்
பன்னும் வேள்வியொன் ருற்றின னிந்திரன் பகைவன்
சொன்ன வீடணன் றன்னெடுஞ் சுமித்திரை மைந்தன்
அன்ன வேள்வியை யழித்தபின் னவனையு மழித்தான் (7)

வேட்ட வேள்விபோய் மைந்தனும் விளித்திடுஞ் செய்தி
கேட்டி ராவணன் கோபதா பத்தொடுங் கிளர்ந்து
தீட்டும் வெஞ்சரஞ் செலுத்திவா னரங்களை வருத்திப்
பூட்டும் வார்சிலை யிராமனே டருஞ்சமர் புரிந்தான் (8)

வெருவும் போர்பல விராமனும் வியந்திட வாற்றிப்
பிரமன் வெம்படை விட்டிரா வணன்முடி பிறங்குஞ்
சிரமெ லாமறுத் தொழித்தனன் செயசெய வென்றே
விரியும் பூமழை விண்ணவர் சொரிந்தனர் வியந்து (9)

[இராமோதந்தம் — இயற்றிவர் சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவர். இராமோதந்தம், இராமபிரானுடைய சரித்திரத்தை வடமொழியிற் சுருக்கமாகக்கூறும் நூலாகும். அதையே புலவர் அவர்கள் தமிழில் மொழி பெயர்த்துச் செய்யுள் வடிவில் தந்துள்ளார்]





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. பிள்ளைத்தமிழ்

குவலயத் தவரன்பு கொண்டாட வண்டாடு
குளிர்மலர்ப் பொழில்க ளாட
கோலமயி லாடவய னீடுகுயி லாடநெற்
குலைகல கலென்ரு டிடக்
கவலையற் றிடுமாயர் களியாட விளவாளை
களினீடு தளிர்க ளாடக்
காராடு மொய்குழலி ஞராட வழகனைய
கழிநீடு தளிர்க ளாடத்
தவில்முர சடித்தும்பர் சபையாட நவகோடி
சனமாட விளமைகொ ணிலத்
தண்ணிழல் பரந்தாட விண்மணி யொடுங்கிரண
தாரகை தயங்கி யாடத்
திவலையமு தைப்பருகு தெய்வீக பாலனே
செங்கீரை யாடி யருளே
திருமருவு பரமகனி மரியுதவு பாலனே
செங்கீரை யாடி யருளே!

— பாலன் பிள்ளைத்தமிழ்

பவளத் தியற்றுங் கலசமிசைப்
பன்னீ ரதனு லுலைவார்த்துப்
பதுமராக வடுப்பில் வைத்துப்
பகருங் கனகத் தழல்கொளுத்திப்
திவளும் வைர விறகடுக்கிச்
திறந்த தவள வரிசிபெய்து
சேர வடித்து நீறணிந்து
செவ்வே யிறக்கிப் பசுங்கிரணம்
தவழும் பச்சை யிலைமீது
தயங்கப் படைத்துச் சராசரங்கள்
தழைக்க வளர்க்கு மருட்கௌரி
தகைசேர் நெல்லிய வோடைவளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவளை விழிச்சி மெய்ஞ்ஞானக்
கொழுந்தே சிற்றில் சிதையேலே
குன்ற முலைச்சி மாரியம்மாள்
கோதாய் சிற்றில் சிதையேலே

— நேல்லியவோடை அம்மாள் பிள்ளைத்தமிழ்

[பிள்ளைத்தமிழ் - பிள்ளைத்தமிழ் 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. இது ஆண்பால் பிள்ளைத்தமிழ், பேண்பால் பிள்ளைத்தமிழ் என இரு வகைத்து. காப்பு, சேங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில், சிறுதேர் ஆகிய பத்துப்பருவங்கள் ஆண்பால் பிள்ளைத் தமிழிலும், இவற்றுள் இறுதி மூன்றை நீக்கி அவற்றிற்குப் பதிலாக நீராடல், அம்மானை, ஊசல் என்னும் மூன்றும் சேர்த்துப் பேண்பால் பிள்ளைத்தமிழிலும் கூறப்படும். கடவுளையேனும், பேரியோரையேனும், குழந்தையாகப் பாவித்து மேற்சொன்ன பருவங்கள் அமையப் பாடுவதே பிள்ளைத்தமிழ் எனப்படும்.

பாலன் பிள்ளைத்தமிழ் - இயற்றியவர் பிரான்சிஸ்குப்பிள்ளை. யாழ்ப்பாணம், மயிலிட்டிக் கோயிற்பற்றிலே வயவிளான் குறிச்சியில் வாழ்ந்தவர். கத்தோலிக்கர். முழுப்பிள்ளைத்தமிழும் கிடைப்பதாகத் தெரியவில்லை.

நேல்லியவோடை அம்மாள் பிள்ளைத்தமிழ் - இயற்றியவர் அச்சுவேலி வைத்தியநாதச் சேட்டியார்.]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. கிள்ளைவிடுதூது

சீர்தங்கு தெள்ளமுதுஞ் செந்திருவு மைந்தருவுங்
கூர்தங்கு நாற்கோட்டுக் குஞ்சரமு — மோர்தங்கும்
ஆரத் தனத்தே வரம்பையரும் வந்துதித்த
கீரக் கடற்றோன்றுங் கிள்ளையே — பாருலகில்
இந்துதவு நன்னுதலார்க் கின்பமுடன் தூதுபோய்
வந்துதவுங் கிஞ்சுகவாய் வன்னியே — நந்துதவு
முத்தே நவமணியே மோகமட வாருயிரின்
றத்தே தவிர்க்கவருந் தத்தையே — கத்தரிகள்
கள்ளையயில் பைம்பூங் கணைக்காம வேளேறக்
கிள்ளையாய் வந்தபசுங் கிள்ளையே — தெள்ளுபுனல்
ஆட்டிப்பா ராட்டி யமுதூட்டிச் சீராட்டிக்
கூட்டி லுனையிருத்திக் கோதாட்டி — நாட்டமுடன்
என்போ லிகழ்ச்சிசற்று மில்லாம லென்னிரண்டு
கண்போல் வளர்த்த கடன்றீர — நண்பாகத்
தக்கசந்த மார்பகத்துச் சாமிகுரு நாதன்பான்
மிக்கசந்து போய்மீள வேண்டுங்காண் — புக்கதுயர்
மன்றன் மலரன்ன மருவுகுயில் வண்டுவிண்டு
தென்றல்பயில் பூவையுடன் செப்பேன்காண் — முன்றனியே
மாரூருங் கொங்கைமுலை மங்கை மணவாள
ஞரூருஞ் செஞ்சடையா ஞரூரிற் — றேரூரும்
வீதி தனின்முனிவர் விண்ணோ ரதிசயிப்பப்
பாதிமதி நெற்றிப் பரவைபா — லோதியுணர்
சுந்தரற்காத் தூதுபோய்ச் சொல்லித் திரும்பிவந்தா
னிந்தக் கதைகேட்ட தில்லையோ — முந்தொருநாட்
பாண்டவர்க டங்கள் பகைமுடிக்கப் பாஞ்சாலி
கூண்ட கரிய குழன்முடிக்க — நீண்ட
திருமாலைச் சக்கரக்கைத் தேவைக் குவளை
யருமாலை சூட்டி யனுப்பக் — குருகுலத்துத்
தூண்டு பரித்தேர்ச் சுயோதனன்பாற் றூதாகி
யாண்டுபோய் மீண்டுவந்த தாய்ந்திலையோ — மாண்டகைய
சித்திரப்பொற் பாவைநிகர் சீதை துயர்தீர்க்கப்
பத்திரதன் புத்திரன்றன் பண்டனுப்ப — வத்திரநேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சனக்க ணஞ்சனைசே யஞ்சாதீ ரஞ்சுமுக
வஞ்சகன்பாற் றூதுபோய் வந்திலனோ — கஞ்சமலர்க்
கண்ணு யிரமுடையோன் கற்பிக்கப் பொற்கழற்கா
ணண்ணார் பரவு நளராசன் — பெண்ணாள்
அமுததம யந்திதன்பா லன்று மறுக்காமற்
சுகமுடனே சென்றிலனோ தூது — குமுதவிதழ்
மாதருயிர் காக்க வரும்புண் ணியமிதனை
லேத முறுமிழிபொன் றில்லையே — யாதலினால்
தாதூது வண்டுமுர ருர்வாங்கப் பைங்கிளியே
நீதூது செல்ல நினைந்தருள்வாய் — மீதாரக்
கண்ட விறும்பூதெனது காதலளித் தோன்றகைநாட்
கொண்ட துயர்விரகங் கூறக்கே — ளண்டர்புகழ்
தெல்லிநகர் மாவையூர் சேர்ந்தபழை செங்கமல
வல்லியிருந் தேவாழ்வீ மன்காம — நல்லளிகள்
கீதமுறுஞ் சோலைக்காங் கேயன் றுறைதேவர்
காதல் புரிவளமைக் கட்டுவனூர் — சீதமலர்
மன்னு மயில்வாழ் மயிலை வயவிளான்
பன்னுபுக ழுற்ற பலாலியூ — ருன்னரிய
புண்ணியமு மிக்க புகழும் படைத்ததனுன்
மண்ணின் மிகுத்த வறுத்தலையூ — ரெண்ணரிய
தன்மமுடன் செல்வமிகுந் தையிட்டி யிவ்வூரிற்
சன்ம மெடுத்த சனங்களுக்கும் — பொன்னினுடன்
துய்யமுப்பா லாறுவினை சோறுதவி யாங்கவர்க்கு
வெய்ய பிணிநோய் விலக்கியே — யையமறக்
கேட்டவர நல்குங் கிருபைச் சமுத்திரமாங்
கோட்டமதில் வாழுங் குலதெய்ய — நீட்டுங்
குளகார் மதகரட குஞ்சரங்கண் மேவும்
அளகா பதிபுரக்கு மண்ணல் — வளமார்
விரிச்சிக மாமுனிவன் மெய்த்தவத்தா லீன்றேன்
விரிச்சி கனை நிகர்க்கும் வேந்த — னரிப்பரிகள்
கொண்டுவந்த சொக்கனுறை கூடற் றிருப்பதியிற்
பண்டு படிபுரந்த பாண்டியன்றன் — றிரண்டுபுரிந்
தச்சந் நிதியடைந் தங்கயற்க ணம்மைதிருப்
பச்சென்ற மெய்யழகு பார்த்துமன — மிச்சையுற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னவடன் கோபாக் கினிப்பொறியொன் ருங்கவள்கண்
டன்னி லெழுந்து தழைமாவின் — வன்னிவடுத்
தங்கி யிருந்துமுற்றத் தான்பறித்தோர் தாளில்வைக்க
அங்கதுதான் பெண்குழவி யாய்த்தோன்றத் — திங்கள்குல
மீனவனுக் கிந்த விதமுரைப்ப நற்கணித
ரானவரை யெல்லா மருகழைத்திட் — டீனமுறும்
உற்பாதம் போலிவ் விறும்பூதே தோதுமெனப்
பொற்பாதம் போற்றிப் புகன்றிட்டார் — நற்பாரின்
மன்னவனே மீனவனே மாறனே கைதவனே
தென்னவனே பஞ்சவனே செப்பக்கே — ளிந்நகரில்
இப்பெண் மகவிருக்க விந்த நகருமுன்றன்
செப்புங் குலமுஞ் சிதையுமென்ன — வப்பொழுதே
சோலைமரப் பேழையொன்று சோடித் ததிலிருத்தி
வேலை தனின்மிதப்ப விட்டிடுமக் — காலைதன்னிற்
தாவுந் திரைக்கரத்தாற் ருங்கிச் சலதியன்னை
பாவுபுகழ்க் காவிரிப்பூம் பட்டினத்தி — லேவிவிட
மாநாக னென்னும் வணிகன் மகிழ்ந்தெடுத்து
மானார் விழியை வளர்த்துமனை — மானுக
மன்னைநிகர் மாசாத்தர் மைந்தற்கு நல்கியபி
னன்னவனே டன்பா யமருநாட் — கன்னன்மொழி
வஞ்சியிடை மாதவிமேன் மாலாகிக் கோவலன்கை
விஞ்சும் பொருடோற்று விட்டதற்பின் — றஞ்சமின்றிக்
கண்ணகியார் காலிற் கனகச் சிலம்புவிற்பா
னெண்ணமாய்க் கூடனகர்க் கெய்துதலும் — வண்ணப்
பரிபுரத்தைச் சோரமிட்ட பட்டியென்று கொண்டே
உரியபொன்செய் கொல்ல னுரைப்ப — விரிவுபெறத்
தேராம னீதி திறம்பி வழுதியருள்
கூராமற் கோவலனைக் கொல்லுவிக்கப் — பார்மீதிற்
பொற்புமிகுஞ் சாலிமுதற் பூவையரெல் லாம்புகழுங்
கற்புமிகு மன்னையெங்கள் கண்ணகிதா — னெற்பொருவும்
ஒற்றைமணி நூபுரத்தை யொண்கரத்தி லேந்தியிருட்
கற்றைக் குழல்விரித்துக் கண்சிவந்து — கொற்றமிகு
முன்னவனை முன்னுண் முகிலை விலங்கிலிட்ட
மன்னவனை முன்னம் வழக்கில் வென்று — பின்னர்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிபுரத்தைச் சுட்டசிவன்போற் சினந்து
பரிபுரத்தை விட்டெறியப் பாரி — னெரிபரந்திட்
டந்த மதுரைநக ரப்பாண்டி யன்முதலோர்
வெந்து வெந்து நீருகி வீந்திட்டார்.

தூது — தமிழ் மொழியில் உள்ள தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களுள் தூது என்பதும் ஒன்று. அது தலைவன் தலைவியருள் ஒருவர் மற்ருெருவர்பால் தமது வருத்தத்தைத் தெரிவிக்கும்படி உயர்திணைப் பொருள்களையேனும் அஃறிணைப் பொருள்களையேனும் தூது அனுப்புவதாகப் பாடப்படுவது. தூதாகச் செல்வதற்குரிய பொருள்கள் அன்னம், மயில், கிள்ளை, குயில், மேகம், தென்றல், பாங்கி என்ப.

[ கிள்ளைவிடுதூது — இதைக் குருநாதசுவாமி கிள்ளைவிடுதூது என்றழைப்பர். இயற்றியவர் யாழ்ப்பாணத்துச் சுன்னுகம் வரதபண்டிதர். இக் கிள்ளை விடுதூது காங்கேயன்றுறையைச் சேர்ந்த " கண்ணியவளை " என்னுமிடத்திலெழுந்தருளிய குருநாதசுவாமீது இயற்றப்பட்டது].



# 12. மேகதூதக்காரிகை

*இயக்கன் வரலாறு*

பொன்கொண்ட சீரளகேசன் சபிக்கப் புலர்ந்தொரியக்
கன்கொண்ட மேன்மையும் நீங்க மனைவியுங் கையகல
மின்கொண்ட சீதையும் ராமனும் வாசம் விரும்புபொழிற்
றென்கொண்ட சித்திரகூட பருப்பதஞ் சேர்ந்தனனே! (1)

*தூதுவேண்டல்*

சந்தாப வெந்தழ லுற்றூர்க் கினிமை தருமுகிலே
மந்தார மேவும் பொழிலளகேசன் மனக்கொதிப்பால்
வந்தே னுரைக்கு முரையைப் பிரிந்த மனையவட்குச்
சந்தாகிச் சென்றங் குரைத்துத் துயரந் தணிக்குவையே (2)

*இயக்கன் மனைவியிலக்கணம்*

முற்றா வயசினள் சிற்றிடைதாங்கி முலைச்சுமையாற்
சற்றே வளைந்தவள் கெம்பீர நாபித் தடமுடையாள்
பற்றூர் நிதம்ப கனத்தாற் பயப்பயப் பாங்குறுவாள்
பொற்றா மரையோன் சிருட்டியின் முன்னிற்பள் பொன்முகிலே (3)

மெல்லிய மேனியன் வெண்முத் தடர்ந்து மிகச்சிறுத்த
பல்லினள் பக்குவமாகிய கொவ்வம் பழநிகர்க்கும்
புல்லிய வாயின ளஞ்சிய மான்விழி போலுமெழிற்
சில்லரி நோக்கினள் மாதர்க்கரசி செழுமுகிலே (4)

*சோகம்*

தேகம் பசந்து பணியுந் தொலைந்து தினந்தினமுஞ்
சோகம் வளர்ந்து பலமுறை பாயல் தொடர்பவளைப்
போகும் புயலே யெதிர்ப்படும் போது புலர்ந்துகண்ணீர்
ஏகும் படிசொரி வாய்நின் மணமு மிளகிடுமே (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மனைவியை முன்னிலையாக்கிச் சொன்னது*

கண்டேன் பலினிக் கொடியிலுன் மேனியைக் கண்கள்வெரு
வுண்டேகு மான்கணிற் கண்டேன் முகத்தை யுவாமதியிற்
கொண்டேன் குழன்மயிற் பீலி புரூஉத்திரை கொண்டறிந்தேன்
சண்டி யுனக்கொப் புரைப்பவர் யாவர் தரணியிலே 6)

*உயிர்தாங்கிய அருமை*

சத்திய மாகவென் சாபம் முடிந்தபின் தையனல்லாய்
உத்தம மான பலகரு மங்க ளுஞற்றுவனென்
றித்தனை நாளு முயிர்கொண் டிருந்தன னின்பதுன்பஞ்
சித்திரத் தேருருள் போல்வரு மாறுந் தெளிகுவையே (7)

*முடிந்தது முடித்தல்*

மேலுரை செய்தன யாவையுஞ் சொல்லியென் மெல்லியலைச்
சீலியைக் கற்பினிற் சாலியைத் தேற்றித் திருந்துமவள்
பாலிருந் தோர்குறி பற்றிக் கயிலை படிந்துதங்கிக்
காலையில் வந்தென் னுயிரையுங் காக்குவை கார்முகிலே (8)

— மேகதூதக் காரிகை

[மேகதூதக் காரிகை – இயற்றியவர் சுன்ஞகம் அ. குமாரசுவாமிப் புலவர். காளிதாச மகாகவி வடமொழியில் இயற்றிய மேகசந்தேசத்தின் மொழிபெயர்ப்பாகும் இது. இம்மேகதூதம் பூர்வமேகம், உத்தரமேகம் என இருவகைப்படும்.]





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்தைவிடு தூது

தேனேங்கு பூம்பொதும்பர்ச் செறிந்தபசுந் தழைபரப்பி
வானோங்கு தேமாவில் வாழுமிளம் பைங்கிளியே
மானேங்கு மைவிழியென் வஞ்சியிடைப் பைந்தொடிபால்
நானிங்கு புகலுமொழி நற்கிளியே கூறுயே
நங்கையவள் பாற்சென்று நலம்பெறநீ கூறுயே (1)

மல்லிகைசண் பகங்கோங்கு மந்தாரை வெட்சியுடன்
புல்லினமும் பலவளரும் பூம்பொழிலி லக்காலம்
மெல்லமெல்லப் பந்துகொடு விளையாடுங் காலவடாய்
சொல்லியது மறந்தனளோ சுகமே வினவுதியால்
தோகையெனைத் துறந்தனளோ சுகமே வினவுதியால் (2)

மூடருக்கும் பேடருக்கும் முதியோர் மெலியோர்க்குந்
தேடருநல் விரத்தினம்போற் றெரிவையரைச் சேர்த்துவரேற்
பீடுடைய கல்விநலம் பெற்றிருக்கும் வாலிபர்யாம்
வேடுவரை வேட்பேமோ விளம்பாய் பசுங்கிளியே
விரும்புவமோ சந்நியாசம் விளம்பாய் பசுங்கிளியே (3)

தந்தையொரு வன்மகற்குத் தான்விரும்பு மோர்மகளை
மைந்த மணவெனலும் மைந்தன் வணங்கியெழுந்
தெந்தாயான் வேண்டே னிவளை விரும்புதியேல்
தந்தாய் மணத்தியெனச் சாற்றினனென் றேயுரைப்பர்
தையலிட மிக்கதைநீ சாற்றுதியாற் பைங்கிளியே (4)

அன்னமெனு மென்னடையு மஞ்சிறைய மயிலொயிலுஞ்
சின்னக் கொடியிடையுஞ் செவ்வாய்க் கிளிமொழியுஞ்
சன்னச் சிலம்பொலியுந் தளவ நறுமணமும்
நன்னர்ப் பசுங்கிளியே நானே மறவேனல்
நங்கைவடி வங்கிளியே நானே மறவேனல் (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்கலர்பூஞ் சோலைவளர் மாங்கிளியே கோதையிடம்
நங்காய்நிற் காதலித்தே நலிவான் மெலிவானல்
தங்கா துயிரென்ருன் தானின் சரணென்ருன்
நங்கா யிரங்கெனவே நவில்வாய் பசுங்கிளியே
நாரியர்பா லென்னிலையை நவில்வாய் பசுங்கிளியே (6)

— தத்தைவிடு தூது

[ தத்தைவிடு தூது — இயற்றியவர் திருகோணமலை த. சரவணமுத்துப்பிள்ளை. இவர் தி. த. கனகசுந்தரம்பிள்ளை அவர்களின் சகோதரராவர்.]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. கோவைப் பாட்டு

தேருங் கடலு மமிர்தமுந் திங்களுஞ் செய்யமின்னுங்
காருஞ் சுமந்த மணிவல்லி யொன்று கனகவல்லி
சேரும் ப்ரதாபன் கரவையில் வேலன் சிலம்பில்வண்டுந்
தாருஞ் செறியும் பசுங்காவி னின்று தயங்கியதே (1)

கங்கா தரன்சிலை யோரத மோகவி னும்பணியோ
வெங்காள போசன சாலைய தோவியன் முத்தமிழும்
மங்காது வந்த கரவையில் வேலன் வரையிலிசை
சிங்கார வல்லியர் வாழ்பதி யாதெனத் தேர்கிலமே (2)

பூவென்ற மாலிலங் கேசனை நாளைக்குப் போர்புரிய
வாவென்ற வீரன் கரவையில் வேலன் மகீபதிமேற்
பாவென்ற வாணிப் பவளச்செவ் வாய்மடப் பாவையிவ
ளேவென்ற காதள வோடிய பார்வை யிமைக்கின்றதே (3)

மருநோக்கும் வண்டறை யைம்பா லளக மடந்தைகண்ணி
லிருநோக் குடையது காணெஞ்ச மேயிரு நோக்கதனி
லொருநோக்கு நஞ்ச மொருநோக் கமிர்த முயர்பதுமத்
திருநோக்கு மார்பன் கரவையில் வேலன் சிலம்பகத்தே (4)

தாளாருஞ் சீத வசனப் பிராட்டியைத் தண்டுளபத்
தோளான் பிரியினும் யான்பிரி யேன்றுங்க மேழிகொண்ட
வேளாளர் வேந்தன் கரவையில் வேலன் வியன்சிலம்பில்
வாளாருங் கண்ணி பிரிந்து தரிப்பது மற்றில்லையே (5)

பஞ்சேறு சீறடி யார்திருக் கோரம் பயின்றவிழி
நஞ்சேறி யென்னை மயக்கிய வாறறி யாய்நண்பனே
மஞ்சேறு போலுரை யாவிக ழாய்வயன் மாங்கனியின்
செஞ்சேறு சூழுங் கரவையில் வேலன் சிலம்பகத்தே (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெம்பணி கேது விழுங்கும் பிறையன்ன மேற்குருதிக்
கொம்பணி யானையைக் கண்டஞ்சி னேன்குறு கார்குழையிற்
செம்பணி தாங்கச்செய் வேலன் கரவைச் சிலம்பகத்தில்
வம்பணி பூண்முலை வம்பணி வார்குழல் வாணுதலே (7)

— கரவை வேலன் கோவை

[கரவை வேலன் கோவை — இயற்றியவர் யாழ்ப்பாணத்து நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர்]

கோவிந்தனூர் கொண்ட வூணேதுயிலிடமோ குடையோ
மாவிந்த நேர்தடமார் போவுடுவை வளநகர
மேவும்பலா னருளம்பல பூபன் வியன் கிரிவாய்க்
கூவுங் குயின்மொழி யெப்பதியாள் சொல் குறிக்கரிதே (1)

திங்கா ளுடலகந்தேய்வுறமாசுறச் சித்தரைப்போற்
றங்கா மலந்தரமார்க்கந் தவம்புரிந்தா லுந்தமிழ்
மங்கா துடுவைவரு மருளம்பலமன் னன்வரைக்
கொங்கார் குழலிமுகம்போன் மெனநினைக் கூறரிதே (2)

வண்சீருடுவை யருளம்பல மன்மதன் வரைவாய்ப்
பண்சேர் மொழியெப்படி நடந்தாளொரு பாங்கர்மிசைக்
கண்போலுங் காந்தளை யாங்கொரு பூவைகலத்தல்கண்ட
பெண்பா லினளுளம் போலே கொதிக்கும் பெருஞ்சுரத்தே (3)

நந்தாத சீரருளம் பல வேணன்னகுலமலை
மைந்தா பகலுமுன் றந்தை வந்தாரில்லை மைபனிற்ற
முந்தோர டலரிமால்கரி தேடிமுழங்கிருள்வாய்
அந்தோ வடவி தடவி யென்பால் வந்தடைந்தவரே (4)

— அருளம்பலக் கோவை

[அருளம்பலக் கோவை — இயற்றியவர் வல்லுவெட்டி (வல்லிபட்டி) குமாரசுவாமி முதலியார். மதுரைச்சங்கத்தாரால் அச்சிடப்பட்ட தமிழகராதிக்கு ஆசிரியராகிய கதிரைவேற்பிள்ளை இக்குமாரசுவாமி முதலியாருடைய புதல்வராவர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்பட்ட பூட்கைக் குழவியை யீந்தவன் கோலவண்ணைக்
கம்பட்ட கண்டக் கனங்குழை யீர்கருங் குஞ்சியெறி
அம்பட்ட ரோடுகைக் கோளருங் கூடி யடங்கிவிட
வம்பட்ட துட்ட ரடங்கா திடையரை வாட்டினரே (1)

— வண்ணை வைத்தீசர் ஒருதுறைக் கோவை

[வண்ணை வைத்தீசர் ஒருதுறைக் கோவை — இயற்றியவர் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணை க. வயித்தியலிங்கபிள்ளை. ஒருதுறைக் கோவை — (நாணிக் கண் புதைத்தல்) இத்துறைமேற் புலவர்கள் பெரும்பாலும் ஒவ்வோரு செய்யுளே பாடிப்போயினர். அமிர்த கவிராயர் நானூறு பாடினர். வயித்தியலிங்கபிள்ளை நூறு செய்துள்ளார்.]



UNIVERSITY OF CEYLON
11 MAY 1961
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. அந்தாதிப் பாட்டு

கல்வளை யாத விரும்புநெஞ் சேசைகைய ரோடுறவா
கல்வளை யார்சுனை வாயரக் காம்பல்செங் காவியின்பக்
கல்வளை யார நிலாவீச விள்ளுங் களனிசுற்றுங்
கல்வளை யானங் குசபாச மேந்துங் கரன்புகழே (1)

கரும்பனை யத்தனைப் பூவே ழிடந்தசெங் கண்விடைப்பா
கரும்பனை யத்துவக் கீர்த்துடல் போர்த்த கடவுண்மொழிக்
கரும்பனை யத்தர்கை மாங்கனி வாங்கிய கல்வளைமா
கரும்பனை யத்தனை யான்மற வேன்புன் கவிதைகொண்டே (2)

கவிநா யகன்றிடு வாய்க்கிரைப் பண்டங் கறையிரத்தக்
கவிஞ யகன்மக் குடம்பையை வீக்கியென் கண்டபயன்
கவிநா யகன்ஞெரூழும் ராமன் கொலைப்பவங் காய்ந்திடுதுங்
கவிநா யகதிருக் கல்வளை வாழுங் கணபதியே (3)

— கல்வளையமக வந்தாதி

[கல்வளையமக வந்தாதி — இயற்றியவர் யாழ்ப்பாணத்து நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர். சண்டிருப்பாயிலுள்ள புராதன தலமாகிய கல்வளைப் பதியில் எழுந்தருளிய விநாயகர்மீது பாடப்பெற்றது]

கருந்தாதை யன்ன கயவர்தம் மீதிற் கவிதை சொல்லி
வருந்தாதை யா நநன் வேதா ரணியன்வை வேற்குகனைத்
தருந்தாதை தெய்வ மணங்கமழ் சேவடித் தாமரைமேற்
பொருந்தாதை யோநினை வில்லாவென் சித்தப் பொறிச்சுரும்பே
[1]

மின்னஞ்சு கங்கைச் சடாதரன் சத்த விடங்கன்றிரை
வன்னஞ்சு கந்தவன் மாமறைக் காடற்கு மாதொரிராப்
பன்னஞ் சுகமென வேள்கரம காண்டப் பகழியினு
லின்னஞ் சுகமில்லை யென்றத்தை யோது மிளந்தத்தையே [2]

வானப் பிறையையும் வாடைப் புலியையு மையல்செய்யுந்
தேனப் பிறையையுந் தென்றலை யுங்கண்டு சில்லரிக்கண்
மீனப் பிறைக்கு மடமானை மேவிலர் வேடனிடு
மூனப் பிறைச்சிக் குகந்தார் மறைசை யுகந்தவரே (3)

உகந்தா வடிக்கு மிடையர்தம் பாலளை யுண்டுகடற்
சகந்தா வடியனுக் கெட்டாத ஞான தலத்துமுத்திச்
சுகந்தா வடிதமிழ் நான்மறைக் காட துணைவரியம்
பகந்தா வடிசெல் குழையாண் மருவிய பாகத்தனே (4)

பாக னகனி மொழியாய் நினது பனிமுகமாங்
கோக னகநில வுந்துணைப் பானலிற் கோடல்கண்டே
ஞாக நகநிமி ரும்புலிப் பாதரு நாடவன்று
மாக னகநிலை மன்ருடி வேத வனமலைக்கே (5)

— மறைசை யந்தாதி

[மறைசை யந்தாதி — இயற்றியவர் நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவராவர். சிதம்பரம், வேதாரணியம் முதலிய சிவத்தலங்களுக்கு யாத்திரை சென்ற காலத்தில் வேதாரணியேசுவரர் மீது பாடினர் என்ப.]

பாயசங்கண்டு பரியாக்கியத்தபத்தர்க்கினிய
பாயசங்கண்டு நிகர் புலியூரபகையை வெல்லு
பாயசங்கண்டு கரத்தாற் கரியவபாழ்வினைக்குப்
பாயசங்கண்டொடராதெனையாள்க பராபரனே [1]

பரசெம்மலை நிகரும்புலியூரபராபரதா
பரசெம்மலை முகதாரிபங்காள பரிக்கு மங்கைப்
பரசெம்மலை வினையுந்தெறு சூலப்படையவெனப்
பரசெம்மலை மனமேகதியே யம்பலமதற்கே [2]

— புலியூரந்தாதி (யமகம்)

[புலியூரந்தாதி — இயற்றியவர் யாழ்ப்பாணத்து மாதகல் மயில்வாகனப் புலவர். வண்ணார்பண்ணை வைத்தியலிங்கச் செட்டியாரோடு கூழங்கைத் தம்பிரானிடம் தமிழ்கற்றவர். யாழ்ப்பாண வைபவமாலையை ஆக்கியளித்தவரும் இவராவர்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தாடு வான மகளிரைக் காணப் பதைத்துவர்த்தே
சந்தாடு வாகனங் கொள்கதிர் காமத் தனிமருந்தை
முந்தாடு வானரச் சேட்டை மனமுறை முற்றொழித்தே
வந்தாடு வாதசி மாமதி போலென வாழ்த்துதியே [1]

வரக்கா சியிலிறப் புத்திலலை காண்டல் வருமணிக்கோ
புரக்கா சிவணுஞ் கமலைப் பிறப்புப் புகுவதன்றே
யுரக்கா சினைமர மோடிடு மாணிக்க மூர்கங்கையார்
தரக்கா சினிக்கதிர் காம நினைமுத்தி தானெளிதே [2]

— கதிர்காம வந்தாதி

திருத்தங் கிதழி யுடைத்தாமர் தில்லைத் திருச்சபையில்
நிருத்தங் கொளீச ரளித்தமுன் ஞேன்சிர நீண்மருப்பொன்
றுருத்தங் கொசித்த வுணற்செற்ற முன்னே னுறுதுணைகா
மருத்தங் கிணுவையந் தாதியென் வாயில் வருவிக்கவே [1]

— இணுவை யந்தாதி

[இணுவை யந்தாதி — இயற்றியவர் இணுவில் அம்பிகைபாகர்]

காத்தவா னேயிந்தக் காசினி தன்னைநற் காதலொடு
பூத்தவ னேயருள் பூப்பவ னேவெல்லைப் பொற்புரியிற்
சாத்திரி மார்வந்து சாட்டங்க தண்டஞ் செய் தற்பரனே
போத்துறை வாருளம் போகா வடியனைப் போற்றுவையே [1]

— வேல்லை யந்தாதி

[வேல்லை யந்தாதி — இயற்றியவர் மானிப்பாய் ஆணல்ட் சதாசிவம் பிள்ளை. பாவலர் சரித்திரதீபத்தை 1886 இல் எழுதி வேளியிட்டவரும் இவரேயாவர்.

மணியாக வந்தண வனமுடி மாயன் மருகசுப்ர
மணியாக வந்த மருத்தட வேரக வாசவெங்கண்
மணியாக வந்த குகனே பனிமலை மன்னன் தந்த
மணியாக வந்தரி மைந்தா தந்தாள்பத பாரிசமே [1]

— திருவேரகயமக வந்தாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவைய மாவைய முப்புரஞ் செற்றவர் மைந்ததரு
மாவைய மாவைய தாழ்க்கிற் கடிகை வரைநிலைக்கு
மாவைய மாவைய மான்கொள வூன்ஞ மலிநரிக்கா
மாவைய மாவைய வீதோநா னென்று வருந்தினனே [1]

— மாவை யந்தாதி

குதிக்கின்ற வாணவக் கூத்துங் குலநலக் கொள்கைகளு
மதிக்கின்ற மாடமுமாளிகைத் தோப்பு மனைவிமக்கள்
விதிக்கின்ற கட்டளைப் பட்டங்கள் யாவும் விழலெனயான்
மதிக்கின்ற நெஞ்சைத் தருவாய் பழஞ்சிங்கைப் பண்ணவனே

— சிங்கைநக ரந்தாதி

[ சிங்கைநக ரந்தாதி — இயற்றியவர் வண்ணார்பண்ணைச் சதாசிவ பண்டிதர்.]

புழுவும் மலமுஞ் சலமுஞ் சளியும் பொருந்துமிந்தக்
கழிவுற்ற பாழுடம் பைப்பேணி யென்பலன் கண்டனையே
அழிவுற் றிடுபவர் தம்மைக்கண் டேனு மறம்புரியத்
தெளிவுற் றிடுமனம் வாராத தேது தெரிந்திலையே [1]

ஈனம தாய்வலி பேசியுல் லாச வினிமையுற்றும்
மேனி மினுக்கியும் வீரமொ டுஞ்செல்லும் வீம்பர்களே
கூனித் தடியும் பிடித்தே யடிக்கடி குந்திக்குந்திக்
கானில் விழுந்துந் தவழ்ந்துஞ் செல்வோர்களைக் கண்டிடுமே [2]

— சன்மார்க்க வந்தாதி

[சன்மார்க்க வந்தாதி — இயற்றியவர் அச்சுவேலி தம்பிமுத்துப் புலவர்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. சிலேடைப் பாட்டு

எண்ணம் புயத்தா லிசையுங்கா யத்திரியார்
நண்ணுதலால் வேதனு நல்லையே — விண்ணுலவுங்
கங்கை வயிற்றுதித்தார் காதலுளார் போற்குறவர்
மங்கை வயிற்றுதித்தார் வைப்பு. (1)

மெய்ப்புலவ ருள்ளூறலான் மேகமதி லூர்தலா
லொப்புவனை நாயகனு நல்லூரே — யப்புருவ
நஞ்சார் கணியானு னன்கா னவர்முன்பு
நஞ்சார் கணியானு ளுடு. (2)

நத்தமூ ருங்கயத்தா னன்கிளைகொள் பாடலத்தாற்
சித்தசவேள் போலுந் திருநல்லை — முத்தின்
றிருத்தணிகை மாமலையுந் திண்கோட்டிற் காட்டுந்
திருத்தணிகை மாமலையான் சேர்வு (3)

— நல்லைவெண்பா

[ நல்லைவெண்பா—இயற்றியவர் இருபாலைச் சேனுதிராய முதலியார். நாற்பது நாளையில் நன்னூல் கற்றுணர்ந்தவர் என்ப. நாவலர் ஐயா அவர்களுக்குத் தமிழாசிரியர் ]

போய்க்கழனி வித்துநரும் போரரச ருஞ்செவியின்
வாய்க்கவிதை நாடு மயிலணியே — சீர்க்கனற்கு
மாரனெனத் தோன்றினன் வள்ளிக்கு மையல்செய்
மாரனெனத் தோன்றினன் வாழ்வு (1)

மாணிக்க மேடையினும் வண்புலவோர் நாவினுமே
வாணிவந் தோங்கு மயிலணியே — வேணுவைக்கொண்
டாக்குவித்தார் மெய்ய ரபத்தரெனக் கண்ணிடவன்
பாக்குவித்தார் மெய்ய ரகம். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சநடை யாரடியு மம்பகமுஞ் செவ்விய
மஞ்சரியை மானு மயிலணியே — நஞ்சஞ்சு
வைத்தானை வேலினன் மல்குசுரந் தண்ணெனச்செய்
வைத்தானை வேலினன் வாழ்வு. (3)

— மயிலணிச்சிலேடை வெண்பா

[ மயிலணிச்சிலேடை வெண்பா — இயற்றியவர் சுன்னுகம் முருகேச பண்டிதர் ]

மேன்மாடத் தாடியுநீர் விஞ்சுந் தடம்பணையும்
வான்மீனைக் காட்டுதிரு வண்ணையே — மான்வாமச்
சங்கையான் சங்கையான் றன்னையூர் வான்பிரமன்
கங்கையான் கங்கையான் காப்பு [1]

ஏத்து மருத்துவரு மேய்ந்த மணிக்கூடும்
மாத்திரையைத் தேறவுரை வண்ணையே — கோத்திரங்காண்
பெண்ணண் புடையான் பிரதிவிம்பச் சுந்தரன்மேற்
பண்ணண் புடையான் பதி [2]

தெண்டுக்கை வீரர் புயமுந் தெருப்பலவும்
வண்டிக் குலமாரும் வண்ணையே — பண்டைவினை
தீரப் பரசினர் சிந்தையரொன் ருரையடு
வீரப் பரசினர் வீடு. [3]

— வண்ணைச்சிலேடை வெண்பா

[ வண்ணைச்சிலேடை வெண்பா — இயற்றியவர் வேலணையூர்ப் பேரம் பலப் புலவர் ]

அஞ்சநடை யார்கதுப்பு மம்மவிணை யுஞ்செயிரில்
கஞ்சனை கடுக்குங் கதிரையே — விஞ்சுபல
மாயத்தா னுடல் வரைபகவை வேல்விடுமு
பாயத்தா னுடற் பதி. [1]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்ணகையார் கூந்தலிலும் வேடுவர்கள் காட்டினிலுங்
கண்ணி வளைக்குங் கதிரையே — நண்ணுங்
கருமாயச் சூரறுத்துக் காப்பான்கூர் வேலாற்
கருமாயச் சூரனுத்தான் காப்பு. [2]

இந்துவத னத்த ரிளமுலையும் வீரர்களும்
கந்துகத்தே ரேரட்டுங் கதிரையே — முந்தும்
பவமா வினையிடித்தான் பாதனலை மேலுற்
பவமா வினையிடித்தான் பற்று. [3]

— கதிரைச்சிலேடை வெண்பா

[ கதிரைச்சிலேடை வெண்பா — இயற்றியவர் நவாலியூர் க. சோமசுந்தரப்புலவர்.]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. பள்ளுப் பாட்டு

மாறுகண்ணுஞ் சோகிப் பாகிற் பல்லி னழகுஞ் — சுத்த
மாவளந்த நாழிபோலே வாயி னழகுஞ்
சீறுசளி யாற்பெருத்த துள்ளு நாசியுங் — கொட்டை
திரித்த பருத்தியின்பைக் கூறை வயிறுங்
கீறிவேறு தசையொட்டி வைத்தி டுகாதுஞ் — சற்றே
கிடுகுகட்டிப் பெற்றமுட்டிக் காலு மாகவே
ஆறுமுக வேலர்துணை யார்வ டிவமோர் — பதி
ஞறைஞர்பண் சேரும்பண்ணைக் காரஞர் வந்தார் (1)

காதளவு சென்றவிழிக் கஞ்சனந் தீட்டி — மலர்க்
காந்தளங்கை யாடகம்பொற் சூடகஞ் சூட்டித்
தாதளவு கோதைக்குமென் கண்ணியுஞ் சூட்டி — முலைச்
சந்தனச்சே ருட்டிநறுங் குங்குமங் கோட்டிச்
சோதிமணி நீலமயில் போலியல் காட்டி — மரைச்
சுந்தரச்சீ றடியிற்செம் பஞ்சுவைத் தூட்டி
ஆதிபரஞ் சோதிநாத வேதகீதனர் — பண்ணை
யாண்டவரைக் கண்டுதொழ வாரும் பள்ளீரே (2)

குட்டைச்சொறி மேனியாரே கும்பிடுகிறேன் — உப்புக்
கொட்டுப்போல் வயிற்ற ஞரே கும்பிடுகிறேன்
சட்டிவைத்த முகத்தஞரே கும்பிடுகிறேன் — தூங்கற்
சண்டைக்கடா வழக ஞரே கும்பிடுகிறேன்
கட்டைமூளிக் காதஞரே கும்பிடுகிறேன் — மதிக்
கார்த்திகைமாங் காய ஞரே கும்பிடுகிறேன்
அட்டைவா யுதட்டஞரே கும்பிடுகிறேன் — பண்ணை
யாண்டவரே யாண்டவரே கும்பிடுகிறேன் (3)

— பருளை விநாயர் பள்ளு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றித் திரித்தபழு தைப்புரிபோல் வாகும் — மிக்க
தொந்திவயி றும்வளையற் காலினழகும்
வற்றிப்போன வாரணம்போல் மார்பினழகும் — சுட்ட
வட்டப்பானைபோ லுள்ளமொட்டந் தலையழகும்
உற்றுப் பார்க்க வச்சமான கூகைமுகமும் — தெத்தல்
ஓலைச்செவி யூசற்பாசிப் பல்லினழகும்
சற்றப்பாலே விட்டுப்போன வொட்டற்காதும் — பெற்ற
தனிப்பண்ணைக் காரனுருந் தோற்றினரே! (1)

— கதிரைமலைப் பள்ளு

கட்டழகாக முறுக்கி விட்ட மீசையும் — விளங்கக்
கச்சுறுகாற் பச்சைவர்ணக் கச்சையுங் கட்டி
இட்ட மாகவே கரத்திற் றட்டிச் சிரித்து
ஏப்பமிட்டுக் கோப்புடனே யெட்டி மிதித்து
விட்டிலங்க வேநுதலில் வெண்ணீ றணிந்து — கொண்டை
வீறுகவே கோலவுறு மாலை யணிந்து
மட்டுக்கொள் ளுங்கள்ளும் கண்டமுட்டக் குடித்துத் — துய்ய
வடகாரைப் பள்ளன் தோற்றி னனே (1)

வெந்த கட்டை மேனியனே கும்பிடுகிறேன் — சிறை
விஞ்சுங் கோழி நெஞ்ச னரே கும்பிடுகிறேன்
கிந்து பொந்துக் காலனரே கும்பிடுகிறேன் — சளி
கீண்டியதொண் டத்தனரே கும்பிடுகிறேன்
மந்திமுகத் தழகனரே கும்பிடுகிறேன் — மிக
வளைந்த முதுகனரே கும்பிடுகிறேன்
அந்தமில் லாதவரே கும்பிடுகிறேன் — பண்ணை
ஆண்டவனே யாண்டவனே கும்பிடுகிறேன் (2)

— தண்டிகைக் கனகராயன் பள்ளு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாற்றுநடவு

சின்னி வன்னி நாகி யேகி
திருவி யுருவி குருவியுஞ்
சேவி யாவி பூவி யேவி
செல்லி தன்னுடன் வல்லியும்
பொன்னி கன்னி வேலி பாலி
புளுகி சிவப்பி கறுப்பியும்
புலிச்சி கலிச்சி வீரி சூரி
பூமி யுடனே சோமியும்
பன்னு சுருதி முனிவர்க் குரிய
பரன்ப ரூளைப் பதியில் வாழ்
பவள மேனியன் வயலில் நாற்றைப்
பாடி நடவாரும் பள்ளீரே (1)

மருதி டைத்தவழ் பசிய வித்தக
மருக தப்புயல் மருகனுர்
வலவை பக்கலி லுறையு முத்தம
மதக யத்திரு வதனனுர்
சொருகு கொத்தல ரளக முக்கணி
யுமைய ளித்திடு புதல்வனுர்
சுழிபு ரப்பதி யால யப்பரஞ்
சோதி நாயகர் வயலுளே
யிருவி ழிக்கயல் சுறவு கிட்டுற
விரல ணித்தொகை பிறழவே
யிடத்திற் றெடுத்து முடித்த நாற்றை
யெடுத்து நாங்க ணடச்செய்தோம்
வெருவி முட்பொதி பலவி னிற்கனி
சிதற லான்மிகத் திருக்குடன்
விழுந்து மீன்கள் குதித்துப் பாயும்
விதத்தைப் பாரும் பள்ளீரே (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. கலித்துறைப் பாட்டு

ஆனியி லாடியவாவணி பூங்கொடியண் ணறரு
வானியனந் தவநஞ்சூழுநல்லை மயிலனையா
டானுமறந் தனணிபொருட்கேகுறிற் சாபறைகேட்
டீனமுறுமுன் விரைந்து செல்வாயெம் மிறையவனே [1]

புரட்டாதி யைப்பசிமாதத்த னீந்தருள்புங்க வன்சூர்
சிரட்டாதி வாழ்நல்லை மாதுக்குநீகறக்கச் சேறலுணர்
பொருட் டாங்குச்சென்று சொலிலாவிபோமெனும் பூவையர்சொற்
றெருட் டானிலாய்வல வாவென்செய்தாயினிச் செய்வதென்னே [2]

கார்த்திகை மார்கழிஇத் தைவரமாசி தக்கண்முலைப்பா
லீர்த்தகை வேள்வளநல்லை யன்னுள்பொருட் டேகுமென்றேர்
பார்த்தகை கண்ணும் பறியாள்பசலைமெய் போர்த்திருப்பா
ணீர்த்தகை சேர்முகில்காள் யான்வரன்முன் னிகழ்த்துவிரே [3]

பங்குனி சித்திரையாக வைகாசிப் பரமனிட
மங்கைதருங் கந்தவேடங்கு நல்லைமயில் பிரிபோ
தெங்குஞ் செலுஞ்செலுஞ்சம்பந் தன்வித்தைகற் றெய்துமென்ற
தங்கறிந்தும் வலவாகார்முன் றேர்பின்ன ராக்கினையே [4]

தேசா ரிளமுலைமானுர் கலவியிற் சிக்கியவர்
பாசாங் கிற்பட்டுப்பதைத்து ழன்றேனல்லைப் பண்ணவனே
ஈசாவளி யனையிந்நாளுஞ் செய்துகை தேய்ந்தகம
லாசாரிகைக் கினிப்பண்ணக் கொடாதெனையாட் கொள்வையே [5]

கல்லைக் கடையர்கள்கைவிட் டெறியக்கனன் றெழுந்து
பல்லைத் திறந்துறுமிக் கவிதெங்கின் பழமுதிர்க்கு
மல்லற் பழனங்கள்சூழ் நல்லைநாதனைவந் தடைந்தோர்க்
கில்லைப் பிரமக்குயவன் வனைவதற் கேதுக்களே [6]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டித் தயிரையிடைச் சியர்மத்திற் கடையப்பிரி
குட்டிப் புலியொலியென்றே புலிகுமுறும் புறவம்
கிட்டிக் கிடக்கின்றநல்லையில் வேலற்குக்கிள்ளைப் பிள்ளாய்
எட்டிச் சற்றேசென்றெனுள்ளஞ் சொலாய்பின்னையென்
சொல்வதே [7]

— நல்லைக்கலித்துறை

[ நல்லைக்கலித்துறை — இயற்றியவர் வல்லிபட்டிக் குமாரசுவாமி முதலியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. சீட்டுக்கவி

நிறைநிலவு பொழியமுத கிரணசந் திரனென்ன
நின்றிலகு கின்ற தொடையாய்
நேரலர் படைக்கடலை வீரவே கங்கொண்டு
நிருமூல மாக்கு படையாய்
நெடியதரு வைந்துமெழு முகிலுமிணை யல்லவென
நித்தமருள் கின்ற கொடையாய்
நிலவலைய மெங்கணுங் கல்விநிலை பெற்றிலகு
நிகரற்ற கீர்த்தி யுடையாய்

திறைநிலவு தவழுமுயர் பொறைபலவு மெனவௌவு
செங்கையுத் தண்ட தீரா
செயமாது குடிகொண்ட திண்புயா சலவுளந்
திருமா துவக்கு நெறியாய்
தென்னிலங் கேசவெழின் மன்னுமங் கசரூப
திறலழகர் சாமி யென்னுஞ்
சிங்கவே றனையவுத் துங்கவுள் ளக்களி
சிறந்திட மகிழ்ந்து காண்க

துறைநிலவு கலைவாரி கரைகண் டுயர்ந்துநின்
றெல்குலத் தரசர் தம்பாற்
றேமிலா நண்புபெற் றேங்குவைத் தியநாத
சுகுணன் குலத் துதித்தோன்
துகளற்ற சீரளவை நகரத்து வருகனக
சபைமிக்க துன்று பத்தி
தூண்டநின் மாபெருமை பூண்டசுமு கம்பெறச்
சோர்விலா தெழுது நிருபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைநிலவு மிறைமைபெறு முடிமன்னர் திலகநீ
முகமலர்ந் தகமு வந்தே
மூளுமன் பாலணிய நீளுமின் பானவிசை
மெய்த்தமடன் மாலை தரவும்
முகதரிச னங்கண்டு மிகுகரிச னங்கொண்டு
முன்பெய்த வுங்கருதி நின்
முன்னனுகு மென்றனக் கின்னருள் சுரந்தூழி
மூதுலகி னீவாழி யே!

— கனகசபைப் புலவர்

மக்கர்குகு தத்தர்நிட தத்தர்பிற மன்னர்தொழ
வளமிகுதொன் மதுரை நீங்கி
மத்தகய மொத்ததிறல் பெற்றிடு புவிச்சக்ர
வர்த்தி சிங்காரியன் முதல்
மன்னரர சாளுமிட மென்னவள ரியாழ்ப்பாண
மருவு நல்லா புரியினன்
மயில்வா கனச்சுப்ர மணியசுவாமி யின்றிரு
மலரடி துதிக்கு மடிமை
திக்கனைத் தும்புகழு முத்தம மிகுத்திடுஞ்
செந்தமிழ்க் கலை ஞாபகன்
சீர்மருவு கந்தனருள் மைந்தன மாறுமுக
தீரனெழு துங் காகிதம்
செப்புதய தாரகைப் பத்திரமச் சிற்பதித்
திட்டுப்ர சித்தி செய்யும்
திகழ்முகா மைக்கார ரெதிர்கொண்டு துயர்விண்டு
சித்தமகிழ் கொண்டு காண்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கசனி நீரா டெனுமவ்வை யார்மொழி
தனக்குரை தனைப் பகரிடிற்
சனிவார மதிலெண்ணெ யிட்டுவெந் நீரினிற்
றலைமுழுக வென்ப தாகுஞ்
சத்திய விசித்திரகவி ஞர்க்குளு சிதப்ரபல்ய
சற்குண மகத்துவ மிகும்
தணிகைவளர் கந்தப்ப தேசிக னளித்திடுஞ்
சரவணப் பெருமா ளெனும்
மிக்கபுலவனு மிங்ஙன முரைவகுத்தனன்
மிகுசோ திடங்க ளாலும்
வித்தக வறப்பளீச் சுரசதக முதலான
வேறுபல நூல்க ளாலும்
மேலான பொருளிதென வேயுணர்க வேறுசில
வீணர்பொருள் வேறு பகர்வார்
மெய்மையைப் பற்றிவள் ளுவர்சொன்மூன் றுங்குறள்
விளங்கிலார் போலு மன்றே !

— ஆறுமுக நாவலர்

செம்பதும மலரோடை தங்கியாழ்ப் பாணமாந்
தேசத்தோர் பாக மாகித்
திகழ்கின்ற சுன்னுக நகரமயி லணியினிற்
றென்கலை பயின்று வாழ்வேன்
பம்புகவி பாடுறுங் குமாரசா மிப்பெயர்ப்
பண்டிதன் வரையு மோலை
பாவலர்கள் நாவலர்கள் காவலர்கள் கொண்டாடு
பாரதிபன் பிரபு திலகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும்பிபொது வேயழைத் திடவருள் புரிந்திடுந்
தோன்றலுக் கன்பு மிக்கோன்
துரைசாமி மூப்பனென் றுரைபெறு நிருபர்கோன்
தூயமகிழ் வோடு காண்க
கம்பரா மாயணக் கருப்பொருட் பிரதியைக்
காண்பதோர் வாஞ்சை யுள்ளேன்
காவலா வொருபிரதி யாவலோ டுதவியெக்
காலமும் வாழி நீயே!

— குமாரசுவாமிப் புலவர்

சீர்பூத்த பரசிவப் பேறெய்து மாறுதவு
தெய்விகச் சைவ திலக
திமிரம் பறித்தொளிசெய் பஞ்சாக்ர மெண்ணியனு
தினநீறு பூசு நியம
சிதம்பர திகம்பர னிதந்தர நடந்தரு
சிலம்பொலி பதங்கொ ளிதய
செயமங்கை கலைமங்கை திருமங்கை குடிகொண்ட
திண்புய நன்னுவின் மரும
ஏர்பூத்த யௌவன நல் லார்தம துளத்தினி
னிலங்கிடுந் தருண மதன
இங்கிலீசு மின்றமிழு மாய்க்குலவு துவிபாஷை
யேய்ந்தபாண் டித்ய நிபுண
இன்குவளை மணநாறு கங்கா குலம்பொலிய
வெழுதுதுகின் மேழி விருத
இனசன கனஞ்சலிகை யடிமை குடிமைகளாதி
யெப்பவுசு முற்ற தனத
பேர்பூத்த முத்தைய மணியமா மகராச
பிரபுயர் சிதம்பரப் பேர்ப்
பெருமாட்டி யாரொடு மியற்றிய தவத்தினிற்
பிரசன்ன மான புதல்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபுக்க டிரமுற்ற துரைமக்க டரமற்ற
பிரபந்த ரீண்டு சமுக
பிழையுற்ற வொன்னலரை மலையுற்ற வடவிவிடு
பிரபலிய வீர ராம
கார்பூத்த சோலைசெறி வேலணையோ டேழ்தீப
கங்காக்கு முதன்மை மணிய
காரனுஞ் சோமசுந்தர நாம பூபநற்
கலைவல் பேரம் பலஞ்சொல்
கவிதனைக் கண்டரசர் புலவருக் குதவுநெறி
கண்கூட தாமங் ஙனே
கருணைகூர்ந் துபகரித் தீசனருளா லூழி
காலமும் வாழி யினிதே

— பேரம்பலப் புலவர்

[சீட்டுக்கவி—இக்காலத்தில் நாம் பிறருக்குத் தெரிவிக்க எண்ணும் பொருளை உரைநடையில் எழுதுகின்றோம்; இற்றைக்குச் சிலகாலத்தின் முன்னர்ப் புலவர்கள் தங்கள் கடிதங்களைச் செய்யுள் வடிவிலேயே எழுதி அனுப்பும் ஒரு முறை இருந்துவந்தது. அதை இப்பாடல்களிற் காணலாம்.]



# 18. இதுசாலவியப்புடைத்தே

என்னுடைய கண்மணியே எனதன்பர் சிகாமணியே
பின்னமறு புகழ்பொலிசுப் பிரமணிய பெருந்தகைநீ
என்னையுனக் கன்னைபிதா வினியகுருவென்று முன்னர்ச்
சொன்னதென்னை பின்னரென்னைத் துறந்ததென்னை சொல்லாயே (1)

சிவநெறியி னன்புடையார் போனடித்துஞ் சிவதீக்கை
அவநெறியென் றிகழ்ந்தொழியு மந்தணரைப் பொருட்படுத்தும்
பவநெறிசா ராதுசிவ பத்தரையே பொருட்படுத்துந்
தவநெறிநின் னெறியிது வென்றனை நின்பாற் பிணித்ததுவே (2)

வேதனந்தான் கிடைத்திடினுங் கிடையாது விடினுநிற்கோர்
மாதனமென் கருணையென மதித்தெனது கழகமமர்ந்
தேதமகல் பணிவழுவா தியற்றியவென் னிருநிதியே
நாதனது பொருதுநினை நணுகுவித்தான் றனதுலகே (3)

என்னிடத்து நெடுங்கால நேரேகற் றெத்தனையோ
நன்மையெல்லாம் பெற்றபலர் நாடறியப் பகைத்தகன்ற
வன்மைமனத் தினராக மதித்தென்சொல் வழியொழுகு
நின்னையிழந் துயிர்வாழ்வேன் நெஞ்சமிக வலியேனே (4)

இருநிலத்தோர் கோபியென வெடுத்துரைக்கு மென்சினத்துக்
கொருபொழுது மிலக்காகா தொழுகியென துளமுழுதும்
உருகியகா தலிற்கொள்ளை கொண்டவுற வினன்சீர்
பெருகியசுப் பிரமணிய பெருந்தகையோய் நீயன்றே (5)

ஐந்தெழுத்துப் பிரமாங்க மணிமிருத்துஞ் சயபதமாம்
மந்திரங்கோ ளறுபதிகம் மாசறுநீற் றுப்பதிகம்
பந்தமறு முருகாற்றுப் படையினியான் மந்திரித்த
முந்துதிரு நீறுதினம் முப்பொழுதும் பெற்றனையே (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருவாநின் னுடற்றீண்டிப் பூதியையா னணிபொழுது
திருநீறே யருமருந்து திருநீறே யருமருந்தென்
ளெருவாத பேரன்போ டுரைத்திடுநன் மதுரமொழி
பெருகார்வத் தினிக் கேட்கப் பெறுவேனோ பேசாயே (7)

பிறரிடத்துச் செல்லாவெம் பெருமானுர் தமியேன்மாட்
டுறவினெழுந் தருளல்கண்டோ ருளேந்துபுறம் பழிப்பரென
அறநினைந்து புலம்பியமெய் யன்பவினிப் பிழைத்திடினப்
புறவுரைகேட் பரிதென்றோ புவியினைவிட் டேகினையே (8)

என்பொருட்டென் ஞசிரியன் எத்தனையோ பாடுபட
முன்செய்தவ மென்கொலியான் முடிந்துழியு மறுமையவன்
பொன்செய்திரு வடித்தொண்டு புரிவனென நுமர்க்குரைத்த
நின்சொல் செவிமடுப்ப நெடிதெனுள நெக்கதுவே (9)

உன்பாத மிகவருந்த வொருசிறியேன் மனைக்கணியான்
இன்பார விருபொழுது மெழுந்தருள்வ தென்னையெனத்
துன்பார நெருனலினீ சொற்றனையின் றென்மீதின்
அன்பாலோ யான்வருந்தா தரனுலக மடைந்தனையே (10)

நின்றிரிபுண் டரநுதலும் நின்குறுநன் னகைமுகமும்
நின்றணிந்த கவிநடையும் நின்கைபுதைத் திடுவாயும்
நின்றனெதுக் கியகலையும் நின்பணிந்த வின்மொழியும்
என்றனெதி ரினியெந்நா ளெய்திடயான் பெறுவேனே (11)

நினதுள்ளஞ் சிவார்ச்சனையின் நேசமுடைத்தென்பதறிந்
தெனதுசிவ பூசையொடு மெனதன்ப நின்பொருட்டு
மனவிருப்பிற் சிவலிங்க மற்றொன்று பூசிப்ப
உனதுடல மொருவியர னுலகடையப் பெற்றனையே (12)

இக்காலத் தென்னுசா னீண்டிருப்ப யானிறக்கின்
நற்கால மென்காலம் நாடிதைவிட் டவனகலும்
பிற்காலத் தியானிறக்கிற் பிழையெனநின் மருகனுக்கு
முற்காலத் தியம்பினையே நின்கருத்து முற்றியதே (13)

10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்செனன நாளிதனி னின்பெயரால் வேளூர்க்கும்
பொன்செய்திரு மன்றினுக்கும் பூசைநிகழ்ந் திடவீண்டுன்
கொன்செயுட லொருவியிறை குஞ்சிதபா தம்பொருந்த
என்செய்தவ மென்செய்தவ மிதுசால வியப்புடைத்தே (14)

— ஆறுமுக நாவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. துவளிமாலை

*துவளி வருந்தல்*

என்செய் கோயா னென்செய் கோயான்
அன்புடைச் செவிலி யென்செய் கோயான்
காதல னென்னைக் கைவிடற் குற்ற
வேதறி கில்லேன் யாது செய்குவல்
தந்தை தாய்குரு தமரொடு தெய்வம்
வந்த நாயக மன்னவ னென்று
சிந்தையி னினைந்து தினமவற் போற்றி
வந்தனை யோடு வழிபா டாற்றி
வேண்டுவ வேண்டுவ விருப்புற நல்கித்
தூண்டிய பொல்லாச் சூழ்ச்சிகள் முடித்தும்
பாதகி யென்று பத்தின மிகழத்
தோதகஞ் செய்து துணைபல திரட்டி
மாற்றலர்ச் செகுத்து மணிமுடி புனைவித்
தேற்றி யரியணை யினிதுற வைத்தேன்
இப்பரி செல்லா மியற்றிய வென்னை
அப்புற மகற்றல் கைம்மா ருங்கொல்
என்பா லார்வ மின்றென் றெழியினுந்
தன்பா லகரைத் தனைத்தலுந் தகுமோ
அருஞ்சமர் கடந்த வதிபருஞ் சேனையும்
பெருங்களிற் றணியொடு பெயரா நிலைஇக்
காவல் செய்யுங் கடிநகர் நடுவண்
தேவரு முனிவருஞ் சிறந்ததென் றேத்தப்
பொன்னெடுங் கிரியிற் புரைதவ வுயரிய
பன்னெடுங் கதவப் பவனமே லறையில்
விரிமலர் ஞெமிரிய மெல்லணைச் சேக்கையிற்
சுரிகுழற் சிலதியர் சூழ்ந்து புறந்தரக்
கண்டுயில் கொள்ளுங் காதற் சிறுவர்
மண்டிய பசியால் வருந்தியு நொந்தும்
இச்சிறு குடிசையி லேதிலர் போல
அச்சமுற் றயரு மாற்றுப் பருவரல்
காண்டொறுங் காண்டொறுங் கனன்மெழு கெனத்துயர்
ஈண்டிய நெஞ்ச மிடைந்துடைந் துருகலின்
என்செய் கோயான் என்செய் கோயான்
அன்புடைச் செவிலி யென்செய் கோயான்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செவிலி தேற்றல்*

தஞ்சமற் றுருகித் தடங்கணீர் சொரிய
நெஞ்சகங் குழையு நேரிழை கேண்மோ!
இந்திர சாலக் கந்துக மெனவே
அந்தரத் தியங்கு மிந்தமா நிலத்திற்
பிறப்பிறப் பின்ப துன்பமும் பிறவும்
முறைப்படி நிகழ்வன முடிவன வன்றி
நித்திய மாகி நிலைப்பதொன் றில்லை
சத்திய மிதற்குச் சாட்சியே காட்சி
ஒவ்வொரு பவத்தி லுஞற்றிய வினைப்பலன்
அவ்வப் பவத்தி னனுபவத் தடங்கா
நின்ற சேடம் நேர்வரு பவத்தில்
ஒன்றும் பிறழா தூழ்முறை யிதுவே
ஆதலி னன்றுந் தீதொடு வாழ்வுஞ்
சாதலு நோதலுந் தணிதலும் பிறவும்
விதிவழித் தன்றிப் பிறர்தர வாரா
மதிமுக மடந்தாய் மனக்கவ லொழிவாய்
பகலிர வென்னும் படிமுறை மாறிச்
சுகமொடு துயரஞ் சூழ்தலு மியல்பே
இருவினை செய்குநர் இருவினை முற்றித்
தருபல னனைந்துந் தாமே நுகர்வர்
கேள்வ னிகழ்ந்ததுங் கிளைஞர் வெறுத்தது
மூழ்துரந் தன்றே யொருவரை நோகேல்
வந்தன மேலும் வருவன வெல்லாம்
எந்தவப் பயனென் றேற்றமைந் தொழுகாய்
மக்கடம் வினையும் மக்களைச் சார்தலின்
அக்கவல் கொண்டு மழுதகங் குழையேல்
திடம்பெறு நெஞ்ச மிடும்பைகண் டஞ்சி
நடுங்கலு மழகோ நாரியர்க் கரசே!

[ குவனிமாலை — இயற்றியவர் மட்டுநகர் ச. பூபாலபிள்ளை. விஜய ராஜன் வங்காள தேசத்தினின்று இலங்கை வந்தான். அக்காலத்தில் இங்கு வாழ்ந்த சுதேசிகளில் தலைமையெய்தி விளங்கிய பிரதானி ஒருவரின் மகளாகிய குவனி என்பாளை விவாகஞ் செய்தான். அவள் மூலமாக இலங்கை அரசையும் கைப்பற்றினான். அதன் பின்னர் குவனியையும் பிள்ளைகளையும் விஜயராஜன் புறக்கணித்துத் தள்ளிவிட்டான். அக் கதையே குவனிமாலையிற் கூறப்பட்டுள்ளது. ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. தில்லிமாநகர்த் திருக்கோயில்

தண்ணிலவின் கதிர்க்கற்றை தனைத்திரட்டி உருவாக்கி
உண்ணிலவும் அமிழ்தத்தை உகுத்ததென மணிவண்ணன்
கண்ணிலவு துயில்புரியும் கருதரிய திருமனையாம்
பண்ணிலவு பாற்கடலே பாரின்மிசைப் படர்ந்ததென

வெண்மையும் பொலிவும் விழைதகு வனப்பும்
ஒண்மையும் மரீஇ உரவோர் மனமெனக்
களங்கமற் றோங்கி விளங்குமிந் நியமம்
பொன்னின் ஆழி பொருந்திய குடுமி
வெள்ளிக் குன்றென வெண்ணிறச் சலவைக்
கல்லிற் சமைந்த கவினுடைத் தம்ம!
சீரியல் நாரணன் திருவொடும் பொலிந்த
பேரியற் கோயிலிஃது, ஈரியன் மருங்கும்
உலகு தாங்கிய ஒருத்தி கோயிலும்
கலைமதி புனைந்த கண்ணுதல் கோயிலும்
மூவிலைச் சூலம் மேவிய குடுமிக்
குன்றிரண் டிருபால் நின்ற தோற்றத்த

திருவாயில் இருமருங்கும் செழுங்கரத்திற் றண்டேந்தி
ஒருவாத படிமங்கள் ஓரிரண்டு நின்றவிவை
ஓரிரண்டும் எழின்முகத்தில் உவகையொடு நகையரும்பி
வாருமிவண் வாருமென வலிந்தழைக்கும் மாண்பினவே

மெருகிட்ட சலவைக்கல் வீதியினை வலம்வந்தே
உருகிட்ட மெழுகென்ன உளந்ததும்ப உட்புகுந்தேன்
உளந்ததும்பப் புகுந்தாங்கே உலகுபுரந் திடுமொருவன்
வளந்ததும்புந் திருவோடு மன்னியதோற் றங்கண்டேன்

ஆரணங்கு அணிந்தது அரத்தப் பூந்துகில்
நாரணன் உடீஇயது பீதக ஆடை
இருவர் மார்பினும் இலங்கிய தாமம்

பன்னிற நன்மலர் பயின்று விளங்குவ
இருவர் சிரத்தினும் அருமணி மகுடம்
செம்மலர்ப் பதத்திற் சிலம்புங் கழலும்
அம்மலர் நோக்கி அகங்குளிர்ந் தப்பால்

வேங்கைவரிப் புறத்தியைந்து விறல்வாளும் படைக்கலமும்
தாங்கியநல் எழிலுருவைத் தாயுருவம் எனக்கண்டேன்
தாயுருவாய் உலகளிக்கும் தயவுணர்ந்து மனமாசு
தேயஅவள் சீறடியைச் சிந்தையினில் இருத்தியப்பால்

கல்லாலின் புடையமர்ந்து கருத்தொன்றி யோகுசெய
வல்லான்நல் அருளாளன் மதிமிலைந்த முடிச்சென்னி
மதிமிலைந்த முடியானை மனநெகிழ்ந்து வழுத்தியபின்
விதிபுனைந்த மணிவாயில் விளங்கியவீர் உருக்கண்டேன்

ஆரழல் மாமகம் அழிதர அடர்த்த
வீரனும் விண்ணவர் வெந்துயர் அகலச்
சூருரங் கிழித்த சுடரிலை நெடுவேல்
ஏரகத் தவனும் இருபால் இலங்கினர்
கண்ணுதல் வாயிற் காவலர் இவர்க்கண்டு
உலகு தாங்கிய ஒருத்தி கோயிலில்
நடம்பயில் வைரவர் யோகினி எனுமிவர்
இடம்பெயர்ந் துறையும் இயல்பும் கண்டேன்
நாரணன் கோயில் ஏர்புனை வாயிலில்
நாரதமுனியும் பாரதிப் பெயர்கொள்
சொல்லின் மடந்தையும் நல்லியல் வீணை
ஏந்திய கரத்தினர் இலங்கக் கண்டேன்

அப்பால்,
இருபெருஞ் சதுக்கம் இசைந்தன; அவற்றுள்
வேத வியாதனும் இடப தேவனும்
சாங்கியக் கபிலனும் தன்வந் திரியும்
மன்னிய சதுக்கம் வலப்பா லதுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையந்தான் உய்யும்வகை மாமறையை வகுத்துரைத்த
ஐயன்றன் திருக்கரத்தில் அருஞ்சுவடி பொலிந்ததுவே

அருஞ்சுவடிப் பொருள்தேரின் ஆரணநூல் முடிந்தவிடம்
பொருந்துபொருள் ஒன்றென்னப் புலங்கொள்ள உரைப்பதுவே

சிரிடப தேவனெனும் சினனுரைத்த வாசகந்தான்
ஓரிணைந்து பெருநோன்பின் உண்மையினை உரைப்பதுவே

உண்மைநிலை கொலைகளவின் ஒழிந்தநிலை கொடுங்காமம்
எண்ணுபொருள் நசைநீக்கல் இவைசீலம் இயமமெனல்

அறுநான்கு தத்துவமும் ஆய்ந்துரைக்கும் கபிலமுனி
மறுநீங்க உடலோம்பும் மரபினிற்றன் வந்திரியே

மரபினில்ஐ யைந்தாண்டின் மணமகன்றன் எண்ணிரண்டு
விரவியவள் பாலின்பம் விழையுமெனும் உரைகூறும்

இடப்பாற் சதுக்கத்து மழுப்படை ராமனும்
சீதை கேள்வனும் யாதவர் இறையும்
அருளறம் பகர்ந்த பெருவிறற் புத்தனும்
தத்தம் உயர்மொழி தந்துநின்றனரே

ஆங்கு,

நெடுநிலைமாடத் தரமியம் ஏறிச்
சுவரில் எழுதிய சித்திரம் நோக்க
மாமனு வேந்தனும் ரகுவும் போசனும்
தாமவிக் கிரமனுந் தங்கினர் ஒருபால்
மாபா ரதத்தும் இராமன் கதையுளும்
மேவிய தொன்மை விரிந்தன ஒருபால்
திருத்தகு ராம கிருட்டிண தேவனும்
சங்கரா சிரியனும் சார்ந்தனர் ஒருபால்
சந்திர குப்தனும் அசோக மன்னனும்

UNIVERSITY OF CEYLON
1 MAY 1961
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர உருவிற் ரேன்றினர் ஒருபால்
இங்கிப் பரிசின் இயைந்த ஓவிய
நலங்கண் டுவக்கும் நகர மாந்தர்
மாட்சியும் ஒருபெருங் காட்சி யதாகும்

முளையெயிற்றுச் செய்யவாய் முதிராத பசுங்குதலை
இளமகார் தமையேந்தும் இளநல்லார் குழுவொருபால்
தண்டூன்றி நடுக்குறூஉம் தளர்நடையும் நரைமுடியும்
கொண்டேன்ற முதுமகளிர் குழுவொருபாற் குலவுமே
மாதவரும் வேதியரும் மன்மரபில் உதித்தவரும்
ஓதுபிற குலத்தவரும் ஒருங்குமகிழ்ந் துலவுவரே
அலர்கதிர் ஆழியும் அந்தண் மதியம்
நிகர்திருச் சங்கமும் நீள்கரத் தேந்தி
மலர்மகள் ஒருபால் மருவ மன்னிய
தாமரைக் கண்ணன் திருவடி
மேவிய தில்லி வியநகர் பெரிதே!

— சுவாமி விபுலானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. நீரரமகளிர் நிறையிசை

தண்ணளி செங்கோலாய்த் தனியறமே சக்கரமாய்
மண்முழுதும் ஆண்டபுகழ் வாமனடியிணையே
என்றும் அழியா திலங்குஞ் சமனொளியுங்

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவற்கு
மூவடிமண் ஈந்தளித்து மூவாப் புகழ்படைத்த
மாவலியின் பேரால் வயங்கு மணிநதியும்

காவும் பொழிலுங் கழிமுகமும் புள்ளணிந்த
ஏரியும் மல்கி யிரத்தினத் தீவமென
ஆரியர் போற்றும் அணிசால் இலங்கையிலே

ஏரார் குணதிசையைச் சேர்ந்து வளர்புகழும்
சீரால் இயன்றசெந்நெல் இன்சுவைத்தீங் கன்னலொடு

தெங்கின் இளநீரும் தீம்பலவின் அள்ளமிர்தும்
எங்குங் குறையா இயலுடைய நன்னாடு

மட்டக் களப்பென்னு மாநாடந் நாட்டினிடைப்
பட்டினப் பாங்கர்ப் பரந்ததோ ணாமுகமாய்

ஐங்கரன் கோயில் அமிர்த கழிக்கணித்தாய்ப்
பொங்கு கடலுட் புகும்நீர் நிலையொன்று

நீர்நிலையி னுள்ளே நிகழ்ந்த அதிசயத்தைப்
பாரறியக் கூறும் பனுவல் இதுவாகும்:

மாசகன்ற மணிவிசும்பில் வயங்குநிறை மதியம்
    மலர்க்கிரண ஒளிபரப்ப வளரும்இள வேனில்
வீசுதென்ற லொடுங்கூடி விளையாடல் கண்டு
    விண்ணகத்தார் மண்ணகத்தில் விழைவுகொளும் யாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சிறைய புள்ளொலியும் ஆன்கன்றின் கழுத்தில்
அணிமணியின் இன்னொலியும் அடங்கியபின் நகரார்
பஞ்சியைந்த அணைசேரும் இடையாமப் பொழுதிற்
பாணனொடுந் தோணிமிசைப் படர்ந்தனனோர் புலவன்

தேனிலவு மலர்ப்பொழிலிற் சிறைவண்டு துயிலச்
செழுந்தரங்கத் தீம்புனலுள் நத்தினங்கள் துயில
மீனலவன் செலவின்றி வெண்ணிலவிற் றுயில
விளங்குமட்டு நீர்நிலையுள் எழுந்ததொரு நாதம்

நீநி — சாச — ரீ நீல வானி லே
நிசரி — காக — மா நிலவு வீச வே
மாம — பாப — தா மாலை வேளை யே
மபத — நீநி — சா மலைவு தீரு வோம்

சாச — ரீரி — கா சால நாடி யே
சரிக — மாம — பா சலதி நீரு ளே
பாப — தாத — நீ பாலை பாடி யே
பதநி — சாச — ரீ பலரொ டாடு வோம்

நீல வானிலே நிலவு வீச வே
மாலை வேளையே மலைவு தீரு வோம்

சால நாடி யே சலதி நீரு ளே
பாலை பாடி யே பலரொ டாடு வோம்

நிலவு வீச வே மலைவு தீரு வோம்
சலதி நீரு ளே பலரொ டாடு வோம்

நிசரி காக மா மபத நீநி சா
சரிக மாம பா பதநி சாச ரீ
ரிகம பாப தா தநிச ரீரி கா
கமப தாத நீ நிசரி காக மா

நிலவு வீச வே மலைவு தீரு வோம்
சலதி நீரு ளே பலரொ டாடு வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன எழுந்தஅந்த இன்னிசைத்தீம் பாடலினைக்
கன்னலெனக் கேட்டுக் களித்த புலவனுந்தன்

அன்பன் முகநோக்கி " ஆகாவிவ் வற்புதத்தை
என்னென் றுரைப்பேன்! இசைநூற் பொருளுணர்ந்தேன்

ஐந்தாம் நரம்பின் அமைதியினை யானறிந்தேன்
காந்தாரத் தைந்தாய்க் கனிந்த நிஷாதமெழும்

செய்ய நிஷாதச் செழுஞ்சுரத்தின் பஞ்சமமே
வையம் புகழுகின்ற மத்திமமாம் மத்திமத்திற்

கைஞ்சாஞ் சுரமாம் அணிசட்ஜம் சட்ஜத்தின்
பஞ்சமமே பஞ்சமமாம் பன்னும் ரிஷபமதற்

கைஞ்சாஞ் சுரமாய் அடையும் அணிரிஷபத்
தெஞ்சாத பஞ்சமமாய் எய்திநிற்குந் தைவதமே

தைவதத்திற் கைந்தாய்த் தனித்தகாந் தாரமெழும்
இவ்வகையே ஏழாகி இன்னிசையாழ் தீங்குழலில்

நாதமாய்த் தோன்றி நவைதீர் அமிழ்தனைய
கீதமாய் மேவுங் கிளையாய்ப் பகைநட்பாய்

நின்ற முறையை நினையின் இவைகிளையாம்!"
என்ற பொழுதில் எழுவர் மடநல்லார்

நீரு ளிருந்தெழுந்து நின்று ரமகளிர்

ஆதலினல் மூப்பறியார் அந்தீங் குழலொலியும்
ஓதிய யாழின் ஒலியு மென மொழிவார்

பைம்புனலின் மேற்படர்ந்த பாசிநிகர் கூந்தலார்
அம்பொன்னின் மேனி அரையின்கீழ் மீன்வடிவம்

செங்கமலம் போற்கரங்கள் திங்கள் மதிமுகத்திற்
பொங்கிய புன்முறுவல் பூத்தார் புலமையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிமுகத்தை நோக்கிக் கனிந்துரைப்பார் " யான்கிளியே
புவியிலெனைத் தாரமென்பார் புதல்வியிவள் பேர்உமையே

உமையின் மகள்குரற்பே ருற்ருள் இளிதநயை
பிழையி லிளிபாற் பிறந்தாள்பேர் துத்தமே

துத்தம் பயந்த சுதைவிளரிப் பேர்பூண்டாள்
உய்த்த விளரிக் குறுதநயை கைக்கிளையே

பொன்னின் கபாட புரத்துறைவோம் மாவலிநீர்
தன்னிற் படிந்து சமனொளியைக் கும்பிடுவோம்

ஆடுவோம் பாடுவோம் ஆராத காதலினல்
வாடுவோம் பின்னர் மகிழ்வோம் நகைபுரிவோம்

அச்ச முறுவோம் அடையாதார் தங்களையாம்
இச்சை யறவே இழித்துரைக்கும் நீர்மையேம்

உருத்தெழுந்து கோபிப்போம் உண்மை உரைப்போம்
அருத்தியொடு வீரம் அறைவோம் வியப்புறுவோம்

திங்கள் நிறைநாளிற் சேர்வோம்இந் நீர்நிலையை
கங்குல் கழியுமுன்னே கார்படிந்த மைக்கடலைச்

சென்றுயாஞ் சேர்வோமெஞ் செய்கையிது!" வென்ருர்
ஒன்ருக நீருள் ஒளித்தார் : தமிழ்ப்புலவன்
சிந்தையை யன்ஞர்பாற் சேர்த்தி மனைபுகுந்தான்
வந்த இசையின் வரன்முறையும் ஈங்கிதுவே!

— சுவாமி விபுலாநந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. சுத்தவந்தி

உலகம்எலாம் படைத்தளிக்கும் ஒருவன்அடி அன்றி
ஒருநாளும் வேறென்றும் எண்ணாத நெஞ்சன்
பலகலைகள் பயின்றிருந்தும் இறுமாப்பே அறியாப்
பாலன்என வேளவரும் புகழும்ஒரு குரிசில் (1)

இவன்பெற்ற மகள்ஒருத்தி சுத்தவந்தி என்பாள்
இந்தியரும் இலங்கையரும் வாழ்ந்துநனி சிறக்க
அவன்அருளால் அவன்அடியை வணங்கும்வகை யாரும்
அறிந்துகொள வேண்டும்என்ற ஆசையிடர் உந்த (2)

தன்னகரம் தன்னவர்கள் தன்னுடு விடுத்துத்
தம்பெருமான் மலர்அடியே துணைஎனத்தான் கொண்டே
என்னகரம் என்னவர்கள் என்னுடு மகிழ
இங்குபல கைங்கரியம் செய்துவரும் நாளில் (3)

இறைவன்அருள் கூட்டஇவள் குமாரகுல சிங்கம்
எனும்கனக நாயகனை அறியஇவர் இருவர்
அறம்இரண்டுள் இல்லறமே நல்லறம்என் றெண்ணி
அவ்வறத்துட் புகுந்துபல அறம்இயற்றி உவந்தார் (4)

வள்ளுவனார் வாசுகிபோல் இருவரும் ஓர்உயிரே
எனஎவரும் புகழமண்மேல் இனிதுறையும் காலை
கிள்ளைகுயில் யாழ்எனவே மழலைமொழி பேசும்
மூவர்மகார் எம்பெருமான் கிருபையினுற் பிறந்தார் (5)

கலைச்செல்வம் பொருட்செல்வம் பிள்ளைகளாம் செல்வம்
உத்யோகச் செல்வம்எனும் கடல்களிலே அமிழ்ந்தித்
தலைவன்அடி மறந்தவர்கள் தாரணியிற் சிலரோ?
தம்பதிகள் இவர்இருவர் அத்தகையார் அல்லர் (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வம்எலாம் தருகின்ற செல்வன்அடிச் செல்வம்
செல்வம்அன்றி மற்றவைதாம் செல்வம்என லாமோ?
கல்வியைத்தான் கல்விஎன்று சொல்லஇடம் உண்டோ?
"கற்றதனாற் பயன்என்கொல்" கடவுள்அடி மறந்தால் (7)

சுத்தவந்தி குமாரகுல சிங்கம்இவர் இருவர்
சுத்தமனத் தோடிறைவன் மலர்அடியை வாழ்த்தி
நித்தமுமே அருள்அமுதம் பருகிவந்தார்; இவரால்
நித்தன்அடி கண்டுய்ந்தார் வேறுபல மாந்தர் (8)

இப்படியே இவர்இருவர் வாழ்ந்துவந்த நாளில்
இல்லாளைப் பிள்ளைகளை இவ்வுலகில் விடுத்தே
செப்பமுடி யாதநிலை கணவனவன் சேரத்
'திருவருளே போதும்என்றன் சிறுவருக்கும் எனக்கும் (9)

எந்தையவர் என்னாட்டில் இருக்கின்றார் அவர்பால்
ஏகிடுவோம் பிள்ளைகளும் யானும்" என எண்ணி
தந்தையவர் நாட்டுக்குக் கப்பலிலே ஏறி
தானுந்தன் மக்களொடு கடற்பயணம் செய்தாள் (10)

கப்பலிலே ஒருபிள்ளை வியாதியினால் வருந்திக்
கடவுள்அடி சேரஉயிர் கடலில்உடல் இட்டார்
"அப்பாஉன் சித்தம்இது, அப்பனொடோர் பிள்ளை
அடியேன்கை தனில்இருவர் மக்கள்உளார்" என்றாள் (11)

துறையதுபோய்ச் சேருமுன்னே இன்னும்ஒரு பிள்ளை
சுரநோயால் வருந்தினது; துறைசேர்ந்த உடனே
இறைவன்அடி மறவாத சுத்தவந்தி இருவர்
பிள்ளைகளைக் கொண்டுகரை சேர்ந்தவுடன் ஆங்கே (12)

பிணிதீர்இல் லம்தேடிப் பிள்ளைதனை வைத்துப்
பரிகாரம் செய்தும் அந்தப் பிள்ளைஇறந் ததுவே
பிணிமற்றப் பிள்ளையையும் பிணித்ததினால் ஆங்கே
பின்னும்இராப் பகல்கழித்தும் பயன்ஒன்றும் இல்லை (13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவர்மகார் இறந்தபின்பும் முனைவன்றன் அருளே
முழுநெஞ்சிற் குடிகொண்ட மொய்ம்பினள் "எனதந்தை
சீவனுடன் இருக்கின்றார், செல்வேன்யான் அங்கே
செல்வேன்யான் எந்தையிடம் தேவன் அருளாலே" (14)

எனஎண்ணித் தந்தையவர் இருக்கும்இடம் தேடி
"எங்கேஎன் தந்தை?"என வினவினள்; அங் குள்ளார்
"நினதப்பர் சின்னாள்முன் நித்தியலோ கத்தை
நினைந்தங்கே சென்றனரால்" என்றுவிடை பகர்ந்தார் (15)

என்கணவன் இறந்தபின்னர் மூவர்மகா ரோடே
எந்தைதனைத் தேடிஇங்கு புறப்பட்டு வந்தேன்
நன்கலமாம் பிள்ளைகளும் எனைஅகன்று சென்றார்
நான்வருமுன் எந்தையுமே நல்லுலகம் சேர்ந்தார் (16)

படமுடியா தினித்துயரம் படமுடியா தந்தோ
படுபாவி நான்என்று கலங்கிவிழு வேனோ?
படமுடியா தானாலும் பரமன்அருள் இருந்தால
படமுடியும் படமுடியும் படமுடியும் என்பேன் (17)

என்கணவன் என்கனகம் என்சிங்கம் தன்னை
எனைவிட்டுப் பிரித்தாலும் உன்னருள்என் றிருந்தேன்
நன்கலம்என் மூவரையும் ஒவ்வொருவ ராக
நான்உனக்குக் கொடுத்துவிட்டு நல்லதென வந்தேன்
(18)

எந்தைமடி மீதுமுகம் வைத்தழுதால் தீரும்
என்கவலை எனஎண்ணி இங்கு வந்தேன்; ஐயோ!
எந்தைஇலை இங்கென்றன் கண்ணீரைத் துடைக்க
யாரும்இலேன் யாரும்இலேன் யாரும்இலேன் ஐயோ!
(19)

இனிஇந்த உலகத்தில் எனக்கேதும் உண்டோ?
என்னையுமே உன்னிடமே வருகஎன அழைப்பாய்
இனித்துயரம் படமுடியா தெனஅழுத என்னை
'என்மகளே என்மகளே யானும்இறந் தேனோ? (20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னுள்ளத் துறுகவலை அறிவேன்யான்; நீதான்
உலகில்உள்ள நாள்எல்லாம் ஒழியாஇக் கவலை
உன்னுள்ளத் துறுகவலை ஒழியாமல் நிற்கும்
உனைத்தாங்க என்னருளே போதும்இன்றும் என்றும் (21)

இன்னும்நீ பலவருடம் இவ்வுலகில் எனக்குக்
கைங்கரியம் பலசெய்தல் வேண்டும்;அதன் மேலே
பொன்னுலகம் நீஅடைதல் கூடும்,அது வரையும்
போதும்உனக் கென்னருளே உன்கவலை தாங்க' (22)

இவ்வாறு சொல்லும்ஒரு சொல்லதனைக் கேட்டேன்
காதிலோ நெஞ்சினிலோ யாதொன்றும் அறியேன்
எவ்வாறு சொலவேன்என் அனுபவத்தை உமக்கே
என்கவலை தாங்குவதற் கிறைவன்அருள் பெற்றேன் (23)

எனைஒழிந்து போகாத துயரம்எலாம் தாங்க
இறைவன்அருள் போதும்என அனுபவத்திற் கண்டேன்
இனிஉலகில் யாரும்இலேன் ஒன்றும்இலேன்; எந்தை
இனியதிருச் சித்தம்அன்றி வேறொன்றும் இல்லேன்" (24)

தந்தைநகர் சுத்தவந்தி சேர்ந்தவுடன் தானே
எழுதியஓர் கடிதத்தின் சாரமிது காண்மின்
எந்தையருள் இலங்கையர்கள் இந்தியர்கள் அறிய
என்னொடு தனைநாடி வந்தாளே பின்னும் (25)

சுத்தவந்தி முகந்தன்னை என்கண்ணுற் கண்டேன்
சொல்லுவதெப் படிஅந்த முகந்தன்னை உமக்கே?
மெத்தவிச னம்பதிந்த முகந்தனிலே ஈசன்
அருள்அளித்த ஆறுதலின் விலாசம் விளங்கினதே (26)

பின்னும்இரு பதுவருடம் கைங்கரியஞ் செய்தாள்
பிறர்என்றும் தமர்என்றும் பேதம்ஒன்றும் இன்றி
மன்னும்அறு பத்திரண்டு வயதுநிறை வுற்று
மாதேவன் மலர்அடியில் வாழ்ந்துகளிக் கின்றாள் (27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்புறினும் துன்புறினும் இறைவ,உன தருளால்
    யான்எனவும் எனதெனவும் நினையாமல் என்றும்
மன்பதைகள் ஈடேற ஊழியம்யான் செய்ய
    மாதேவா நீஎனக்கு வழங்குகவோர் வரமே! (28)

— கிங்ஸ்பரி தேசிகர்



# 23. தனிப்பாடல்

வடவைக் கனலைப் பிழிந்துகொண்டு
மற்று மொருகால் வடித்தெடுத்து
வாடைத் துருத்தி வைத்தூதி
மறுகக் காய்ச்சிக் குழம்புசெய்து
புடவிக் கயவர் தமைப்பாடிப்
பரிசு பெறுமற் றிரும்பிவரும்
புலவர் மனம்போற் சுடுநெருப்பை
புளுசென் றிறைத்தாற் பொறுப்பாரோ
அடவிக் கதலிப் பசுங்குருத்தை
நச்சுக் குழலென் றஞ்சியஞ்சி
அஞ்சொற் கிளிகள் பஞ்சரம்விட்
டகலா துறையு மகளங்கா
திடமுக் கடவா ரணமுகைத்த
தேவ தேவ சிங்கமே
திக்கு விசயஞ் செலுத்திவரும்
செங்கோ னடாத்து மெங்கோவே! (1)

பொங்கு மிடியின்பந்தம் போயதே யென்கவிதைக்
கெங்கும் விருதுபந்த மேற்றதே — குங்குமந்தோய்
வெற்பந்த மானபுய வீரபர ராசசிங்கம்
பொற்பந்த மின்றளித்த போது (2)

இம்பர்வா னெல்லை யிராமனை யேபாடி
என் கொணர்ந்தாய் பாணநீயென் றாள்பாணி
வம்பதாங் களப மென்றேன் பூசுமென்றாள
மாதங்க மென்றே னும்வாழ்ந் தேமென்றாள்
பம்புசீர் வேழமென்றேன் றின்னு மென்றாள்
பகடென் றேனுமு மென்றாள் பழனந்தன்னைக்
கம்பமா வென்றே னற்களியா மென்றாள்
கைம்மா வென்றேன் சும்மா கலங்கினளே (3)

— அந்தககவி வீரராகவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவலன் வாயிலில் வந்திபம் வாங்கப் படிபுரக்குங்
காவலர் நிற்கும் படிவைத்த வாகண்டி யொன்பதினு
மேவலர் மார்பினுந் திண்டோளி னுஞ்செம்பொன் மேருவினுஞ்
சேவெழு தும்பெரு மான்சிங்கை யாரிய சேகரனே (1)

— புகழேந்திப்புலவர்

பாரிலுள்ள சூத்திரனும் பாம்புபுற்றிற்
பரிந்திருக்கு மிரையெடுக்கிற் பலவுந்தின்னு
மேருடனே தானடிற் பத்மராக
மிலங்குமணி முடிபுனையு மிலங்கைவேந்தர்
சீரியபொன் றிறையளக்கச் செங்கோலோச்சுஞ்
செகராச சேகரமன் சிங்கைமேவு
மாரியர்கோன் வெண்குடையி னிழலேசெய்யு
மவனிதனைப் பார்த்துநின்றே யமர்ந்தாடும்மே. (1)

— செகராசசேகரன்

சேது.
கங்கணம்வேற் கண்ணிணையாற் காட்டினார் காமர்வளைப்
பங்கயக்கை மேற்றிலதம் பாரித்தார் — பொங்கொலிநீர்ச்
சிங்கைநக ராரியனைச் சேரா வனுரேசர்
தங்கள் மடமாதர் தாம். (1)

— கோத்தகமக்கற்சாசனம்

மல்லாக மாதகலான் மருகன்சுன் ஞகத்தான்
மகன்பா வாணர்
சொல்லாச்சீர் ஈவினையான் துன்னலை யானனத்தான்
சுரும்ப ரோதிச்
சில்லாலை யிருள்வென்ற குறக்கொடிகா மத்தானைச்
சிகண்டி மாவூர்
வல்லானை மாவிட்ட புரநகரத் திடைப்பவனி
வரக்கண் டேனே (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவி லாதுறை சுன்னுகத் தான்வாழி
முந்தித் தாவடிக் கொக்குவின் மீதுவந்
தடைய வோர்பெண் கொடிகாமத் தானசைத்
தானைக் கோட்டை வெளிகட் டுடைவிட்டாள்
உடுவி லான்வரப் பன்னுலை யான்மிக
உருத்த னன்கடம் புற்றமல் லாகத்துத்
தடைவி டாதனை யென்று பலாலிகண்
சார வந்தன ளோர்இள வாலையே (2)

வித்துவான் வருகிருர் மத்தியா னம்பொழுது
வெய்யிலுங் கடிது கையில்
வேறென்ன வுதவுவது சோறென் னினுமுதவ
வேண்டுமென் றன்பர் கூறப்
புத்திதா னரிசி குத்தியாக் கினதிங்கே
புலவனுர் வருவரென்ருே
போங்காணு மென்மனைவி யாங்கார வசனங்கள்
புகலவவ ரிகலாகியே
கத்தியொரு வர்க்கொருவர் மெத்துகன பூசலாக்
கைகலந் தாடுமூடக்
கயவரைப் பாடாம லுனதுபொற் பாதமே
கவிமாலை சூடவருள்வாய்
சித்திசே ரடியர்க்கு முத்திதா னருளுநர
சிங்கமே! மயிலணி யில்வாழ்
தேமலர்க் கையனே! காமனுக் கையனே!
திருமங்கை மணவாளனே! (3)

— முத்துக்குமாரகவிராசர்

வேதங்கள் குடியிருந்து பிறந்தவிட மெவிடம்
விநாயகனு மிளையோனு மிருந்தவிட மெவிடம்
பாதங்கள் பதினுறும் வந்தவிட மெவிடம்
பரந்துபின் னெடுங்குகிற பரப்பிரம மெவிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதங்க ளொலியெழுந்து பாடுவது மெவிடம்
நடுவினி னம்மகமேரு நாட்டினது மெவிடம்
போதங்க ளறிந்துரைக்குங் குருக்கள் மாரே நீர்
புகன்றிடு விரிந்தவிடம் புகன்றிடு மினீரே

— புலவன் விநாயகர்

செம்மான் கைக்கொண்டவ னம்பட்டன் வண்ணான்
செலுத்துமள்ளன்
றம்மான் குயவன்பி ஞண்கச்சிடையன் றபக்கரையா
னம்மாண் டுடிநற் பறையஞெர் வேட னணிநகுலைப்
பெம்மா னெனத்துதி யாய்நமைப் பார்ப்பான் பெரிதுவந்தே (1)

தின்கூட்டம் பேய்க்கூட்ட தின்ஞட்டம் பித்தாட்ட
நெற்றிமிசை நிற்கு நாட்ட
மின்னீட்டந் தாஞேட்டம் மெல்லாட்குன் மேஞட்டம்
வெம்பொயுனே யொன்றி ஞேட்ட
முன்பாட்டங் கென்றேட்ட முன்கோட்ட மின்றீட்டு
மொண்ணகுலை தன்ம நாட்ட
நன்கீட்ட நன்ஞேட்ட நன்ஞேட்ட மாருட்ட
நன்றுரைசெய் நம்பி ரானே (2)

பிள்ளைபெரும் வயிற்றினுக்கா யிரந்தா னித்தம்
பெண்டுபலர் சண்டையி ஞற்பித்த ஞனன்
வெள்ளநதிக் குளிரகலத் தீக்கை யிட்டான்
விடமிழுக்கு மாசையிஞற் பாம்பு பூண்டான்
பிள்ளைமதி யுமைநுதலென் றெண்ணி வேய்ந்தான்
பேயுறவு கொண்டுநட மாடி நின்ருன்
வெள்ளைநிறச் சாம்பரணி நகுலை யாளன்
விகடகவி கேட்டுமருண் மிளிரு வோனே (3)

— மயில்வாகனப்பிள்ளை

சின்னமனத் துள்ளார் செய்விருந்தின் சாற்றுருசி
அன்னதினம் விண்ணேர் றறிந்திருந்தால் — முன்னே
வெற்பதனைக் காவிவேலை கடைந்தவ் வமுதம்
அற்பமெனத் தள்ளுவரே காண்.

— புவனேகவாகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருதிமுறை தவருத மனுநீதி கண்டன்
சோழனுத வுங்குமார சோழவெங் காளன்
பரிதிகுல மன்னன் குளக்கோட் டிராமன்
பண்டுபூ தப்படையைக் கொண்டேதான்
கருதரிய கல்லும் மணலும் சுமப்பித்துக்
கடலும் மலையும் போலவே குளங்கட்டி
வருடமிகு செந்நெல் விளையப் பன்னிரண்டு
மாதமும் புனல்பாய மதகு செய்தனரே

— கந்தளாய்க் குளக்கட்டுக் காவியம்

நீர்பெருக் கெடுத்த லாலே
நெல்விளைத் திடுவோர் தங்கள்
ஏருடைத் திடுமென் றஞ்சி
யெங்கெங்கு மணைசெய் காட்சி
சீருடைக் செல்வி பிட்டுத்
தின்று தின்றடைக்குங் கங்கை
யாறுடைத் சடைகொ ளண்ண
லாயிரர் நிற்ப போலும் (1)

புல்லை மேய்ந்தங்கு நின்று
திமிர்புரி யிடபக் கன்று
முல்லை சார்வழிய தாக
முடிமிசைக் குடைகைக் கொண்டு
செல்லுவார் தம்மைக் கண்டு
சினந்து வாலெடுத்து மூசிக்
கல்லையுங் கயிற்றி னேடு
காட்டிடை யிழுத்துச் செல்லும் (2)

தாலக்கனி யொன்றினுக் காகத்
தரைமேல் மாந்தர் பலர்திரண்டு
வேல்கத்திகள் கொண்டெறிந்து மிக
விசயம் பொருதும் வளநாடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மால்பற்றிய நெஞ்சினனாகி வந்தான்
கனகே நின்மன் றலுக்கு
நீலக் கருங் கார்மேக நிற
நியூட்ட னிவன்காண் நேரிழையே (3)

— கனகி புராணம்

முக்கியமாய்ப் போத்தலொன்று மூன்றுநாளாய்
முகங்கழுவி வெறுவயிற்றில் முழுதாயுண்டால்
அக்கியழல் வாதமரை யாப்புநீங்கும்
ஆகாத முகப்பருக்க ளகன்றேபோகும்
பொக்குளிப்பான் சின்னமுத்துப் பொரிந்தேபோகும்
பொங்கிடுகண் ணோயதையோர் போதுங்காணோம்
பக்குவமாய்ச் செங்கண்மாரி பறந்தேபோகும்
பாலைதரும் நீர்ப்பெருமை பகரொணாதே

— பனைராசன் நாடகம்

திருவாரு நல்லைநகர்ச் செவ்வேற்பெருமானார்
இருவாலைக் குயத்தியரோ டின்பமுற்றாரம்மானை
இருவாலைக் குயத்தியரோ டின்பமுற்றாராமாயின்
தருவாரோ சட்டிகுடஞ் சாறுவைக்கவம்மானை
தருவார்காண் சட்டிகுடஞ் சாறுவைக்கவம்மானை (1)

கொடிவளரு மணிமாடக் கோபுரஞ்சூழ் நல்லூரிற்
குமரமூர்த்தி
அடியருளத் திருளகல வமரர்முக மலரவர
வணிமானின்ற
கொடியினெடும் பிடியினெடுங் குலவுமுடம் பிடியொடுங்
கோதண்டமேந்தி
மிடியகல மயிலேறி விடியவந்த தினகரன்
போல்மேவினனே (2)

— நல்லைக் குறவஞ்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. தெய்வப் புகழ்மாலை

கனகமணிப் பொதுவுட் கண்டவருட் கனிந்துருக
வனகனளா வில்லாதோ ஞனந்த வடிவழகன்
பனகமணிப் பூணேன் பயிலு நடங்கண்டு
மணமொழிமெய் களாற்போற்ருர் வாழ்வென்ன வாழ்வே
வந்தனைசெய் துய்யாதார் வாழ்வென்ன வாழ்வே (1)

பிறைநீடுங் கண்டத்தான் கடுக்கை மலர்த்தொடையான்
கறையாடுஞ் சடைமுடியான் பிறந்திறவாப் பெருமுதல்வன்
மறைநாடுந் திருத்தாளான் மாணிக்கத் திருக்கூத்தன்
முறைகூடும் புகழ்பாடார் முதுக்குறைவாற் பயனென்னே
முற்றறிவன் புகழ்பாடார் மூதறிவாற் பயனென்னே (2)

இருளார் மலத்தழுந்தி யிடர்ப்பட் டுழல்வேமை
மருளாகு மாயையொடு வல்வினையுட் படவைத்துத்
தெருளாரு நல்லறிவு சிறிதுசிறி தாச்செறிவித்
தருளார்மெய் வீடுதரு மனகாநின் னடைக்கலமே
யம்பலக்கூத் துகந்தபிரா னளியேமுன் னடைக்கலமே (3)

— புலியூர்ப்புராணம்

இடந்தானு முனராளை யின்முருகை யெல்லாங்
கடந்தானை அருளாந்தன் கடலானை வேல்கைக்
கிடந்தானை யெப்பொருளுங் கிடப்பானைச் சூர்க்கா
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நம்பரனை யேத்தாத நாவென்ன நாவே (4)

— சுப்பிரமணியபராக்கிரமம்

அதிரவரு மாணிக்க கங்கைதனில் மூழ்கி
யன்பொடுசி வாயவென வருணீறு பூசி
முதிருமன் பால்நெஞ்ச முருகவிழி யருவி
முத்துதிர மெய்ப்புளக மூரவுரை குளறப்
புதியசெந் தமிழ்மாலை புகழ்மாலை சூடிப்
பொருவில்கந் தாசுகந் தாவென்று பாடிக்
கதிரைமலை காணுத கண்ணென்ன கண்ணே
கர்ப்பூர வொளிகாணுக் கண்ணென்ன கண்ணே (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிவரைந் திடுபழைய வினையோடி மாயு
மிடிகொடும் பிணிசோக விதமான தேயு
மதியொடங் காரகன் முதலான கோளு
மருவிடும் பகையொடு மாறான நாளும்
அதிகசுகந் தருஞான வழியான கூறும்
அளவிலன் பூவுமல மணுகாம லோடுங்
கதிரையென் றேதுமலை கண்டகண் கண்ணே
கர்ப்பூர மெய்ச்சோதி கண்டகண் கண்ணே (6)

— இலங்கை வளம்

ஆறு முகங்கொண் டொருமுகமா
யடியார்க் கருளுந் திறமதுதான்
ஆறு சமயங் களுக்குமிறை
ஆதி நீயென் றுணர்த்திடவும்
பேறு முகக்கு மிதையறியாப்
பேதை மாக்க ளினதடியைப்
பேணு தந்தோ பெருந்துன்பப்
பிறந்தைப் பரவை யழுந்துவரால்
பாறு முகக்கும் பறந்தலையிற்
பகைத்த வவுணப் படைதொலையப்
பாற்றி யமரர் பெயர்நிலைப்பப்
பண்ணுங் கருணைப் பண்ணவனே
சாறு முகக்கு மறுகுதொறும்
தரும பரிபா லனம்புரிவோர்
தழைக்கும் வளமா ரிலந்தைநகர்த்
தண்ட பாணிப் பெருமானே

— தண்டபாணி விருத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகனைத்து முளவாக்கி நிலைபெறுத்தி
யொடுக்கிவிளை யாடல் செய்வாள்
உலகிறந்த யோகியர்த முள்ளமதி
லோவாது நேட நிற்பாள்
அலகிலிள ஞாயிறென்று யுதித்ததென
அவிர்சோதிப் பிழம்ப தாவாள்
இலகுவிழி கமலமலர் மானுமம்மை
கௌரியையா னிறைஞ்சு கேனே

— தேவி தோத்திர மஞ்சரி

தத்துவங்கள் சேர் நடன சாலை கூட்டிச்
சமைத்துறுப்பா மவிநயங்கள் தன்னைக்காட்டி
யத்தலத்தே யாட்டுவித்தென் னுடல் கண்டு
மயர்ந்தொழியா தெழுபிறவி யாழி நீக்கிக்
கத்துமென திளைப்பகற்றிக் கதிதந் தாண்ட
கடவுளனம் பெடையொடுதண் கமலக் காவில்
நத்தொலிவான் முழவென நின் றதிரக் கூடி
நளிமணஞ்செய் நல்லையுறை நாதன் றானே

— நல்லைச் சண்முக மாலை

ஒன்றுசெய வொன்றாகி நாள்பலவும் வெந்துயர
வுத்தியிடை யாழ்ந்ததன்றி
யொருகடிகை யெனினுமிங் கடியரேஞ் சுகமா
வுறைந்ததுவு முண்டுகொல்லோ
வென்றுமினி யிவ்வகை நடக்குமோ மாறுமோ
வென்றுசிறி துந்தெரியலே
னேதுநி னுளக்குறிப் பாலியல்வ தன்றியெம
தெண்ணத்தி னுலுமாமோ

துன்றுயிர் செயும்பாவ புண்ணிய மெலாந்தெரியு
துக்கசுக மேற்கவுதவுஞ்
சோதியே யாதிநடு வந்தங் கடந்தமெய்ச்
சுடரே நல் லொளிவிளக்கே
மன்றுதொறு நல்லவர் சொலுங்கலைக ளஞ்சுகம்
வழங்கிடுங் கந்தவனமேல்
வருமமல பரமசிவ குருபரமெய் விரதர்புகழ்
வரதவுல கருண்முருகனே

— கந்தவனநாதர் விருத்தம்

நாவரசர் சம்பந்தர் சுந்தரர்மா ணிக்க
வாசகர்முன் பூசைசெய்த நம்பனொரு சிவனே
பாவரசர் திருமங்கை சடகோபர் முதலாம்
பாகவதர் பணிகொண்ட அச்சுதனேமாலே
தேவடியார் ஆமோசு மீகாஏ சாயா
தேசிகர்தம் உளம்வாழும் ஏகோவாமூர்த்தி
சாவாத புகழுடையார் ஏசுகுரு நாதர்
தம்முகத்தில் இலங்குமெந்தாய் என்கடவுள்நீயே (1)

உலகியலைக் கரைகண்ட சரதுஸ்தர் சொன்ன
ஒளியாகும் ஆகுரனை நான வணங்கிநிதம் துதிப்பேன்
நிலையில்லா வாழ்விதனை நிலையுளதென் றெண்ணும்
நினைவின்றிக் கோதமர்போல் நிருவாணம் அடைவேன்
நலமெல்லாம் போதிக்கும் நபிமாருள் முகமத்
நபிபோல அல்லாவை நாடோறும் தொழுவேன்
பலசமயம் பலவழிகள் பரன் ஒருவன் என்ற
முனிராம மோகனரைப் பார்த்துவழி முயல்வேன் (2)

கால்வாசி அரைவாசி அரையரைக்கால் முக்கால்
கண்டவரே யன்றிமுற்றும் கண்டவர்கள் இல்லை
கால்வாசி மாகாணி காணிஅரைக் காணி
காணுதார் தாம்முற்றுங் கண்டவர்போல் நடிப்பார்
நூல்வாசிப் பேன்என்றும் நூலறிந்தார் எனக்கு
நுவலுமொழி ஆராய்ந்து சிந்திக்கக் கடவேன்
கால்வாசி கண்டவுடன் யான்என்னுஞ் செருக்கில்
கடையேன்யான் வீழாது காத்தருள்நீ தேவே! (3)

— கிங்ஸ்பரி தேசிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்கொண்ட பரமவா னந்தசிற் சுகசொரூப
செகதீச திருமங் களம்
தெய்வசர வணபவசண் முகவற்கு முன்வந்த
திகழீச திருமங் களம்
பேர்கொண்ட சதுர்மறையின் முதலிலகு பிரணவப்
பிரகாச திருமங் களம்
பிறைநுதலொ டயில்விழிகொள் வலவைவெனு மரிவையிற்
பெருநேச திருமங் களம்
ஊர்கொண்ட பரிதிமணி யெனவிலகு முதரமதி
லொளிர்தேச திருமங் களம்
ஒருவெண்ணெய் நல்லையமர் மெய்கண்ட தேசிகற்
குபதேச திருமங் களம்
கார்கொண்ட கரடதட கயமுகவ வங்குசக்
கரராச திருமங் களம்
கருணேச நல்லையங் கைலாச புரிவாச
கவினேறு கணரா சனே. (1)

அருணவிக சிதகமல மலரைநிகர் தருவதன
மாறுமநு தினமும் வாழி
அமரர்தொழு கனகசபை நடனமிடு பரமசிவ
னருண்முருகர் சரணம் வாழி
கருணைமழை பொழிபனிரு நயனமதி ளெடுவலிய
கவினுலவு தோள்கள் வாழி
கனகிரியை யிருபிளவு படவுருவு நெடியவயில்
கரதலத் தினிது வாழி
வருணமர கதவழகு திகழவரு மவுணனெனு
மயிலினெடு சேவல் வாழி
வனசரர்த மரசனுத வியகுறமி னெடுகடவுண்
மயிலிவர்க டினமும் வாழி
தருணமிது வெனவமரர் பணிநல்லை யமர்கந்தர்
தமதடியர் நிதமும் வாழி
சகசநிரு மலபரம சுகிர்தபரி பூரண
சடாக்ஷரம் வாழி வாழி! (2)

— ஆறுமுக நாவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25. குறத்தி பாட்டு

வண்டிருக்குங் கருங்கூந்தல் மதியிருக்குந்
திலதநுதல் மைசேருங்கண்
தண்டிருக்கு மலர்க்கரத்துத் தடித்திருக்குஞ்
சிறியவிடை தளிர்சேர்சாயற்
கண்டிருக்கு மதுரமொழிக் கனிவிருக்குந்
துவரிதழ்வாய்க் கனியைநாவில்
கொண்டிருக்குந் தமிழ்முனிவன் குடியிருக்கும்
பொதியமலைக் குறத்திநானே (1)

மந்தமா ருதம்வளரும் மலையெங்கள் மலையே
மதுரமிகுந் தமிழ்பிறந்த மலையெங்கள் மலையே
கந்தவேள் விளையாடும் மலையெங்கள் மலையே
கடலருகே வளர்நகுல மலையெங்கள் மலையே 2)

பச்சைமலை பவளமலை யெங்கள்மலை யம்மே
பழனிமலை பொதியமலை யெங்கள்மலை யம்மே
கொச்சிமலை குடகமலை யெங்கள்மலை யம்மே
கொல்லிமலை குமரிமலை யெங்கள்மலை யம்மே

அச்சமலை கதிரைமலை யெங்கள்மலை யம்மே
அழகர்மலை கோணமலை யெங்கள்மலை யம்மே
நச்சுமலை யருவிதிரை யுவரிபுகக் கொழிக்கும்
நல்லமலை நகுலமலை யெங்கள்மலை யம்மே (3)

— உயிரிளங்குமரன் நாடகம்

கந்தமலை யுகந்தமலை கதிரைமலைச் சாரல்
கனகமலை யெங்கள்மலை கழுகுமலை காணும்

விந்தைசெறி திருமருதூர் திருவாரூர் நகரும்
விளம்புமற்று மாலயமும் வேலருறை நகரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்றெடுத்துக் கனியெறிந்த கரியதிரு மாயன்
கருதரிய மருகனெனு முருகனெனும் வீரன்

தண்டமிழ்சேர் விளங்குதில்லை தழைக்கவரு முருகன்
சரணமலர் பணியுங்குறத் தையலடி நாங்கள்

மானனைய வள்ளிமண வாளரெங்கள் மருகன்
வள்ளியம்மை தானுமெங்கள் மகளலவோ சொல்லில்

சக்கரக்கை மாயனெங்கள் மைத்துனனே யாகும்
சங்கரிதன் பங்கனெங்கள் தமயனடி யம்மே!

— வசந்தன் கவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. மழைப் பாட்டு

கருமயி லாடக் குயிலினம் வாடக்
கவியின மோடக் கரடிபுல்வாய்
பொருபுலி யாளித் திரள்மரை சாரற்
புறமுழை பதறிக் கொடுகிடவே
யருகுழை தவளக் குலமலை தகரத்
தடதிகி ரியின்முத் துதிர்தரவே
சொரிமல ரகிலப் பலமர முறியச்
சோவென மாரி பொழிந்ததுவே (1)

வெருண்டு வரியுடல் சுருண்டு துயில்புரி
விடங்கொ ளுரகமு நடுங்கவே
உருண்டு நிலமிசை புரண்டு நடைமலை
யுடைந்து விதலையொ டொடுங்கவே
மருண்டு குழியத ரிடங்கர் நெளிதர
வரம்பில் வனசரர் கலங்கவே
இருண்டு புவிமயில் கிழிந்து விடநிரை
யெழுந்து கனமழை பொழிந்ததே (2)

— பளளைப்பள்ளு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27. கப்பற்பாட்டு

ஏலேலோ ஏலவலி — தத்தெய்யா
ஏலேலோ ஏலவலி
மாலான காயக்கப்பல் — வெகு
மாயமஞே வேகக்கப்பல்.............. (ஏலேலோ)

முடுகு

ஐம்பெரும் பூதத்தி னுலுருவ மாகி
அறுநாலு தத்துவப் பாய்மரம் நாட்டி
நம்புமறை யோரைந்தை யுள்ளே வகுத்து
நண்ணுகலை யாதியோ ரைவர்தொழில் புரிய
உம்பரோ ரைவர்நின் றுள்ளே யியக்க
உலகுவல மாயோடி வருகின்ற கப்பல் (ஏலேலோ)

மாருத பிறவியெனும் — கொடிய
வாரிதியி லோடுங்கப்பல்

முடுகு

ஏறுவினை யெதிர்வினை யியற்றுவினை யாலே
இன்பதுன் பச்சரக் கேற்றிவரு கப்பல்
கூறுமிடை நடுநாடி பிங்கலைக ளென்ன
குலவுவழி யொருமூன்றி லேசுழலுங் கப்பல்
ஆதிபரா சக்தி சுக்கான் பிடிக்க
அவரின்கீ ழோரைவர் ஆஞ்சா னிழுக்க
சோதியுள திருநீல கண்டமீ காமன்
சுற்றிவர வேவிட்ட வற்புதக் கப்பல் (ஏலேலோ)

— உயிரிளங்குமரன் நாடகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. கத்தரி வெருளி

கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று
காவல் புரிகின்ற சேவகா — நன்று
காவல் புரிகின்ற சேவகா
மெத்தக் கவனமாய்க் கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறுயார் — உன்னைப்போல்
வேலை புரிபவன் வேறுயார் (1)

கண்ணு மிமையாமல் நித்திரை கொள்ளாமல்
காவல் புரிகின்ற சேவகா — என்றும்
காவல் புரிகின்ற சேவகா
எண்ணி உன்னைப்போல் இரவு பகலாக
ஏவல் புரிபவன் வேறுயார் — என்றும்
ஏவல் புரிபவன் வேறுயார் (2)

வட்டமான பெரும் பூசினிக் காய்போல
மஞ்சள் நிற உறுமாலைப்பார் — தலையில்
மஞ்சள் நிற உறுமாலைப்பார்
கட்டியிறுக்கிய சட்டையைப் பாரங்கே
கைகளில் அம்பொடு வில்லைப்பார் — இரு
கைகளில் அம்பொடு வில்லைப்பார் (3)

தொட்டு முறுக்காத மீசையைப்பார் — கறைச்
சோகிபோலே பெரும் பல்லைப்பார் — கறைச்
சோகிபோலே பெரும் பல்லைப்பார்
கட்டிய கச்சையில் விட்டுச் செருகிய
கட்டை உடைவாளின் தேசுபார் — ஆகா
கட்டை உடைவாளின் தேசுபார் (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்டிய வில்லுங் குறிவைத்த பாணமும்
　　பொல்லாத பார்வையுங் கண்டதோ — உன்றன்
　　பொல்லாத பார்வையுங் கண்டதோ
வாட்ட மில்லாப்பயிர் மேயவந்த பசு
　　வாலைக் கிளப்பிக்கொண் டோடுதே — வெடி
　　வாலைக் கிளப்பிக்கொண் டோடுதே (5)

கள்ளக் குணமுள்ள காக்கை உன்னைக்கண்டு
　　கத்திக் கத்திக் கரைந்தோடுமே — கூடிக்
　　கத்திக் கத்திக் கரைந்தோடுமே
நள்ளிரவில் வருகள்வனுனைக் கண்டு
　　நடுநடுங்கி மனம் வாடுமே — ஏங்கி
　　நடுநடுங்கி மனம் வாடுமே (6)

ஏழை கமக்காரன் வேளைக் குதவிசெய்
　　ஏவற்காரன் நீயே யென்னினும் — நல்ல
　　ஏவற்காரன் நீயே யென்னினும்
ஆளைப்போலப் போலி வேடக்காரன் நீயே
　　ஆவதறிந்தன னுண்மையே — போலி
　　ஆவதறிந்தன னுண்மையே (7)

தூரத்திலே யுனைக் கண்டவுட னஞ்சித்
　　துண்ணென் றிடித்ததென் நெஞ்சகம் — மிகத்
　　துண்ணென் றிடித்ததென் நெஞ்சகம்
சேரச்சேரப் போலி வேடக்காரனென்று
　　தெரிய வந்ததுன் வஞ்சகம் — நன்று
　　தெரிய வந்ததுன் வஞ்சகம் (8)

சிங்கத்தின் தோலினைப் போர்த்த கழுதைபோல்
　　தேசத்திலே பலர் உண்டுகாண் — இந்தப்
　　தேசத்திலே பலர் உண்டுகாண்
அங்கவர் தம்மைக்கண் டேமாந்து போகா
　　அறிவு படைத்தனன் இன்றுகாண் — உன்னில்
　　அறிவு படைத்தனன் இன்றுகாண் (9)

— சிறுவர் செந்தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. ஆறுமுகநாவலர்

ஆறுமுக நாவல னெனுஞ்சபாப் பிரசங்க
சிங்கமிங் கவதரித்த
தாருமறி வாரவன தறிவொழுக் கங்கல்வி
யறிகிலார் யாதுமறியார்
தேறுமுக மொன்றிலேற் கறிவுசிறி தருள்செய்த
தேசிகோத் தமனுமிவனே
செந்தமிழி னூலுரைக டந்ததிங் குரைசெயச்
சேடனுன் முடிவதாமோ
நீறுமுக முறுவித் தருங்கண்டி கைக்கலனி
னேயமிகு வித்தெங்கணு
நிகமாக மம்பூசை நிலைநிறீஇ விட்டதிவ
னிமலப்ர சங்கநிதியே
சாறுதனு மாதத்தி னிற்பத்து வீறவருள்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே. (1)

திருத்தொண்ட ரைச்சிவ மெனக்கொண் டவன்சைவ
சித்தாந்த சிகைகண்டவன்
சிவகாம சுந்தரி சபாநடே சன்பாத
சீர்த்திக ளெலாம் விண்டவன்
உருக்கொண்ட புண்ணியத் துயிரனுன் றன்பெய
ருருடியாக் கொண்டவுழவன்
னுயர்தாத் தருமகல் லூரிபல் லூரினு
மொழுங்குற நடாத்துத்தமன்
செருக்கொண்ட யேசுமத மேங்குபு திடுக்கிடத்
திறல்கொண் டடர்த்ததீரன்
றிவ்யசிவ பூசா துரந்தரன் சமயகுரு
சென்மசை வத்துறவிதீத்

தருக்குண்ட துர்ப்படா டோபநா வலரல்லர்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே (2)

— ஈழமண்டலசதகம்

வேதம்வலி குன்றியது மேதகுசி வாகம
விதங்கள் வலி குன்றி னவடற்
சூதன்மொழி மூவறுபு ராணம்வலி குன்றியது
சொல்லரிய சைவ சமயப்
போதம்வலி குன்றியது பொற்பொதிய மாமுனி
புகன்றமொழி குன்றி யதுநம்
நாதனிணை ஞாலமிசை நாடரிய ஆறுமுக
நாவல ரடைந்த பொழுதே

நல்லைநகர் ஆறுமுக நாவலர்பி றந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே — எல்லவரும்
ஏத்துபுரா ணுகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை

— சி. வை. தாமோதரம்பிள்ளை

அன்னநடை பிடியினடை யழகுநடை
யல்லவென வகற்றி யந்நாட்
பன்னுமுது புலவரிடஞ் செய்யுணடை
பயின்றதமிழ்ப் பாவை யாட்கு
வன்னநடை வழங்குநடை வசனநடை
யெனப்பயிற்றி வைத்த வாசான்
மன்னுமருள் நாவலன்றன் னழியாநல்
லொழுக்கநடை வாழி வாழி

— க. சோமசுந்தரப் புலவர்

MICROFILMED
Positive
Negative
Reel No. 1/059
Date: 24.09.91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MICROFILMED
Negative 1
Reel No. 1/059
Date 24.09.91

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Class No. 894·811.16

Acc. No. 150295

This book is returnable on or before the last date stamped below.

C.U.P.4547-5000-159

| | | | |
|---|---|---|---|
| 28. AUG. 1962 | | | |
| 13. MAR. 1963 | | | |
| 27. JUL. 1966 | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
11 MAY 1961
LIBRARY
Class No. 894·811-/6
50295
K.P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச். பிலோமினு அச்சகம்
102, பெரியதெரு
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org